# flex அருள்

டிசம்பர் 2017 கடவுளை வணங்குவோம் அருளினை பெறுவோம் விலை ரூ. 50

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

இதழ் 85




முகூர்த்தப் பட்டுப்புடைவைகளுக்கு
ராசியான ஒரே இடம்

JEYECHANDRANS
The Art of Fashion

No. 433, Galle Road, Wellawatte, Colombo 06
Tel: 011 4528438/5 Fax: 011 2362822
New Branch: 194, Main Street, Colombo 11
Tel: 011 2448870 Fax: 011 2448860
Web: www.jeyechandrans.com
Skype: jeyechandrans 888




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒவ்வொரு உள்ளங்களின் கனவும் ஒரு
அழகிய இல்லம் என்பது எமக்குத் தெரியும்...

15 வருடங்களாக அழகிய
சொகுசு தொடர்மாடி மனைகளை
நிர்மாணித்து உங்கள் கனவை
நனவாக்குவதில் அன்றும் இன்றும்
என்றும் உங்களோடு நாம்...

Span Tower
2003
Striving for Excellence

0777 415 662

Head Office: No. 48/38 1, Dharmarama Road, Colombo 06, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


07 எமது நோக்கம்

08-09 ஆன்மீகம்

10-11 மார்கழியும் தெய்வீக வழிபாடும்

12 ஸ்ரீ சாரதாதேவி

15 இந்து தர்ம சாஸ்திரம்

26- 27 இருளிலிருந்து..../ சங்கினுள்....

29 அருள் மொழிகள்

30-32 மானுடம் காக்க மனிதனாய்.....

33 தென்முகக் கடவுள்

34 சிரி...சிரி...சிரி.. சிரிப்பு

35 சுவாமி விவேகானந்தரின்.....

36 சித்தர் கலைகள்

37 ஷீர்டி சாய்பாபா

38-40 துணிவுக்கு துணை.../ யோகா....

42 பெண்கள் செய்ய வேண்டியதும்

43 கண்திருஷ்டி

44 இதயம் தொட்ட பழமொழிகள்

50-51 ஜாதகமும் திருமணப் பொருத்தங்களும்

52-54 தாம்பூலம்

55 வளமான வாழ்விற்கு ஃபெங் ஷுய்

56 சைவநெறி வினா விடை தொகுப்பு

57 திருக்குறள் தெளிவு

58-59 சிந்தனை புதிய.....

60-61 ஸ்ரீ சக்ரம்

62 தவறுகளை பெரியோர்கள்.....

66 வர்ணம் தீட்டுங்கள்

68 மன்னா ஹாஹ்... ஹா!

69 ஆண்கள் கடுக்கன்

70-72 பஞ்சாங்கம் / விரதங்கள்

75-78 ராசி பலன்கள்

81-85 பக்தி / நீதி கதைகள்

86 Flex அருள் தகவல்கள்





சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்




அற்புத ஆலயங்கள் - இந்தியா / இலங்கை




மகான் சைதன்யர்

"like" us on facebook
https://ww.facebook.com/flexarul

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















**WORLD TEL COMMUNICATION**

Net Calls, Local Calls, Postal works,
Stamps, Courier Service to all Country
Document Fast Parcel Service
Photo Copy & Printout

No : 298, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel : 0112 504 236

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எமது நோக்கம்

**"இந்து மதத்தின் பல அரிய தகவல்களை அறியத் தருவதே"**

ஆசைகளும் சந்தோஷங்களும் அவசியமானவைதான். ஆனால் வாழ்க்கையின் முழுமையான அர்த்தம் அதோடு முடிந்து விடுவதில்லை. உடல், மனம், அறிவு இவை மூன்றும் விலைமதிக்க முடியாத சொத்துக்கள். இவற்றை முழுமையாகப் பயன்படுத்தி வாழ்க்கையின் இலக்கை அடைய வேண்டும்.

"கடோபநிஷம்' மனித உடலை ஓர் அற்புதமான ரதத்தோடு ஒப்பிடுகிறது. அறிவு தான் அந்த ரதத்தை செலுத்தும் சாரதி. ஐம்புலன்களும் அந்த ரதத்தை இழுத்துச் செல்லும் ஐந்து குதிரைகள். அறிவு என்ற சாரதி இந்தப் புலன்களாகிய குதிரைகளைக் கட்டுப்படுத்தி பயணத்தை நடத்த வேண்டும். எங்கு செல்ல வேண்டும் அதற்கான வழி என்ன என்பதும் அந்த சாரதிக்கு தெரிந்திருக்க வேண்டும். உடலாகிய ரதம் நல்ல நிலையில் இல்லாமல் போனால் கூட அறிவு என்கிற சாரதி திறமைசாலியாக இருந்தால் வாழ்க்கைப் பாதையில் பிரச்சனை இல்லை. ஆனால் சாரதி சரியில்லை என்றால் நல்ல ரதம் கூட தடம் புரண்டு விடும்.

பணக்காரர் ஒருவர் இருந்தார் அவரின் வாலிப வயது மகன் அடிக்கடி நைட்கிளப்களில் போய் பெண்களோடு ஆடிக்கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது. மகனைக் கூப்பிட்டு பொறுமையாக அட்வைஸ் செய்தார். "அந்த மாதிரி இடங்களுக்குப் போகாதே அப்புறம் பார்க்கக் கூடாத காட்சிகளை எல்லாம் பார்க்க வேண்டியிருக்கும்." என்றார்.

மறுநாள் பையன் அவரிடம் வந்தான் "ஸாரி அப்பா உங்கள் அறிவுரையையும் கேட்காமல் நான் நேற்று கிளப்புக்கு போனேன். அங்கே நீங்கள் சொன்னது போல பார்க்கக் கூடாத காட்சியைப் பார்த்தேன்." என்றான். அப்பாவுக்கு கோபம் வந்தது "என்ன காட்சியைப் பார்த்தாய்" என உறுமலோடு கேட்டார்.

"முதல் வரிசையில் நீங்கள் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தேன்" என்றான் மகன் அமைதியாக.

சாரதி மட்டுமல்ல... வழிகாட்டியும் சரியாக இருக்க வேண்டும்.

கே. லோகேந்திரன்

\- ஆசிரியர்

நல்வழி அருள்வழி.. அதுவே நம்வழி!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆன்மீகம்

கருவாக்கி, உருவாக்கி எனையாண்டு காத்தருளும் இறைவா நன்றி. குரு அருளும், திருவருளும் அனைவருக்கும் கிட்டட்டும். இறைவனுக்கும் மனிதர்களுக்கு மிடையிலான உறவினை ஆன்மீகம் என்று கூறமுடியும். ஆன்மீகம் என்றால் நெருங்குவதல்ல விலகுவது. நான், எனது என்ற ஆணவத்திலிருந்து விலகுவது. இறைவனது உறவுகிடைப்பதற்கு இது அத்தியவசியமானது. இது ஆளுக்கு ஆள், இடத்திற்கு இடம், ஒருவரின் பின்னணியைப் பொறுத்து வேறு படக்கூடும். ஆன்மீகம் தழைப்பதற்கு நம்பிக்கை, நல்லுறவு, நற்பணி, நல்ல செய்திகளைப் பகிர்தல் போன்றவை அடிப்படையானவையாகும். எல்லாவற்றிற்கும் மேலாக அகத்தூய்மை என்பது மிகவும் முக்கியமானதாகும். புறத்தூய்மை மட்டுமல்ல உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்பதே எம்மை ஆன்மீகத்திற்கு இட்டுச்செல்லும்.

ஆன்மீகம் என்ற பதம் இறைவனுடன் பிணைக்கப்பட்டிருப்பினும், கலியுகத்தில் வியாபாரப் பொருளாகிவிட்ட நேரத்தில் உண்மையான ஆன்மீகம் எங்கே இருக்கின்றது என்ற வினா எழவேண்டிய தருணம் இன்றைய காலகட்டமே. இந்த பிரபஞ்சத்தில் இறைவனால் படைக்கப்படுகின்ற அனைத்து உயிர்களும் இறைவனுடன் இரண்டறக் கலந்த நிலையில் ஆன்மீக உணர்வுடனேயே ஜனன மெடுக்கின்றன. அதனால்தான் நாம் இன்றும் குழந்தைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்கின்றோம். குழந்தைகளைத் தெய்வங்களாக பாவனை செய்கின்றோம். ஆனால் பின்னர் ஆசை, பாசம் பந்தங்களுக்குள் கண்டுண்டு போட்டி, பொறாமை போன்ற தீயகுணங்களுக்குள் அகப்பட்டு பேரின்பமான ஆன்மீக உலகத்திலிருந்து விடுபட்டு பொருள் பற்றுள்ள நிலையற்ற சிற்றின்ப மாயைக்குள் அடியெடுத்து வைக்கின்றோம். மலையடிவாரத்தில் ஊற்றெடுக்கின்ற தூய்மையான நதி அது சென்று சேருகின்ற இடத்தைப் பொறுத்து குட்டையாக, குளமாக, ஏன் சாக்கடையாகவும் மாறுகின்றது. இது போன்றது தான் மானிடராகிய எமது வாழ்க்கையும். நாம் தேர்ந்தெடுக்கின்ற மார்க்கத்தினால் தான் எமது வாழ்க்கையும் நிர்ணயிக்கப்படுகின்றது.

எமது ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி ஆன்மீக உலகத்திற்குள் பிரவேசிக்க வேண்டியது மானிடரின் தலையாய கடமையாகும். ஏனெனில் மானிடப் பிறப்பு இறைவனால் எமக்குத் தரப்படுவது இறைவனடி சேருவதற்காகவே. எம்மில் பலர் இதனை உணர்வதே இல்லை. நிலையற்ற சிற்றின்பத்தைத் துய்ப்பதற்காகவே பிறப்பெடுத்தோம் என்பது போல் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து, மடிந்தும் விடுகின்றோம். ஒவ்வொரு பிறப்பிலும் பாவங்களைச் செய்து அந்தப் பாவங்களைப் போக்குவதற்காகவே மறு பிறவி எடுத்துக் கொண்டேயிருக்கின்றோம். அதற்காக பிறந்த உடனேயே துறவறம் பூண்டு இறைவனடி சேரவேண்டும் என்று எந்த மதமும் கூறவில்லை. துறவறம் பூண்டுதான் ஆன்மீகத்தில் ஈடுபடவேண்டும் என்ற எந்தக் கட்டாயமுமில்லை. இல்லறத்திலிருந்து கொண்டே ஆன்மீகத்தில் ஈடுபட முடியும். இறைவனிடம் சரணாகதியடைதலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான ஆன்மீகம். பிறவேறு சிந்தனைகளின்றி ஒருகணமேனும் தூய்மை யானபக்தியுடன் இறைவனைப் பிரார்த்தித்து உன்னையன்றி எனக்கு வேறுயாருமில்லை யென்று சதாசர்வகாலமும் இறைவனை நினைத்து எது செய்யப்பட்டாலும் அது இறைவனாலேயே செய்யப்படுகின்றது என்று எண்ணி அதன் பலன்களை இறைவனுக்கே சமர்ப்பித்து வாழ்ந்து வந்தால் அதுவும் ஒருவகை ஆன்மீகம்தான்.

கடமையைச் சரிவரச் செய்யுங்கள். தாயாக, தந்தையாக, சகோதரனாக, சகோதரியாக, கணவனாக, மனைவியாக, மகனாக, மகளாக ஒவ்வொரு கதாபாத்திரத்தின் கடமைகளையும் சரிவரச் செய்யுங்கள். இதுவும் ஆன்மீகத்திற்கு இட்டுச்செல்கின்ற முதல்படிதான். எமது கடமைகளைச் சரிவரச் செய்கையில் இறைவன் எம்மிடத்தில் நெருங்கிவருவார். ஆன்மீகத்திற்குள் எம்மை அழைத்துச் செல்வார். இறைவன் வேண்டுவதெல்லாம் எமது ஆன்மாவையே. தூய்மையான அன்பையே. தூய்மையானபக்தியையே. இறைவன் ஒருபோது எனக்கு பட்டாடை கொடு, ஆபரணம் அணிவி, அபிஷேகம் செய் என்றுகேட்பதில்லை. நாம் தான் இறைவனுடன் வியாபாரம் செய்கின்றோம். இதைத் தருவேன் அதனைச்செய்துதரவேண்டும் என்றுபேரம் பேசுகின்றோம். எமக்கு வேண்டியதை இறைவனிடம் பிரார்த்தித்தாலே அது எமக்குக் கிடைக்கும். தாம் செய்யும் தவறுகளுக்கு பிரயச்சித்தமாக உண்டியலில் பணம் போடுவோரும் எம்மிலுளர். வேடிக்கையான விஷயம் பணத்தைப் பெற்றுக்கொண்ட இறைவன் எம்மை மன்னித்துவிடுவார் அல்லது தண்டனையை வாபஸ் பெற்றுவிடுவாரென்பது எம்மவரின் அற்ப ஆசை. இறைவன் மனிதன் திருந்துவதற்கான வாய்ப்புக்களைக் கொடுத்து க்கொண்டேயிருப்பார். எடுத்த எடுப்பில் தண்டிப்பதில்லை. இறைவனின் தண்டனை பிற்போடப்படுமே தவிர தண்டனையிலிருந்து எவரும் தப்பிக்கவே முடியாது. தவறு செய்பவர்களுக்கு என்றோ ஒருநாள் தண்டனையுண்டு. அதற்காக வேறு பிறவி எடுத்துக்கொண்டிருக்கவேண்டும். ஆக தவறுசெய்வதிலிருந்து, பாவகாரியங்களில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருப்போம் அதுவும் நாம் ஆன்மீகத்திற்குள் செல்வதற்கான தகுதியாக விளங்கும்.

உண்மையான ஆன்மீகம் எங்கே இருக் கின்றது? தான் ஒரு ஆன்மீகவாதி என்பதை அடையாளப்படுத்தி ஆடை உடுத்தி, பிரத்தியோகமான அணிகலன்களை அணிந்து, தன்னை வீழ்ந்து வணங்குங்கள் என்கின்ற, தனக்கு பாதபூஜை செய்யுங்கள் என்கின்ற இடத்தில் ஆன்மீகம் இருக்கின்றதா? இல்லவேயில்லை. உண்மையான ஆன்மீகம் ஒருபோதும் ஆடம்பரத்தை விரும்புவதில்லை, விளம்பரத்தைத் தேடுவதுமில்லை. பணம் எங்கு பேசுகின்றதோ அங்கு ஆன்மீகம் இல்லை. அது வியாபாரம். இறைவனால் அளிக்கப்பட்ட தங்களிடமிருக்கின்ற தனித் துவமான, புனிதமான, விசேடசக்திகளைப் பயன்படுத்தி தன்னை நாடிவருபவர்களை கலங்காதே நான் இருக்கின்றேன் என்று கை தூக்கிவிடுகின்ற இடத்தில்தான் உண்மையான ஆன்மீகம் இருக்கின்றது. பிறர் மகிழ்வதைப் பார்த்து எந்த உள்ளம் மகிழ்ச்சியடைகின்றதோ அங்குதான் உண்மையான ஆன்மீகம் உள்ளது. பிறர் கலங்கும் போது எந்த உள்ளம் கலங்குகின்றதோ, பிறருக்காக எந்த உள்ளம் வேதனைப்படுகின்றதோ அங்குதான் ஆன்மீகம் குடிகொண்டிருக்கின்றது. பிறரின் தேவையைத் தன் தேவை போன்று நிறைவேற்றத் துடிக்கின்ற உள்ளத்திலிருந்துதான் உண்மை யான ஆன்மீகம் ஊற்றெடுக்கமுடியும்.

பிறருக்கு உதவி செய்யக் கற்றுக்கொள்வோம். எங்கு பார்ப்பினும் சுயநலம். அது கலியுகத்தின் கோலம். ஆறாவது அறிவினைப் பயன்படுத்தி காலத்தை வெல்ல முயற்சிப்போம். தனக்குப் பின் தான் தானமும் தருமமும் என்பார்கள். எம்மால் முடிந்த உதவியைச் செய்வோம். உதவி என்று கேட்டு வருபவர்களுக்கேனும் உதவி செய்ய முயற்சிப்போம். இறைவன் விரும்புவதும் அதுவே. படைத்த உயிர்கள் அனைத்தையும் காக்கவேண்டியது இறை வனின் கடமை. அந்தக் கடமையில் நாம் பங்குகொள்ளும் போது தனது வேலையை நாம் செய்கின்றோம் என்று இறைவன் நிச்சயம் மகிழ்ச்சியடைவார். அவரின் பார்வை எம்மை நோக்கித் திரும்பும். இதுவும் ஆன்மீகம்தான். மூன்று வேளை நீராடி, தூய்மையான ஆடை அணிந்து, விபூதி இட்டுக் கொண்டால் மட்டும் அது ஆன்மீகமாகாது. மந்திரங்களை, சுலோகங்களை உச்சரிப்பதனால் மட்டும்தான் இறைவன் அருள் கிட்டுமா? பிறருக்கு நல்லது செய்யுங்கள். பலனை எதிர்பாராது பிறருக்கு உதவி செய்தால் சரியானபாதையில் நாம் இறைவனை நெருங்கிக்கொண்டிருக்கின்றோம் என்று பொருள். இறைவன் அருட்பார்வை நிச்சயம் கிட்டும். எங்கள் வாழ்க்கையை இறைவன் இலகுவாக்குவார். உதவி செய்யாது விடினும் உபத்திரவம் செய்யாது இருப்பதும் பெரிய உதவிதான். அதையேனும் செய்ய முயற்சிப்போம். அன்பு மலரட்டும். ஆன்மீகம் மலரட்டும்.

*திருமதி.எஸ்.சுரேஸ்குமார்,தெஹிவளை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மார்கழியும், தெய்வீக வழிபாடும்!

மாதவனுக்குரிய மார்கழி மாதத்தில்! சைவர்கள் அனைவரும் அதிகாலை எழுந்து நீராடி வாசலை சுத்தம் செய்து வீட்டு முற்றத்தில் வண்ண வண்ண மாக்கோலங்கள் போடுவார்கள். கோலத்தில் மார்கழி பிள்ளையார் வைத்து புஷ்பங்கள் இட்டு; ஆலயம் சென்று இறைவனை வழிபடுவார்கள். இந்த மார்கழி மாதத்தில் அனைவரும் சுறுசுறுப்புடன் காணப்படுவதைக் காணமுடியும்.

இம்மார்கழி மாதத்தில் வரும் அனைத்து நாட்களும் விஷேடமானவை. அதிலும் பிள்ளையார், சிவன், விஷ்ணு, என தெய்வங்களின் விஷேட விரதங்கள் நிறைந்த மாதம் இம்மாதம். சுருங்கச் சொல்ல வேண்டு மெனில், மார்கழியில் மக்கள் எல்லோரும் ஒரு தெய்வீக பழக்க வழக்கங்களுடனும், ஆன்மீக உணர்வுடனும் காணப்படுவார்கள்.

திருபாற்கடல் கடையப்பட்டதும் முதலில் விஷம் எழுந்ததும், சிவன் அதனை உண்டு உலக மக்கள் அனைவரையும் காப்பாற்றியதும் மார்கழி மாதத்தில் தான்.

திருவெம்பாவை விரத காலத்தில் சைவர்கள் வீதி தோறும் திருவெம்பாவை, திருப்பள்ளி யெழுச்சி பாடல்களைப் பாடிக்கொண்டு ஒவ்வொரு பாடல் முடிவிலும் சங்கு ஊதிக் கொண்டு ஆலயங்களுக்குச் செல்வர்.

விஷ்ணு ஆலயங்களில் மார்கழி மாதம் முழுவதும் திருப்பாவை பாடுவர். சுப்ரபாதம் பாடுவதற்கு பதிலாக ஆண்டாளின் திருப்பாவை பாடுவார்கள். ஆண்டாள் நாள்தோறும் வைகறை எழுந்து நீராடி நாராயணனைப் பற்றி திருப்பாவை பாடி திருமணம் புரிந்ததும் மகிமை பொருந்திய மார்கழி மாதத்தில் தான்.

வைணவ தலங்களில் பக்தர்கள் ஆண்டாள் பாசுரங்களை பாராயணம் செய்வர். மார்கழி மாதத்து ஏகாதசி திதி அன்று வைகுண்ட ஏகாதசி என்கிற உற்சவம் நடைபெறும். 'காசியை மிஞ்சிய தீர்த்தமும் இல்லை: ஏகாதசிக்கு ஈடான விரதமுமில்லை' என்பது பெரியோர்களின் வாக்கு! விரதம் இருப்பவர்கள் ஏகாதசி அன்று உண்ணாமல் தேவைப்படும் போது மட்டும் துளசி தீர்கம் பருகி விரதம் இருக்கலாம். துவாதசியன்று (அடுத்த நாள்) சூரிய உதயத்திற்கு முன்பு பாரணை செய்ய வேண்டும்.

கைகுண்ட ஏகாதசி அன்று இரவு விழித்திருந்து பெருமாள் கோவில்களில் பரமபத வாசல் (சொர்க்க வாசல்) திறக்கப்படும் காட்சியை காணவேண்டும். தற்காலங்களில் உறங்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக திரைப் படங்களைப் பார்க்கும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. அது முற்றிலும் தவறானது. இறைவன் சம்பந்தப்பட்ட வேலைகளில் மட்டுமே ஈடுபடுதல் பலன் தரும். அதாவது ஆலயம் சென்று விழித்திருத்தல், பஜனை செய்தல், உபன்யாசம் கேட்டல் போன்றவை. அப்போது தான் விரத பலனும், விழித்திருந்த பலனும் கிட்டும்.

மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத் திரத்தன்று சகல சிவன் ஆலயங்களிலும் ஆதிரை நாள் உற்சவம் நடைபெறும். அதிலும் தில்லையிலே தில்லையம்பலத்தானை தரிசித்தலே கோடி புண்ணியம் பெருகும். சிதம்பரத்தில் நடைபெறுகின்ற ஆராதனை மிகவும் சிறப்புடையது. திருவாதிரை நாளன்று சிவ பக்தர்கள் யாவரும் சிதம்பரத்திற்கும், திரு உத்திர கோசமங்கைக்கும் மாணிக்கவாசகர் அவதரித்த திருவாதவூருக்கும் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதரிசனம் செய்வார்கள். இதனாலேயே சிவனை ஆதிரையன் என அழைப்பர்.

இம்மார்கழி மாதத்தில் வைகறையில் துயில் எழுந்து நீராடி அறம் பொருந்திய காரியங்கள் பலவற்றையும், ஆன்மீக உணர்வோடு செய்து உடலும், உள்ளமும் இயற்கையின் சேர்க்கையோடு தூய்மையும் பெற்று பலமும் பெருகும். எனவே ஆன்மீகப் புத்துணர்ச்சிக்கு மிகச் சிறந்த மாதம் மார்கழி மாதம். 'மாதங்களில் நான் மார்கழி' என கூறிய மாதவனின் இம்மாதத்தை பக்தி சிரத்தையோடு அனுஷ்டிப்போம்!



# மார்கழி மூலநட்சத்திர ஆஞ்சநேயர் வழிபாடு

மார்கழி மாதத்து மூலநட்சத்திரத்தோடு கூடிய அமாவாசை அன்று அஞ்சநேயர் ஜெயந்தி கொண்டாடப்படுகிறது. அஞ்சநேயர் ஜெயந்தி அன்று விரதம் மேற்கொண்டு மனவுறுதி, ஆற்றல், தைரியம் ஆகியவற்றை அருளுமாறு பிரார்த்தனை மேற்கொள்ளலாம்.

வாயுபுத்திரன் எனப்படும் அனுமனைக் கண்டால் காற்றில் கலக்கும் தூசுகள் போல துர்சக்திகள் பறந்து ஓடும் என்கிறது ராமாயணத்தின் ஒரு பகுதியான சுந்தரகாண்டம்.

ஶ்ரீராமநாம ஜெயம் பாராயணம் எங்கெல்லாம் நடைபெறுகிறதோ, அங்கே ஒரு காலியான மனைப் பலகைப் போட்டு வைப்பது வழக்கம். உபன்யாசத்தைக் கேட்க அனுமன் வருவார் என்பது ராமபக்தர்களின் நம்பிக்கை.

ஶ்ரீ ஆஞ்சநேயப் பெருமானை வழிபட:- வெற்றிலை மாலை சாத்தலாம், வடைமாலை சாத்தலாம், வெண்ணைக் காப்பு சாத்தலாம், செந்தூரக் காப்பு இட்டு வழிப்படலாம், வாலில் பொட்டிட்டு பிரார்த்தனை செய்யலாம்.

ஆஞ்சநேயரை வணங்கும் அடியவர்கள் 'ஶ்ரீ ராம ஜெயம்' கூறுவதன் மூலம் ஆஞ்சநேயரின் பேரருளை மிக எளிதாக பெறலாம். ஒரு முறை 'ராம' என்று சொன்னால் அது ஒரு சகஸ்திரநாமம் (1008) தடவைகள் சொன்ன திற்கு சமம், என்று சிவபெருமான் உத்தர பாகத்தில் கூறியிருக்கிறார்.

சிவ விஷ்ணுவின் ஐக்கியமே ராம நாமம். நாராயணனில் இருந்து 'ரா'வும், நமச்சிவாயவில் இருந்து வருகின்ற 'ம' வும் சேர்ந்த நாமமே ராம நாமம்.

ஆஞ்சநேயருக்கு விரதமிருந்து வர ஞானம், பலம், வீரம், பக்தி, சேவை, சாதனை, யோகம் என சகல வரங்களையும் பெறலாம்.

***திருமதி.பவானி பாலசுப்ரமணியம்***
***வெள்ளவத்தை***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சாரதாதேவி

பெண் கல்வியே மறுக்கப்பட்ட ஒரு காலக்கட்டத்தில், ஒரு பெண் துறவு வாழ்க்கை மேற்கொள்வதென்பது எவ்வளவு கடினமான விஷயம்! அத்தகைய சிந்தனை தோன்றி, அதில் ஈடுபட ஒரு பெண் முடிவெடுத்து, அதை செயல்படுத்தியும் காட்டினாரென்றால் அதற்கு எவ்வளவு மனவுறுதி வேண்டும்! தான் மட்டுமன்றி பலரும் ஆன்மிக உயர்வு பெற உழைத்தாரென்றால் எத்தனை கருணை உள்ளம்! பள்ளியில் பயிலாத ஒரு பெண், சீடர்களுக்கு உபதேசிக்கும் குருவாக விளங்கினாரென்றால் எத்தனை ஞானம்! இவையனைத்தின் ஒருருவாகத் திகழ்ந்தவர் தான் அன்னை சாரதாதேவி.

கொல்கத்தா அருகே ஜெயராம்பாடி என்னும் கிராமத்தில், ராமச்சந்திர முகர்ஜி-சியாமா சுந்தரிதேவி தம்பதிக்கு 22-12-1853-ல் முதல் குழந்தையாக பிறந்தவள் சாரதாதேவி. ராமகிருஷ்ணருக்கும் சாரதாதேவிக்கும் திருமணம் நடந்தபோது அவருக்கு வயது ஐந்து. திருமணத்துக்குப்பின் தாய்வீட்டில் வளர்ந்தாள் சாரதாதேவி. கணவர் ராமகிருஷ்ணர் ஆன்மீகத்தில் பெரும் நாட்டம்கொண்டு விரைவாக அதில் முன்னேறினார். அவரது ஞானப் பிரகாசத்தை சிலர் புரிந்துகொண்டாலும், பலர் அவரை பைத்தியக்காரன் என்றே பரிகசித்தனர். இதையறிந்த சாரதா தேவியார் கணவருக்கு பணிவிடை செய்ய வந்துசேர்ந்தார். அவருக்கு உதவியது மட்டுமன்றி, அவரைக் காணவரும் பக்தர்களுக்கு உணவு தயாரித்து படைப்பது போன்றவற்றையும் செய்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வழிக்காட்டுதலில் பல ஆன்மிக சாதனைகளிலும் ஈடுபட்டார். ராமகிருஷ்ணர் இவரை ஆதிசக்தியின் அம்சமாகவே பாவித்தார். ராமகிருஷ்ணர் சமாதியடைந்தபின், 1888- ல் கயாவுக்கு சென்றார் சாரதா தேவி. அங்குள்ள மடங்களில் சந்நியாசிகளுக்கிருந்த வசதிகளைக் கண்டார். ராமகிருஷ்ணரின் சீடர்கள் நிலையை ஒப்பிட்டுப் பார்த்து கண்ணீர்விட்டார். அவர் ராமகிருஷ்ணரை மானசீகமாக வணங்கி, "உங்கள் பெயரில் அனைத்தையும் துறந்த என் பிள்ளைகள் உணவுக்காக பிச்சையெடுப்பதை என்னால் சகித்துக்கொள்ளமுடியவில்லை. உங்களிடம் என் பிரார்த்தினை ஒன்றே ஒன்றுதான். உங்களது பெயரைச் சொல்லி துறவு மேற்கொள்பவர்களுக்கு சாதாரண உணவும் உடையும் கிடைக்க வேண்டும். உங்களது உபதேசங்களையும் லட்சியங்களையும் மையமாகக்கொண்டு, அவர்கள் ஒரே இடத்தில் கூடி வசிக்கவேண்டும். உலக வாழ்க்கையில் துன்புறும் மக்கள், அவர்களிடம் சென்று உங்கள் அமுதமொழிகளைக்கேட்டு ஆறுதல் பெறவேண்டும். அதற்காக அல்லவா நீங்கள் அவதாரமெடுத்து வந்தீர். உங்கள் சீடர்கள் அலைந்து திரிவதைக் காண என்னால் முடியவில்லை" என்று மனமுறுகிப் பிராத்தித்தார். அதன் விளைவாகத் தோன்றியதே ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கம். அதனாலேயே விவேகானந்தர் சாரதா தேவியாரை 'சங்க தலைவி' என்று குறிப்பிட்டார். அதாவது இயக்கத்தை தோற்றுவித்தவர் என்று பொருள்.

அன்னை சாரதா தேவி 20-7-1920-ல் இவ்வுலக வாழ்விலிருந்து விடுபட்டார். அதற்கு முன் கடைசியாக அவர் கூறிய வார்த்தைகள்: யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ- யாரெல்லாம் வரவில்லையோ- இனி யாரெல்லாம் வருவார்களோ, அவர்களுக்கெல்லாம் என் அன்பைத் தெரிவித்துவிடு. என் ஆசிகள் அவர்களுக்கு எப்போதும் உண்டு.

இன்று சாரதாதேவியின் பெயரால் அமைந்த பீடங்கள், தட்சிணேஸ்வரத்தை தலைமை இடமாகக்கொண்டு இந்தியாவெங்கும் பரந்துள்ளன. அன்னையின் உபதேசங்களைப் பின்பற்றி, பெண் கல்வி, பெண்களின் ஆன்மீக முன்னேற்றம் உள்ளிட்ட பல லட்சியங்களை அந்த மடங்கள் முன்னெடுத்துச் செல்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# PRASANNA

## MONEY EXCHANGE (PVT) LTD





No. 57, Galle Road, Colombo 06.

**Tel : 2 591 420, 2 591 421**

**Mobile: 077 948 4211 / 077 406 5484**

Fax : 2 504108

Email : prasannaexchange@gmail.com

Money changer Permit No. ECD/MC/0058 A

***Parking Available***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்ம சாஸ்திரம்

மாயையானது மிகவும் சக்தி வாய்ந்தது. அந்தச் சக்தியானது நம்முடைய சுய தன்மையை அறிந்து கொள்ளாமற் செய்து விடுகிறது. அப்படி அறிந்து கொள்ளாமலிருப்பதுதான் அஞ்ஞானம் - இருட்டு. அதைப் போக்க, அதாவது நமது சுய தன்மையை அறிந்து கொள்ள ஞானதீபம் உதவுகிறது. ஆதலின் நாமெல்லோரும் இந்த ஞான தீபத்தை ஏந்திக்கொண்டிருக்கும் பரப்ரஹ்மத்தை நோக்கி “தமஸோமா ஜோதி ரம்ய” இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு அழைத்துக் கொண்டு போ. என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். அது தர்மம்.

எழுந்ததிலிருந்து படுக்கப் போகும் வரை நாம் செய்கிற பலவிதமான காரியங்களையும் இறைவனின் திசையில் திருப்புவோமாக. நம் இதயத்தில் சாந்தி காண இதுவே வழி. நாம் பேசுகிற பேச்செல்லாம் பகவத்விஷயமாக்குவோம். நம்முடைய பேச்சு அனைத்தும் ஐம்பத்தியொரு அட்சரங்களில் அடங்கும். பராசக்தியான பரதேவதை இந்த அட்சரங்களின் ஸ்வரூபமாவாள். எனவே நம் பேச்சு எல்லாம் அவள் விஷயமாகவே ஆக வேண்டும்.

சமயங்களின் கொள்கைகள் வேறுபடலாம். அவைகள் ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றலாம் ஆனால் சமய மனப்பான்மை அவைகளுக்கெல்லாம் ஒன்றுதான். கொள்கைகள் நம்மை பிரிக்கலாம். ஆனால் பக்தி நம்மை ஒன்று சேர்க்கும். நாமெல்லாம் ஒரே கடவுளின் குழந்தைகளே!

நமது உள்ளம் கண்ணாடி போன்றது. அதில் இறைவனுடைய பிரதிபிம்பம் தெரிய வேண்டும் என்றால் பக்தி, தூய்மை, ஒழுக்கம் என்ற ரசம் பின்பக்கம் பூசப்பட வேண்டும். அப்பொழுதான் இறைவனைக் காணலாம். கஷ்டம் வரும் காலத்தில் மட்டும் இறைவனைத் தொழுவது சரியாகாது.

மத அடிப்படையில் வெளிப்படையாகச் செய்யும் காரியங்கள் எல்லாம், ஆத்ம சுத்திக்கு ஒருவனை அழைத்துச் செல்வதாகும். வாழ்க்கையில் மனிதன் உயர்மட்டத்தை அடைய வழி கூறுகின்றன. எங்கும் ஒரே பரமாத்மாவைக் காணும் நிலை கடைசியில் கிடைக்கும். உன் கடன் பணி செய்து கிடப்பதே ஆகும்.

தர்மம் எது, அதர்மம் எது என்பதை, மனிதர்கள் வகுக்கும் சட்டதிட்டங்களைக் கொண்டு நாம் நிர்ணயிக்கக் கூடாது. இதுபற்றி சாஸ்திரங்கள் என்ன சொல்லியிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டு அதன்படி அனுசரிக்க வேண்டும். செய்யத் தகுந்தது எது. செய்யத் தகாதது எது என்பதை நிச்சயிக்க சாஸ்திரமே நமக்கு பிரமாணமாகும். சாஸ்திரம் ஆக்ஞாபித்திருப்பதை அறிந்து தர்மத்தைச் செய்யக்கடவாய்.

*தொடரும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

## (ஆன்மிக ஐயம்)





### ஐயப்ப சாமிக்கு தேவையான பொருட்கள் எவை?

ஜோல்னா பையில் எடுத்துச் செல்ல வேண்டியவை: திருநீறு, சந்தனம், குங்குமம், கற்பூரம், சாம்பிராணி, தீப்பெட்டி, திருவிளக்கு, திரி, நூல், நெய், உடை, துண்டு, ரெயின்கோட், ஸ்வெட்டர், மப்ளர், கம்பளம் அல்லது பெட்ஷீட், டூத் பேஸ்ட், பிரஷ், மெழுகுவர்த்தி, கத்திரிக்கோல், டம்ளர், தண்ணீர் பாட்டில், டார்ச்லைட்.

### இருமுடி பொருட்கள் எவை?



(முன்முடியில் வைக்க வேண்டிய பொருட்கள்

1. மஞ்சள் பொடி 100 கிராம் (மலைநடை பகவதி, மஞ்ச மாதாவுக்காக)
2. சந்தன பாக்கெட்
3. குங்கும பாக்கெட்
4. நெய் தேங்காய் 1
5. சுத்தமான பசு நெய்
6. விடலைத் தேங்காய் 4 (எரிமேல், சபரிபீடம், சரங்குத்தி, பதினெட்டாம்படி ஆழி)
7. சிறிய பன்னீர் பாட்டில்
8. கற்பூர பாக்கெட்
9. பச்சரிசி

பின் முடியில் சமையல் பொருட்கள் எடுத்துச் செல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை அணியும் போது சொல்லும் மந்திரம் என்ன?



ஞானமுத்ராம் சாஸ்த்ரு முத்ராம் குருமுத்ராம் நமாம் யஹம்
வனமுத்ராம் சுக்த முத்ராம் ருத்ர முத்ராம் நமாம் யஹம்
சாந்தமுத்ராம் சத்தியமுத்ராம் வ்ருதுமுத்ராம் நமாம் யஹம்
சபர்யாஸ்ரம சத்யேன முத்ராம் பாது ஸதாபிமே
குருதக்ஷிணயா பூர்வம் தஸ்யா நுக்ரஹ காரிணே
சரணாகத முத்ராக்யம் த்வன் முத்ராம் தாரயா.

## கன்னிபூஜைக்கு நல்ல நாள் எது?



சபரிமலைக்கு முதன்முறையாகச் செல்லும் ஐயப்ப பக்தர்கள் நடத்துவது கன்னிபூஜை. இதனை வெள்ளக்குடி, படுக்கை, ஆழிபூஜை என்றும் சொல்வர். கார்த்திகை முதல்நாளில் இருந்து, மார்கழி 11ம் தேதிக்குள் வீட்டில் இச்சடங்கை நடத்துவதற்கு நாள் குறித்து விட வேண்டும். பந்தலிட்டு, அதன் நடுப்பகுதியில் மண்டபம் அமைக்க வேண்டும். மண்டபத்தின் நடுவில் ஐயப்பன் படம் வைத்து, சுற்றிலும் கணபதி, மாளிகைப் புறத்தம்மன், கருப்பசுவாமி, கடுத்தசுவாமி, வாபர், ஆழி ஆகியவற்றிற்கு உரிய இடங்களை ஒதுக்கி விளக்கேற்ற வேண்டும். எல்லா தெய்வங்களுக்கும் அவல், பொரி, பழம், வெற்றிலை, பாக்கு, கலந்த சாதம் படைத்து பூஜை செய்ய வேண்டும்.

## குருசாமியாகும் தகுதி எவை?

சபரிமலைக்கு 18 முறைக்கு மேல் சென்று வந்தவர்களை குருசாமி என்பர். 18 ஆண்டுகள் மகரவிளக்கு அல்லது மண்டல பூஜைக்கு இருமுடி கட்டி, 41 நாள் முதல் 60 நாள் வரை விரதமிருந்து, சென்று வருபவர்களே குருசாமி ஆகமுடியம்.

இவர்கள் தங்கள் கையால் மற்ற ஐயப்பன்மார்களுக்கு மாலை அணிவிக்கலாம். சபரிமலை சீசன் இல்லாத நாட்களிலும், ஐயப்பனுக்கு பூஜை செய்து வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரஜோதியின் தத்துவம் என்ன?



மனிதன் தோன்றிய காலத்தில் கடவுளுக்கு சிலைகள் இல்லை. ஒளியையே தெய்வமாக வழிபட்டுள்ளான். ஜோதி வடிவில் இறைவனைக் கண்டான். அதனால் தான் வள்ளலார் இறைவனை 'அருட்பெருஞ்ஜோதி' என அழைத்தார்.

இறைவன் திருவண்ணாமலையில் ஜோதியாய் காட்சி அளிக்கிறார். திருக்கார்த்திகை அன்று தீபம் ஏற்றப்படுகிறது. இதேபோல் தான் ஐயப்பசுவாமியும் ஜோதி வடிவாக, பொன்னம்பல மேட்டில் மகரசாந்தியன்று (மார்கழி கடைசி நாள் அல்லது தை முதல் நாள்) காட்சி தருகிறார்.

# 18 படிகள் சொல்லும் தத்துவம் என்ன?



குறிக்கோள் போல, அதை அடையும் வழியும் சரியாக இருக்க வேண்டும் என்பதை 18 படிகள் உணர்த்துகின்றன.

மெய், வாய், கண், காது, மூக்கு ஆகிய ஐம்புலன்களை குறிப்பது முதல் ஐந்து படிகள். ஆறு முதல் பதிமூன்று வரை எட்டுவித ஆசைகளான மண், பெண், பொன், புகழ், பணம், பதவி, உடல் சுகம், தகுதிக்கு மீறிய எண்ணம் ஆகியவை. பதினான்கு முதல் பதினாறு வரையுள்ள படிகள் முக்குணங்களை அதாவது சாந்தம், வீரம், சோம்பல். பதினேழாம் படி அறியாமை, பதினெட்டாம் படி அறிவைக் குறிக்கும். இக்குணங்களை கடந்த மனிதன் கடவுள் நிலைக்கு உயர்கிறான். இதை உணர்த்தும் விதமாக 'தத்வமஸி' (நீயே கடவுள்) என்ற வேத வாக்கியம் இங்கு இடம்பெற்றுள்ளது.

# நெய் தேங்காய் ஏன்?



சபரிமலை ஐயப்பன் தனது 12வது வயதில் மனித வாழ்வை துறந்து சபரிமலையில் ஐக்கியமானார். அவரைக் காண வளர்ப்புத் தந்தை பந்தள மன்னர் அடிக்கடி செல்வார். அப்போது தின் பண்டங்கள் கொண்டு செல்வார். மலைப்பாதையில் நீண்ட நாள் செல்ல வேண்டும் என்பதால் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக நெய்ப்பண்டம் கொண்டு செல்வார். பிற்காலத்தில் ஐயப்பனுக்கு நெய் தேங்காய் கொண்டு செல்லும் பழக்கம் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Sarees | Shalwars | Lehengas | Kurthas

429, Galle Road, Wellawatte. ☎ 011 2055 776 (Opposite Arpico)

Dehiwala Branch Western Wear 98, Galle Road, Dehiwala. T: 011 2716170 Women's Wear • Kid's Wear • Men's Wear

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your **Health** is **Reflected** in Your **Smile**



# Chandrika's Dental Care

***Multi Speciality Dental Clinic***

**THE LATEST MODERN DENTAL EQUIPMENTS SPECIALTY IMPORTED WITH X-RAY FACILITY**



- Implants
- Painless Extractions
- Impactions
- Scaling & Polishing
- Tooth Coloured Fillings
- Tooth Whitening
- Root Canal Treatments
- Crown & Bridges
- Dentures
- Orthodontic Treatments (Braces)
- Gum Treatments
- Pedodontic Treatments (For Children)







**Moderate Charges**
**Personal Attention**

40A, Galle Road, Wellawatte, Colombo 06.
Please call for Prior Appointments: 011 2502500 / 011 2502644

## Working Days

**Monday to Saturday & Poyadays**
9.00 am to 8.30 p.m
**Sunday - 9.00 a.m to 1.30 p.m**
( by Appointments)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொன்விளை பராங்குசபுரம்

# தர்ப்பசயன ராமர் கோவில்

செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் செல்லும் பாதையில் எட்டு கி.மீ. தூரத்திலுள்ள ஒத்திவாக்கம் ரயில் நிலையத்திற்கு அருகே பொன்விளை பாராங்குசபுரம் என்ற பகுதி உள்ளது. அவ்வூரில் இரண்டு பெருமாள் கோவில்கள் அமைந்துள்ளன. அவை லட்சுமி நரஸிம்மர் திருக்கோவிலும் தர்ப்ப சயன ராமர் கோவிலுமாகும். இரண்டுமே அருகருகே அமைந்துள்ளன.

வட திருப்புல்லாணி என்றழைக்கப்படும் ராமர் கோவிலில் தர்ப்பசயனபாம (சேதுக்கரை திருப்புல்லாணியில் அமைந்துள்ளது போல்) பள்ளி கொண்ட கோலத்தில் ராமர் மூலவராகக் காட்சியளிக்க, அருகில் இலக்குவன் கைகட்டி நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். திருவடி அருகில் ஆஞ்சநேய மூர்த்தியும் சமுத்திரராஜனும் காட்சியளிக்கின்றார்கள். தர்ப்பசயன காலத்தில் சீதை இலங்கைச் சிறையில் இருந்தமையால் மூலவர் ராமரின் அருகில் சீதாபிராட்டி இல்லை. சுமார் 700 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோவில் இது. ஸ்ரீ தூப்புல் நிகமாந்த தேசிகன் தேச யாத்திரையாக திருவஹீந்திரபுரம் செல்லும் வழியில் ஒரு நாள் தங்கியிருந்த தலம் இது. ஸ்ரீ தேசிகன் தன் ஆராத்ய தேவதையான ஸ்ரீ ஹயக்ரீவரை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வருகையில், இந்தக் கிராமத்தில் ஒரு கடலை வியாபாரியின் வீட்டில் தங்கியிருந்தார்.

அப்போது பெருமாள் நிவேதனத்திற்கு ஏதும் கிடைக்காததால் சுத்த தீர்த்தத்தை நிவேதனம் செய்து தானும் பருகி உறங்கச் சென்றார். நடு இரவில் வியாபாரி ஏதோ சத்தம் கேட்டு கண் விழித்துப் பார்த்த போது, ஒரு அழகிய வெள்ளைக் குதிரை அங்கிருந்த கடலையை மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். காலையில் கண் விழித்த தேசிகரிடம் வியாபாரி தன் கடலையை குதிரை மேய்ந்ததைப் பற்றிக் கூற, வியப்புற்ற ஸ்ரீ தேசிகன் தன்னிடம் குதிரை எதுவும் வரவில்லை என்றும்; எதற்கும் மேய்ந்த இடத்தைப் போய் பார்ப்போம் என்றும் சொல்லி அங்கு போய் பார்க்க, அந்தக் குதிரை வாய் வைத்துச் சாப்பிட்ட இடங்களில் எல்லாம் பொன்மணிகள் உதிர்ந்திருப்பதைக் கண்டார். உடனே அது ஹயக்ரீவரின் செயல் என அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து அதை வியாபாரிக்கு தெளிவு படுத்திவிட்டு தன் பிரயாணத்தைத் தொடர்ந்தார். அது முதல் அந்த கிராமம் பொன் உதிர்ந்த களத்தூர் என்று பெயர் பெற்று, பின் அது மருவி பொன்விளைந்த களத்தூர் என ஆகி யிருக்கலாம் என்பது செவிவழி வரலாறு. இதை ருசுப்படுத்தும் வகையில் இந்தப் பொன் நெல்மணிகளைத் தூற்றியபோது அதிலுள்ள பதர்கள் கிழக்கே 2 கி.மீ. தொலைவில் போய் விழுந்த இடம் பொன் பதர்கூட்டம் என்றும் வழங்கி வருகிறது. இதை தற்சமயம் ஸ்ரீ பரகால மடாதிபதியான ப்ரம்மதந்த்ர ஸ்வாமியும், பரனூர் ஸ்ரீ கிருஷ்ண பிரேமி ஸ்வாமியும் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்தக் கிராமம் தெய்வ சாந்நித்யத்தை மட்டுமல்லாமல், தமிழையும் செம்மையாக வளர்த்து வந்தி ருக்கிறது. படிக்காசுப் புலவர், அந்தகக்கவி வீர ராகவ முதலியார், கவியரசு கம்பன் காலத்தவரான புகழேந்திப் புலவர் ஆகியோர் பிறந்த புண்ணிய பூமியும் ஆகும் இது. ஸ்ரீ வைஷ்ணவ வடகலை சித்தாந்தத்தைப் பெரிதும் விரிவுபடுத்தியவரான ஸ்ரீமத் ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் ஸ்தாபித்த அஹோபில மடத்தில், ஆறாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீஷஷ்ட பராங்குச மஹா தேசிகன் ஸ்தாபித்த ஆறு அக்ரஹாரங்களில் இதுவும் ஒன்று. அவர் பெயரால் இந்த அக்ரஹாரம் பாராங்குசபுர அக்ரஹாரம் என்று பெயர் பெற்றது. கோவில் வழிமுறைகளும் ஸ்ரீ அஹோபில மட முறைப்படி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

உற்சவ மூர்த்தியான ராமரின் திருவுருவம் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவர் இலக்குவன் மற்றும் சீதாபிராட்டியுடன் காட்சி யளிக்கிறார். உற்சவர் ராமர் வடிவத்தின் சிரஸில் 'ஸேதுராமர்' என்று பொறிக் கப்பட்டுள்ளது. மேலும் திருவடியில் 'விபீஷண சேதுராமர்' என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. மண்ணில் புதையுண்டு கிடந்த இவர் தான் இருக்குமிடத்தைப் பக்தர்களுக்குக் காட்டி யதாகவும், சிரசு, திருவடிகளில் சேதுராமர் என்று குறிப்பிடப்பட்டிருப்பதாலும் இவரை தர்ப்பசயன ராமரின் உற்சவராகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு, கோவிலும் தர்ப்பசயன ராமர் கோவில் அல்லது கோதண்டராமர் கோவில் என்றழைக்கப்படலாயிற்று.

பிரதான கோவிலான கோதண்டராமர் ஆலயத்தில் முதலில் நாம் சந்நிதி கருடனை வணங்கிச் சென்றால், பிராகாரத்தில் சுதர்ஸன நரஸிம்ம மூர்த்தியின் சந்நிதி அமைந்துள்ளது. மூலவர் பட்டாபிராமர் சந்நிதியில், ராமர் தன் இடது மடியில் சீதை அமர்ந்த நிலையில் காட்சியளிக்க, வலதுபுறத்தில் இலக்குவன் நின்ற கோலத்தில் காடசியளிக்கிறார். அனுமனின் திருவுருவமும் அமைந்துள்ளது.

ராமர் சந்நிதிக்கு முன்பாக கம்பீரமான மூலவராக அபய வரத ஸ்ரீனிவாசரும் உற்சவர்களான ஸ்ரீனிவாசரும், சதுர்புஜ வேணுகோபாலனும், சக்கரத்தாழ்வாரும் காட்சியளிக்கின்றனர். இப் பெருமான்கள் அருகில் உள்ள எடையூர் கிராமத்தில் பூமியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு, இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டவர்கள். மாதா மாதம் திருவோண நன்னாளில் சிறப்பு வழிபாடுகள் நடக்கின்றன.

அபய வரத ஸ்ரீநிவாசர் சந்நிதிக்கருகில் ஆழ்வார்கள் எழுந்தருளியுள்ளனர். எதிர்ப்புறச் சந்நிதியில் அருள்மிகு பத்மாவதித்தாயார் சந்நிதி அமைந்துள்ளது. இத்திருக்கோவிலில் அவ்வப்போது திருவிழாக்கள் நடந்து வருகின்றன. கிராமியச் சூழ்நிலையில் அமைந்திருக்கும் இக்கோவிலுக்குச் சென்றால் உடலுக்கும் உள்ளத்திற்கும் அமைதி ஏற்படும் என்பதை யாராலும் மறுக்க முடியாது. மலையதனால் அணை கட்டி மதில் இலங்கை அழித்தவன் கோவிலுக்குச் சென்று மன அமைதி பெருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடலி அம்மன் மயிலணி, சுண்ணாகம்

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வீதியூடாக மல்லாகம் செல்லும் வீதியில் சுண்ணாகம் சந்தி தாண்டியவுடன் வரும் மயிலணி வீதியில் அமைந்துள்ளது இவ்வாலயம். தோன்றிய காலம் தெரியவில்லை. அவ்வூர் மக்கள் கிட்டத்தட்ட 300 ஆண்டுகள் பழமை வாய்ந்தது எனக் கூறுவார்கள். இக்கோவில் அம்பாள் சுயம்பு மூர்த்தமாகவே உருவானதாகவும் கூறுவர்.

பைரவி, மூத்தவி, சீனியர் ஆகியோருக்கு அம்பாள் கனவில் தோன்றி வடலி மரங்களுக்குள் உள்ள ஒதுகை மரத்தடியில்தான் இருப்பதாகவும் தன்னை ஆதரித்து வழிபடுங்கள் என்று கூறியதற்கிணங்க அவர்கள் சென்று பார்த்த பொழுது வடலிகளின் நடுவே பாரிய ஒதிகை மரத்தினடியில் ஒரு கல் தென்பட்டது. அவர்கள் அவ்விடத்தை துப்பரவு செய்து பார்த்தபொழுது அம்மன் விக்கிரகம் தென்பட, அங்கு ஒரு சிறு பந்தல் அமைத்து விளக்கேற்றி வழிபட்டனர். இதைக் கேள்வியுற்ற ஊர் மக்கள் பலரும் வந்து படையல் வைத்து வழிபடத் தொடங்கினர். இவ்வாலயம் பனை வடலிகளின் நடுவே அமைந்ததால் இதனை வடலி அம்மன் என்ற அழைத்தனர். இத்திருக் கோவிலுக்கு அண்மையில் திருக்குடவாயில் விசாலாட்சியுடனுறை ஸ்ரீ விஸ்வநாதசுவாமி, வள்ளி, தெய்வானை அம்மாள், சமேத கந்தசாமி, சர்வமங்கள ராஜராஜேஸ்வரி அம்மன் பைரவர் கோவில் ஆகிய கோவில்கள் அமைந்துள்ளன. சுண்ணாகம் குமாரசுவாமிப் புலவருடைய இல்லமும் இக்கோவிலுக்கு முன் உள்ளது.

சில தசாப்தங்களுக்கு முன் கதிர்காமர் என்பவர் சிறிய ஆலயமிருந்த வடலிப் பகுதிக் கூடாக அன்னையை வணங்கி வௌவால் கோட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டைக்குச் செல்வார். ஒருநாள் மது போதையில் இருந்தமையினால் அன்னையை வணங்காமல் சென்றதுடன் அவரது நண்பர்கள் எடுத்துக் கூறியும், கெட்டவார்த்தைகளால் அனனையை. ஏசி விட்டு சென்றார். அங்கு அவரது துப்பாக்கி இயங்க மறுத்ததுடன் தூக்கிய கை அப்படியே நின்றுவிட்டது. தான் அன்னையைத் துதிக்காமல் தூசனை செய்ததை நினைத்து, ஆலயத்திற்குச் சென்று நண்பர்கள் மூலம் தேங்காய் உடைத்து கற்பூரமேற்றி வழி பட்டவுடன் அவரது கை பழைய நிலைக்குத் திரும்பியது. இதன் பின் அன்னையை பயபக்தியுடன் வணங்கிவந்ததாகவும் கதிர்காமரே கூறியதாக வயது வந்த முதியவர் ஒருவர் கூறியதாக அறியக்கிடக்கின்றது. இதுபோல் அன்னையின் அற்புதங்கள் பல. இவ்வண்ணம் ஆலயத்தில் பக்தர்கள் கூட்டம் கூடியதால் சிறு கோவில் ஒன்று அம்மனுக்கு அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அடியவர்கள் மனதில் தோன்றி அதை நிறைவேற்றியும் விட்டார்கள். புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களிலும் தைப்பொங்கல், வருடப்பிறப்பு முதலான விஷேட தினங்களிலும் பூஜை வழிபாடுகள் நடைபெற்று வந்தன. அத்துடன் அக்காலங்களில் மஹேஸ்வர பூஜையும் நடைபெற்றது. ஆரம்பத்தில் கந்தசாமி, முத்தையா என்போர் பூஜை செய்துள்ளார்கள். விஷேட தினங்களில் மாத்திரம் அந்தண சிவாச்சாரியாரால் பூஜைகள் செய்யப்பட்டன. இந்த நிலையில் அம்பிகையை வணங்க வரும் அடியார்களின் தொகை பெருகியதால், இடப்பற்றாக் குறை ஏற்பட்ட மூலஸ்தானத்தின் முன்பாக ஒரு கொட்டகை அமைக்கப்பட்டது.

1993ம் ஆண்டு அம்பிகையின் அடியார்கள் ஒன்று சேர்ந்து நிர்வாக சபை ஒன்றினை அமைத்தார்கள். இந்நிர்வாகசபை பதவியினை ஏற்றதைத் தொடர்ந்து ஆலய வளர்ச்சியில் ஒரு புதிய பரிமாணமாக நித்திய பூஜை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான ஒரு அந்தணச் சிவாச்சாரியார் நியமிக்கப்பட்டார். அவர் சில மாதங்களில் தனது சொந்த விருப்பின் பேரில் விலகியதைத் தொடர்ந்து மயிலணியைச் சார்ந்த சிவஸ்ரீ சிவ. நாகேஸ்வரக் குருக்கள் பூசைகளை நடாத்தி வருகின்றார்கள். இக்காலத்திலும் இடப்பற்றாக்குறை காரணமாக ஆலயத்திற்கு அருகில் உள்ள காணியின் உரிமையாளரான திரு. மயில்வாகனம் குமாரசாமி என்பவரிடமிருந்து காணியைக் கொள்வனவு செய்து ஆகம விதிப்படி கோவில் அமைத்துள்ளார்கள். அருட்கவி விநாசித்தம்பி அவர்களினால் நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் 03.09.1998ல் நாட்டப்பட்டது. அம்பிகையின் அருளால் கோவில் கட்டி முடிக்கப்பட்டு 12.09.1999ல் கும்பாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை அத்த நட்சத்திரத்தில் சிவஸ்ரீ ச.வரதராஜேஸ்வரக் குருக்கள் அவர்களால் நாட்டப்பட்டது. 45 நாட்கள் மண்டலாபிஷேகமும், மண்டலாபிஷேக பூர்த்தி நாளில் சங்காபிஷேகமும் நடைபெற்றன. முதல் கும்பாபிஷேகம் தை மாத ரோகிணி நட்சத்திரத்தன்று 19-01-1987ல் நடைப்பெற்றதாக அறியக்கிடக்கின்றது.

உற்சவ காலங்களில் அம்பிகை வீற்றிருந்து அருள்பாலிப்பதற்கென வசந்த மண்டபமும், உள்வீதி, தெற்கு மண்டபமும், யாகசாலை, வாகனசாலை, களஞ்சியசாலை என்பனவும் வெளிநாடுகளில் வதியும் பக்தர்களின் நிதியுதவியினால் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் மணிக்கோபுரமும், கோபுரவாசல் மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அம்பிகை உள்வீதி, வெளிவீதி என இரு வீதிகளிலும் வலம் வருவதற்கு மேற்கு வீதி பற்றாக்குறையாக இருந்த காரணத்தினால் ஆலயத்தின் மேற்கேயுள்ள வீட்டின் உரிமையாளர் காணி வழங்கியமையினால் 2007ம் ஆண்டு தைப்பொங்கல் முதல் அன்னை இரு வீதிகளிலும் வரம் வந்து அருள் பாலிக்கின்றாள்.

நித்திய பூசைகளாக காலை மாலை என இருநேரப் பூஜைகள் நடைப்பெறுகின்றன. அலங்கார உற்சவமாக ஆவணி மாத அத்த நட்சத்திரத்தை அந்தமாகக் கொண்டு 11 தினங்கள் கோலாகலமாக நடைபெறுகின்றன. பூர்த்தி தினத்தன்று சங்காபிஷேகம் நடைபெறும். விஷேட நாட்களாக தைப் பொங்கல், தை ரோகிணி (முதலாவது கும்பாபிஷேக தினம்), தைப்பூசம், மாசிமகம், பங்குனித் திங்கள், பங்குனி உத்தரம், வருடப்பிறப்பு, சித்திராபூரணை, வைகாசி விசாகம், ஆடிப்பூரம், பாற்குடபவனி, ருதுசாந்தி, நவராத்திரி, கார்த்திகை, சர்வாலயதீபம், திருவெம்பாவை, என்பன நடைபெறும்.

மூலஸ்தான விக்கிரகமாக முத்துமாரி அம்பாளும் எழுந்தருளி விக்கிரகங்களாக முத்துமாரி அம்பாள் அம்மனும் ஏனைய மூர்த்திகளாக பிள்ளையார், முருகன், வைரவர், நாகதம்பிரான், சண்டேஸ்வரியும் உள்ளனர். 33 அடி உயரமான மணிக்கோபுரம் உள்ளது. வாகனங்களான சிங்கம், யாளிமுகச் சிங்கம், அன்னம், கப்பல், நாகம், சிம்மாசனம், கேடகம் என்பவற்றுடன் சகடையும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருளிலிருந்து ஒளியை நோக்கி....

அடியார்கள் எல்லாரும் இறைவனை பாடும்போது, ஒளிக்கு மிகவும் ஏற்றம் கொடுத்து பாடி அனுபவித்துள்ளார்கள். ஒளியினால்தானே உலகமே இயங்குகிறது.

வெகுகாலத்திற்கு முன்பாகவே நமது முன்னோர்கள் கொண்டாடிய பண்டிகை கார்த்திகை தீபம். தீபங்களில் அதிதேவதைகள் உள்ளனர். கார்த்திகை மாதத்தில் தீப தானம் செய்தால் நாம் செய்த பாவங்களெல்லாம் மறையும். பரமாத்மாவான பரமேஸ்வரன் ஜோதி ஸ்வரூபமானவர். ஆதி, அந்தம் இல்லாதவர். ஒருசமயம் பிரம்மாவும் விஷ்ணுவும் இறைவனின் அடி முடியை தேடும் போது, சர்வேஸ்வரன் அண்ணாமலையில் ஜோதி பிழம்பாகக் காட்சியளித்தார்.

**'வேழவெண் கொம்பு ஒசித்த மாலும்**
**விளங்கிய நான்முகனும் சூழ எங்கும் தேட**
**ஆங்கு ஓர் சோதியுல் ஆகி நின்றாய்'**

என்பார் ஞானசம்பந்தர்.

மாணிக்கவாசகரும் திருவண்ணாமலையில் திருவெம்பாவை பாடும்போது தொடக்கத்தில், 'ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதி', 'சொற்றுணை வேதியன் சோதி வானவன்' என்றெல்லாம் இறைவனை ஒளிமயமாக அனுபவிக்கின்றார். கார்த்திகை தீபம் மிகவும் விசேஷமானது.

கார்த்திகைப் பௌர்ணமியன்று தீபத்திருநாள் கொண்டாடப்படுகின்றது. அன்று தீபமேற்றி வழிபட்டால் செல்வம் பெருகும். நோயின்றி வாழலாம். கார்த்திகை தீப ஒளிபடும் எல்லா உயிரினங்களின் பாவமும் அகலும். தீபத் திருநாளன்று எல்லா சிவ, விஷ்ணு ஆலயங்களிலும் சொக்கப்பணை கொளுத்தி வழிபாடு செய்வார்கள். அனைத்து உயிரினங்களின் நன்மைக்காகத்தான் இவ் வழிபாடு நடைபெறுகிறது. கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத்தன்று முருகனை தரிசித்தால், நாம் என்ன பிராத்தனை செய்தாலும் அது நிறைவேறுமென்று பவிஷ்யோத்ர புராணம் கூறுகிறது. நம் மனதை இறைவனிடம் வைத்து தீப ஒளியைப் பிரகாசிக்கச் செய்யவேண்டும். நம் மனதில் மூடிக்கிடக்கும் அஞ்ஞானம் என்ற இருளை அகற்றுவது தீப ஒளி.

இதையே 'தமஸோ மா ஜோதிர்கமய' என்கிறது உபநிடதம். நம்மை இருட்டிலிருந்து வெளிச்சத்துக்குக் கொண்டு போக உதவுகிறது. மகாபாரத்தில் ஒரு சம்பவம்.

பிதாமகர் பீஷ்மர் தனது பேரன்களான தர்மனிடம், துரியோதனிடம் தனித் தனியே பணத்தைக் கொடுத்து, 'வீடு நிறைய பொருட்களை வாங்கிவையுங்கள்' என்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய அறிவுத்திறனை ஆராயும் வகையில் சொன்னார். உடனே துரியோதனன் வீடு நிறைய வைக்கோல் கட்டுகளை வாங்கி நிரப்பிவிட்டு, 'இன்னும் கொஞ்சம் வைக்கோல் வேண்டும் காசு போதவில்லை, என்று குறைபட்டுக்குக் கொண்டான். தருமபுத்திரர் சிறிய அகல் விளக்குகளை வாங்கி தீபமேற்றி வீடு நிறைய வைத்துவிட்டார். தருமபுத்திரர் ஏற்றிய தீப ஒளியால் வீடு மங்களகரமாகவும், வீடு நிறைந்த பொருளாகவும் இருந்தது.

பெருமாளிடம் எல்லையற்ற பக்தி கொண்ட பூதத்தாழ்வார்.

'அன்பு என்ற தகழியிலே ஆர்வம் என்ற நெய்யைவிட்டு, என் மனத்தையே திரியாக்கி ஞான விளக்காக ஏற்றுகிறேன்' என்று ஒளிக்கு மிகுந்த ஏற்றம் கொடுத்து பாடுவார்.

இதை திருமூலரும்,

**'விளக்கின் முன்னே வேதனைகள் மாறும்**
**விளக்கை விளக்கும் விளக்குடையவர்கள்.**
**விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே'**

என்று தீபத்தின் பெருமையை உரைப்பார்.

'தீப மங்கள் ஜோதி நமோ நம' என்று முருகனையும், 'காந்தமலை ஜோதியே' என்று ஐயப்பனையும் பாடுவதை கேட்கிறோம். 'கருமுகில் கொழுந்தெழில் காட்டும் ஜோதி' என்று ராமபிரானையும், 'உயர் நின்ற ஜோதி' என்று திருமாலையும் போற்றி ஜோதியின் பெருமையை விளக்குவார்கள்.

நாம் வெளிஉலகத்திறகு வெளிச்சம் தரும் ஜோதியை ஏற்றும் அதே வேளையில், நம் மனதினுள்ளே இருக்கும் ஆத்மாவுக்கு ஒளியேற்ற வேண்டியது மிகவும் முக்கியம். நம்முள்ளே இருக்கும் அஞ்ஞானமென்னும் இருட்டை விரட்டி ஞானமாகிற தீபத்தை ஏற்ற வேண்டும். பகவத்கீதையில் 'விச்வ ரூப தர்சன' யோகத்தில், கண்ண பரமாத்வா அர்ஜுனனுக்கு ஆயிரம் சூரியர்கள் ஒருங்கே உதித்தாற்போல ஒளிவெள்ளமாகக் காட்சிதந்ததாக சொல்லப்படுகின்றது. 'அருட்பெருஞ்சோதி-என்னை ஆண்டு கொண்ட தெய்வம்' என்று வள்ளலார் உருகுவார்.

'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி' என்றபடி, நம்முள்ளே இருக்கும் இறைசக்தி என்ற ஒளியைத் தேடி அந்த அருளைப் பெறுவோம்.

**'இல்லக விளக்கது இருள் கொடுப்பது**
**சொல்லக விளக்கது சோதியுள்ளது**
**பல்லக விளக்கது பலரும் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சிவாயவே'**




சங்குகளுக்குள் கடலிரையும் ஓசை கேட்கும் என்று ஓர் நம்பிக்கை உண்டு. சங்கு வாங்கும் கடையில் அதை வாங்கும் போது அதைத் தட்டி சப்தம் கேட்பதும் காதுக்கருகில் வைத்து கடலிரைச்சல் பரிசோதிப்பதும் வழக்கமானது.

ஒலியின் முக்கிய தன்மையான எதிரொலியின் அடிப்படையில் இந்த இரைச்சல் கேட்கின்றது என்பது உண்மை. வாயுவில் எப்போதும் இது போன்ற எதிரொலிகள் உண்டாகிக் கொண் டிருக்கின்றன. அவை நாம் கேட்குமளவுக்கு உரக்க எழும்புவதில்லை என்பதால் நம் காதுகளுக்கு எட்டவில்லை. சங்கை காதில் வைத்துப் பார்க்கும் போது வாயுவிலுள்ள சில அதிர்வு எண்ணிலுள்ள ஓசை அலைகளே எதிரொலிக்கின்றன. எந்த அதிர்வு எண் பிரதிபலிக்கப்படுகின்றது என்பது அத னுள்ளிலுள்ள வாயுவின் கன அளவைப் பொறுத்திருக்கும். இவ்வாறு பிரதிபலிக்கும் ஓசையும் அதே அதிர்வு எண்ணிலுள்ள ஓசையும் சேரும் போது அனுநாதம் உண்டாகின்றது. மேலும் ஓசையின் தீவிரம் பல மடங்காக அதிகரிக்கின்ற போது நம் காதுகளால் கேட்க இயலுகின்றது. இந்த ஓசை கடலிரைச்சல் போல் தோன்றுகின்றது என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மொழிகள்



கடந்த காலத்தை நினைத்து வாழ வேண்டாம், எதிர்காலத்தை நினைத்து கனவும் காண வேண்டாம், இந்த தருணத்தை மனதில் கவனித்திருங்கள்.

நாம் இன்று என்ன நிலையில் இருக்கிறோமோ, அந்நிலையை நமக்கு அளித்தது நமது எண்ணங்கள்தான், நமது இன்றைய நிலை நமது எண்ணங்களாலேயே ஆக்கப்பட்டிருக்கிறது.

*-புத்த பகவான்*



இதுவரை நீ எப்படி இருந்தாய் என்பதைவிட, இனி நீ எப்படி இருக்க விரும்புகிறாய் என்பதை மட்டும் நினைத்து செயல்படு. கண்டிப்பாக முன்னேற்றம் அடைவாய். அற்புதமான பேச்சைவிட ஒரு துளி அன்பினால் அதிகமாக சாதிக்க முடியும். உன் விருப்பம் நேர்மையானதாக இருக்குமானால், உன்னைச் சுற்றி இருக்கும் எல்லாமே, அதை நீ அடைய உதவி செய்யும்.

*-ஸ்ரீ அன்னை*



ஒருவன் எப்போதும் உண்மையையே பேசுபவனாக இருந்தால் அல்லாமல் உண்மையே உருவான இறைவனைக் காண முடியாது.

உன்மையான மனிதனை இறைவன் ஒருபோதும் எந்த நிலையிலும் அவமானத்திற்கு ஆளாக்குவதில்லை. அவன் எல்லோரிடமும் வெற்றியடைகிறான்.

*-ராமகிருஷ்ண பரமஹம்சர்*



சக்கரங்களுக்குள் சக்கரமாக உள்ள இந்த உலகம் ஒரு பயங்கர எந்திரம். நாம் அதில் கையைவைத்து மாட்டிக்கொண்டோமானால் நம் கதை முடிந்தது. குறிப்பிட்டதொரு கடமையை செய்து முடித்ததும் ஓய்வாக இருக்கலாம் என்று நாம் ஒவ்வொருவரும் நினைக்கிறோம். ஆனால் அந்தக்கடமையில் ஒருபகுதியை செய்து முடிக்கும் முன்பே மற்றொரு கடமை தயாராக காத்திருக்கிறது.

*-சுவாமி விவேகானந்தர்*



இன்று நீங்கள் சிரித்துக் கொண்டே பிறரை நிந்தித்தும் இகழ்ந்தும் பேசிக் கொண்டிருக்கலாம் ஆனால் அதுவே உங்கள் மீது வட்டியும் முதலுமாகத் திரும்பப்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

அன்பு என்பதன் மொத்த உருவமே நான். அன்பே என்னுடைய கருவியாகும்.

*-சாய் பாபா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடம் காக்க
# மனிதனாய் வந்த மகாவிஷ்ணு!

பகவான் த்வாபர யுகத்தில்,
கம்சனை அழித்து,
ஜராசந்தனை வதைத்து,
பின் பாரதப் போரிலே
பாண்டவர்களுக்குப் பக்க பலமாய்
நின்று அர்ஜுனனுக்கு கீதோபதேசம்
செய்து உலக மக்கள்
உய்யும் பொருட்டு எடுத்த அவதாரமே
**கிருஷ்ணாவதாரம்!**

'யதா யதா ஹி தர்மஸ்ய கலாநிர் பவநி பாரத
அப் யுத்தாந மதர்மஸ்ய ததாத்மாநம்
ஸ்ருஜாம் யஹம்' (கீதை 4:7)

'தர்மங்கள் தாழும் போதும், அதர்மங்கள் ஓங்கும் போதும் நான் என்னை நானே படைத்துக் கொண்டு, அவ்வப்போது அவதாரம் செய்கிறேன்' என்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா கீதையிலே கூறியுள்ளார்.

'பரித்ராணாய ஸாதூர்ணாம் விநாசாயக துஷ்க்ருதாம் தர்ம சம்ஸ்தாபனார்தாய ஸம்பவாமி யுகே யுகே'

அதாவது, 'ஸாதுக்களைக் கடைத்தேற்று வதற்காகவும், பாவம் செய்கிறவர்களை அழிப்பதற்காகவும், தர்மத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறேன்' என்கிறார் கீதையில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா. இதையே பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான ஸ்ரீ ஆண்டாள்,

ஒருத்தி மகனாய் பிறந்து ஓரிரவில் ஒருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனாய் ஒளிந்து வளர' என்று பாடினார். ஸ்ரீமந் நாராயணரான மகாவிஷ்ணு, ஒவ்வொரு யுகத்திலும் வெவ்வேறான அவதாரங்களைப் பல்வேறு காரணங்களுக்காக எடுத்தாலும் கிருஷ்ணாவதாரம் தனிச்சிறப்பு வாய்ந்தது! பாற்கடலில் நித்திரை செய்து கொண்டிருந்த பகவான், தனது நாபிக்கமலத்திலிருந்து பிரம்ம தேவனைத் தோற்றுவித்தார். இதுவே பகவானின் முக்கியமான இருபத்திரண்டு அவதாரங்களுக்கும் முதன்மையான தோற்றம். பகவானின் இருபத்திரண்டு அவதாரங்களுள் ஸ்ரீகிருஷ்ண அவதாரமே பரிபூர்ண அவதாரமாகும். ஸ்ரீ கிருஷ்ணனே ஸ்ரீமந் நாராயணனின் முழுமையான பகவத் ஸ்வரூபம்! மற்ற அவதாரங்கள் யாவும் அம்சாவ தாரங்களே! மற்றெல்லா அவதாரங்களும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்திற்கு அங்கங்களேயாகும். இக் காரணத்தினாலேயே ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகள் தாமியற்றிய கீத கோவிந்தத்தில், தசாவதாரங்களைச் சொல்லி அவை யாவும் ஸ்ரீகிருஷ்ணனின் அவதாரங்களே என்று தெளிவுபடக் கூறியுள்ளார். பகவான் த்வாபர யுகத்தில், கம்சனை அழித்து, ஜராசந்தனை வதைத்து, பின் பாரதப் போரிலே பாண்டவர்களுக்குப் பக்க பலமாய் நின்று அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்து உலக மக்கள் உய்யும் பொருட்டு எடுத்த அவதாரமே கிருஷ்ணாவதாரம்!



கட்டுக்கடங்காத அசுர சக்திகளின் பெருக்க த்தினாலும் ஆதிக்கத்தினாலும் பூமாதேவி அல்லலுற்று, பசு உருக்கொண்டு கண்ணீருடன் பிரம்ம தேவனிடம் முறையிட, அவளது துயரைப் போக்க திருவுளம் பூண்ட பிரம்மன், ஸ்ரீமந்நாராயணனை 'புருஷஸூக்தம்' போன்ற துதிகளால் துதிக்க, பூமியின் பாரத்தைப் போக்கும் உத்தேசத்துடன் பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பூலோகத்தில் யாதவ குலத்தில் வசுதேவருக்கு மகனாய் பிறக்கத் திருவுளம் பூண்டார்!

வசுதேவருக்கு தேவகிக்கும் திருமணம் நடந்தேற, அவளது சகோதரனான கம்சன், குதூகலமாக, மணமக்கள் இருவரையும் ரதத்தில் ஏற்றி, தானே ரதத்தை ஓட்டிக்கொண்டு சென்றான். வழியில் திடீரென ஒரு அசரீரி வாக்கு இடியென முழங்கிற்று "அடேய் கம்சா... நீ ஒரு மூடன். தேவகியின் எட்டாவது கர்ப்பம் உனக்கே எமனாக வாய்க்கப் போகிறது. அவளைத்தான் நீ இப்போது மிக்க அன்புடன் அழைத்துச் செல்கிறாய். பீதியுற்ற கம்சன், தன் வாளை உறுவி தேவகியின் கூந்தலைப் பற்றி அக்கணமே அவளைக் கொல்ல முற்பட்டான். கம்சனின் செயலால் கலக்கமுற்ற வசுதேவர் கம்சனைப் பார்த்து "ஸ்த்ரீயை அதுவும் உனது அன்பு சகோதரியைக் கொல்வது உனக்குத் தகுதியன்று! மரணம் என்பது எவராலுமே தவிர்க்க முடியாத விஷயம்! அதன் பொருட்டு பாவச் செயலைச் செய்யாதே!" என்று மன்றாடினார். எனினும் கம்சன் பிடிவாதமாயிருக்கவே, அவனைச் சமாதானப் படுத்தும் விதமாய் வசுதேவர், "கம்சா, வீண் விசனம் வேண்டாம். தேவகிக்குப் பிறக்கும் எல்லாக் குழந்தைகளையும் உன்னிடமே ஒப்படைத்துவிடுகிறேன். அவளை மட்டும் கொன்றுவிடாதே!" என்று கூறவே, ஒருவாறு சமாதானமுற்ற கம்சன் தேவகியைக் கொல்லும் முயற்சியைக் கைவிட்டான். காலக்கிரமத்தில் தேவகிக்கு முதல் சிசு பிறக்க, சத்திய சீலரான வசுதேவர் அதை கம்சனிடம் ஒப்புவிக்க, அரக்கமனம் கொண்ட அவனோ அதை அவரிடமே கொடுத்து, அந்தச் சிசுவினால் தனக்கு ஆபத்து ஏதுமில்லை. எட்டாவது சிசுவினால் தான் தனக்கு மரணபயம் என்றும் கூறினான். இதன் பிறகு நாரத மகரிஷி கம்சனிடம் வந்து, "கம்சா உன்னையும், உன் சுற்றத்தார்களையும் கொல்ல ஸ்ரீமகாவிஷ்ணுவே உலகில் அவதரிக்கப் போகிறார். மேலும் வசுதேவரும் தேவகியும் தேவர்களே! எனவே நீ எச்சரிக்கையாக இருத்தல் அவசியம்!"என்று கூறவே, நீசனான கம்சன் வசுதேவர், தேவகி இருவரையும் விலங்குகளிட்டு சிறை யிலடைத்தான். மேலும் அவர்களுக்குப் பிறந்த அனைத்து சிசுக்களையும் கொன்று விட்டான்.

ஏழாவது தடவையாக தேவகி கர்ப்பமுற்றாள். (அந்தக் கர்ப்பத்தில் வளர்ந்து வந்தது பகவானின் அம்சமான ஆதிசேஷனே) அவ்வமயம், பகவான் தனது யோகமாயையை அழைத்து, "தேவியே... தேவகியின் வயிற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்துவரும் எனது கருவை இழுத்து நந்தகோகுலத்தில் வசித்துவரும் வசுதேவரின் இன்னொரு மனைவியான ரோஹிணியின் வயிற்றில் சேர்ப்பித்து விடு! நான் மறுபடியும் தேவகியின் கருப்பையில் எட்டாவது கர்ப்பமாக வளர்ந்து வரும் அதே சமயம், நீ நந்த கோபன் மனைவி யசோதையின் மகளாய்ப் பிறந்து துர்க்கா, நாராயணி என்று பல பெயர்களால் உலகத்தாரால் போற்றப்படுவாய்! எனது அம்சமாக ரோஹிணியினிடத்தே பிறந்த குழந்தைக்கு 'பலன்' என்றும் 'சங்கர்ஷணன்' என்றும் பெயரிடுவார்கள்!" என்று கூற, பகவானின் கட்டளைகளை நிறைவேற்ற யோகமாயை சென்ற பிறகு, ஸ்ரீமகாவிஷ்ணு தேவகியின் உதரத்தில் எட்டாவது கர்ப்பமாகப் பிரவேசித்தார்.

பகவானைத் தன் வயிற்றிலே சுமந்திருப்பதால் தேவகியின் உருவம் ஒளிப்பிழம்பாய் ஒளிவிட்டுப் பிரகாசிக்க, அவளது 'காந்தி'யைக் கொண்டே தன்னைக் கொல்லவரும் எமன் நிச்சயம் அவளது வயிற்றிலே குடிக் கொண்டிருக்கிறான் என்றெண்ணி ஏகத்துக்குக் கலங்கிப் போனான் கம்சன். நாரதாதி முனிசிரேஷ்டர்களும், தேவகணங்களும் தேவகியை நோக்கி, "அம்மா நீ பெரும் பாக்கியசாலி! உன் வயிற்றில் வளர்ந்து வருபவன் சாட்சாத் பரமாத்மாவேயாவான்! உனக்கு கம்ஸனிடமிருந்து யாதொரு பயமுமில்லை!" என்று கூறினான்.

ஸ்ரீமந் நாராயணன், பூவுலகில் அவதரிப்பதற்கு முன்னறிவிப்பாக எல்லா மங்கள நலன்களும் ஏற்பட்டன. இருள் சூழ்ந்த நள்ளிரவில், சந்திரோதய காலத்தில் சூரியனும் உதித்தது போல, கிருஷ்ண பட்சம் அஷ்டமிதிதி, ரோஹிணி நட்சத்திரத்தில் பகவான், தேவகி மைந்தனாக ஜனித்த போது, ஆகாயத்தில் மங்கள பேரிகைகள் ஆர்த்தன! கின்னர, கந்தர்வர்கள் கானம் பாடினர். மேகக் கூட்டங்கள் மென்னையாக முழங்கின. சதுர்புஜங்களுடன், சங்கு சங்ரதாரியாய், கமலநயனம், மார்பில் ஸ்ரீவத்ஸம், கழுத்தில் கௌஸ்துபம், பீதாம்பரம், நவரத்ன கிரீட குண்டலங்கள், ஸ்வர்ண கங்கண, கேயூர, ஹார, நூபுரங்கள் முதலான திருவாபரணங்களுடன் நீல மேகஸ்யாமளனாய்... தேஜோரூபியாய் கண்கொள்ளாத் திரு காட்சியாக (சிறு குழந்தையாய்) ஆவிர்ப்பவித்த பகவானைக் கண்டு, ஆச்சரியத்திலும் மகிழ்ச்சியிலும் திக்குமுக்காடிப் போயினர் வசுதேவரும் தேவகியும்! பகவான் அவ் விருவரையும் பார்த்து, "பூர்வ ஜென்மத்தில் நீங்கள் பிருச்னி, ஸுதபஸ் என்ற பெயர்களுடன் என்னைக் குறித்து புத்திர பாக்கியம் வேண்டி தவம்புரிந்தீர்கள். அதன்படி நானும் 'பிருச்னிகர்ப்பன்' என்கிற பெயரில் உங்களுக்கு மகனாய்ப் பிறந்தேன்! அடுத்த பிறவியில் நீங்களிருவரும் கச்யபராயவும், அதிதியாகவும் இருந்தபோது உபேந்திரன் என்றும், வாமனன் என்றும் பெயர்களைப் பெற்று உங்களுக்குப் புத்திரனாக ஜனித்தேன். மூன்றாவதாக முந்திய பிறவிகளை நினைவுபடுத்துவதற்காக இப் பிறவியில் உங்களுக்கு புத்திரனாய் பிறந்து நான் இந்த தெய்வீக வடிவை உங்களுக்குக் காட்டினேன்." என்று கூறி, பகவான் அமானுஷ்ய சரீரத்தை உபஸம் ஹரித்து ஒரு சாதாரண மனுஷ்ய சிசுவானார்.

நந்தகோகுலத்தில் உள்ள யசோதையின் மகவாகப் பிறந்த யோகமாயையை எடுத்துக் கொண்டு, அதற்குப் பதிலாகத் தன்னை அங்கே எடுத்துச் செல்லும்படி வசுதேவருக்குப் பகவான் கட்டளையிட அவ்வண்ணமே எல்லாம் நடந்தேறியது. நள்ளிரவில் நடந்த இந்த நிகழ்ச்சிகள் எவருக்கும் தெரியாது.

ஆம்: எல்லாம் யோக மாயையின் சக்தி1 நந்த கோகுலத்திலே கிருஷ்ணன் பிறந்த வைபவ நாளன்று இடையர்களான கோபர்களும் கோபியர்களும் தங்களுக்கே உரித்தான முறையில், ஒருவருக்கொருவர் பால், தயிர், நெய், வெண்ணை, வண்ணநீர் ஆகியவற்றால் வாரியிறைத்துக் கொண்டு ஆரவாரம் செய்து உற்சாகத்துடன் அந்நாளைக் கொண்டாடினர்.

'மார்கோ நேயோ நயோ நய'

என்கிறது விஷ்ணு சஹஸ்ஹர நாமம்: அதாவது ஸ்ரீமந்நாராயணன் விழியாக இருக்கிறான். வழிகாட்டுபவனாகவும் இருக்கிறான். 'என்னை அறிந்து தியானம் செய்பவர்கள் பரம சாந்தியாகிய மோட்ச இன்பத்தை இங்கேயே காண்பார்கள்' என்கிறான் கண்ணன் கீதையில். மகாகவி பாரதி, கண்ணனை நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், தெய்வமாய், சேவகனாய் பாரக்கிறார். இதன்படி கண்ணன் பக்தர்களுக்கு அன்னையாகவும், அடியார்களுக்குத் தந்தையாகவும், பாண்டவர்கள், குசேலர், கோபியர் இவர்களுக்குத் தோழனாகவும், தேவகி யசோதை இருவரிடத்தும் குழந்தையாகவும், உத்தமன், சுதாமன், ஆகியோருக்கு தெய்வமாகவும்- இப்படி பக்தர்கள் விரும்பும் விதத்திலே காட்சி தருகிறான்.

அவனிடத்தில் திடமான நம்பிக்கை வைத்து, கிருஷ்ணா என்ற நாமத்தைக்கூறி, அவனது லீலைகளை இடைவிடாது கேட்டும், பாடியும், பேசியும் மகிழ்கிறவர்கள் கண்ணனின் பாதக் கமலங்களைக் காண்பார்கள் என்பது பாகவதம்! அர்ஜுனன் மூலம் நமக்கு கீதோபதேசம் செய்யும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, இம்மைக்கு வேண்டிய நலன்களையும், மறுமைக்கு வேண்டிய பரமபதத்தையும் வழங்க வேண்டிய பொறுப்பு தனக்கிருக்கிறது என்கிறார். அதன்படி கர்மத்தைச் செய்ய வேண்டும். பலனை அவனிடத்தே விடுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்முகக் கடவுள்

## சைவமும் வினைக்கொள்கையும்

ஓர் உயிர் செய்த வினைகள் யாவும் வண்டியில் பொதி என ஏற்றப்பட்டுள்ளன. அந்த உயிரானது மாடு. தான் செய்த வினைகளைத்தானே அனுபவிக்க அந்த உயிர் விரும்பாது. மாடு தானே சென்று அந்த வண்டியில் பூட்டிக்கொண்டு பொதியை இழுக்க விரும்பாது. வண்டி சடம். அது தானாக வந்து மாட்டின் கழுத்தில் பொருத்திப் பூட்டிக் கொண்டு போகச் சொல்லாது. எனவே வண்டியை ஒருவன் மாட்டின் கழுத்தில் பிணைத்துப்பூட்டி ஓட்டிச் செல்லவேண்டும். அதுபோல் சடமான வினைகளை அதற்கு உரிய உயிரின் பால் சேர்த்து அனுபவிக்கச் செய்ய ஒருவன் வேண்டும் அவனே இறைவன்.

இறைவனின் அருளால் உயிர்களுக்கு தனு, கரண, புவன போகங்கள் வழங்கப்படுகின்றன. தனு என்பது முதலில் சொல்லப்பட்ட எண்பத்து நான்கு இலட்சம் ஜீவபேதங்களுக்கும் தனித்தனியே வழங்கப்படும் உடல்களாகும்.

சைவமே வினைக் கொள்கையினை மிகவும் தெளிவாகச் சொல்கிறது, வினையைச் செய்யும் உயிர், அது செய்வினை, அதனால் விளைந்த பலன், இதனை ஒன்றாய்ச் சேர்க்கும் இறைவன் இந்த நான்கினைத்தான் சைவம் நிரூபித்துள்ளது இதனை உலகெலாம் என்று அடி எடுத்துக்கொடுத்த ஆடல்வல்லான் அவர் திருவாயாலேயே

**"செய்வினையும் செய்வானும்**
**அதன்பயனும் கொடுப்பானும்**
**மெய்வகையால் நான்கு ஆகும்**
**விதித்தபொருள்"**



என்று கூறச் செய்துள்ளான்.

### குரு

குரு என்பது வடசொல். இதன் பொருள், பெரிது, பிதா, குரவன் என்பன. அதாவது அனைத்தையும் விடப் பெரிய பொருளாகவும், மேலான தந்தையாகவும், சிறந்த அரசனாகவும் உள்ளவனே குருவாவான்.'கு' என்றால் அந்தகாரம், அறியாமை, இருள், குற்றம், மாசு என்று பொருள். 'ரு' என்றால் அகற்றுகின்றவன் அல்லது போக்குகின்றவன் என்று பொருள். அதாவது நிரோதித்து அருள்பவன் என்று பொருள். உயிர்களிடத்து உள்ள அஞ்ஞானம் என்னும் அறியாமையாகிய அக இருளைப் போக்குகின்றவன் 'குரு' என்றும் 'குரவன்' என்றும், உபாத்தியாயன் என்றும் அழைக் கப்படுகின்றான். குருவானவன் அறியாமையை அகற்றி அறிவளிப்பவன் எனவும், மன இருளை நீக்கி அறிவொளியைத் தருபவன் என்றும் பொருள் கொள்ளவேண்டும். ஆசிரியர் என்பது தமிழ்ச் சொல். ஆசு என்றால் குற்றம், இரியன் என்றால் அகற்றுபவன் என்று பொருள். ஆசான் என்ற சொல்லும் இதே பொருளில் வழங்கப்படுகிறது. எனவே ஆசிரியன், ஆசான் என்ற இருவரும் ஏதும் அறியாத ஒருவனுக்கு அனைத்தும் அறிந்த நிலையில் உள்ள அவர்கள் நன்றாக விளங்கும்படி உண்மை ஒன்றைப் புரிய வைப்பவர்களாவர்.

எந்த ஒன்றையும் விளங்குமாறு கற்றுத்தருபவர் ஆசான், அல்லது குருவாவர், அவரையே குருவெனக் கொள்ளவேண்டும்,

மாதா, பிதா, குரு தெய்வம் என்பது முதுமொழி தாய் தந்தையைக் காட்ட தந்தை குருவைக் காட்ட, குரு இறைவனைக் காட்டுகிறான் என்பதே இதன் பொருளாகும். எனவே குருவருளால் திருவருளைப்பெற்று இன்புறுவதே நமது குறிக்கோளாக இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரி...சிரி...சிரி..சிரிப்பு.



"தலைவரை உள்ளே வெச்சு செமத்தியா கவனிச்சிருப்பாங்கனு எப்படிச் சொல்றீங்கு?"

'சட்டம் ஒரு முரட்டு அறை'னு புலம்பிட்டே இருக்காரே!



"வாங்குற பொருளுக்கு எது எதைத்தான் இலவசமா கொடுக்கிறதுன்னு விவஸ்தயே இல்லை!"

எதைச் சொல்றே?"
அந்தக் கடையில ஒரு டூத்பேஸ்ட் வாங்கினா ஒரு 'பல்செட்' இலவசமா தர்றாங்களாமே!



"போலீஸ் உன்னை அடிச்சாங்களா, நம்ம கட்சி உறுப்பினர் கார்டை காட்டலையா?"

"காட்டினதுக்குத்தான் அடிச்சாங்க தலைவரே!"



காலம் ரொம்ப கெட்டு போச்சுப்பா... இரண்டு கிட்னி வச்சுருக்கே.... தனியா எங்கேயும் பிச்சை எடுக்க போயிறாதேப்பா..



"தலைவரே செடி (மரம்) நடுவிழாவுக்கு எதுக்கு எதிர்க்கட்சி தலைவரைத் கூப்பிடறீங்க?"

" அவர்தானே குழி பறிக்கறதுல பெரிய ஆளு அவர் குழி பறிச்சதும் நான் நடுவேன்



"நான் வீட்டுல இருக்கும்போது என் மனைவியும் அம்மாவும் சண்டை போட்டுக்கவே மாட்டாங்க."

உங்ககிட்ட அவ்வளவு பயமா?

பயமாவது.. நான் இருக்கும் போது ரெண்டும் பேரும் மாறி, மாறி என்கூட சண்டைக்கு நிப்பாங்க!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவாமி விவேகானந்தரின் வெற்றிச் சூத்திரங்கள்

## வீணான மனக்குழப்பங்களுக்கு இடமளிக்காதே

சுவாமி விவேகானந்தர் திரு. இ.டி. ஸ்டர்டி என்பவருக்கு எழுதிய கடிதத்தில், தவறாக புரிந்து கொண்டதால் ஏற்பட்ட சிக்கலினை எவ்வாறு தீர்த்துவைத்தார் என்பதை காண்போம்.

என் அன்பான ஸ்டர்டி,
உங்களது விமர்சனம் நேர்மையாகவும், சரியாகவும் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. என்றோ ஒரு நாள் உங்கள் மனதில், சில மனிதர்களை வெறுத்ததனால் ஏற்பட்ட கருத்துக்களே அவை என உணர்வீர்கள். அந்த ஒரு பலி ஆடாக நன் இங்குள்ளேன்.

நான் நானாக இருக்க விரும்பினேன், நாடகம் ஆட விரும்பவில்லை. அந்த முறையில் உற்று நோக்கினால், அந்த அளவிற்கான கசப்புணர்ச்சியும் தேவையில்லை. என்னால் அவ்வாறாக என்றுமே நடக்க முடியாது. ஒவ்வொரு சந்திப்பும், ஒரு பிரிவினையை சந்தித்தே ஆகவேண்டும். இது இயற்கையின் நியதி. அவ்வாறு இருந்தும், எனக்கு எந்த ஒரு ஏமாற்ற உணர்ச்சியும் இல்லை. உங்களுக்கு என் மேல் எந்தவிதமான கசப்புணர்ச்சியும் இல்லை என நினைக்கிறேன். நம்மை ஒன்று சேர்த்தது கர்மவினை ஆகும். நம்மை பிரித்ததும் அதே கர்மவினையே ஆகும்.

நீங்கள் எவ்வளவு நாணக் கூடிய மனிதர் என்று எனக்குத் தெரியும். நீங்கள் எவ்வாறு மற்றவர் உணர்ச்சிகளை காயப்படுத்தினால் வேதனைப்படுவீர்கள் என்று தெரியும். உங்களது கொள்கையிலிருந்து வேறுபட்ட மக்களுடன் நீங்கள் பணிபுரியும் பொழுது, எத்தனை மாதங்கள், நீங்கள் மனதினால் துன்புற்று இருப்பீர்கள் என என்னால் மனப்பூர்வமாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது. இதனை, நான் முன்பே அறியத்தவறிவிட்டேன். அறிந்திருந்தால், உங்களது தேவையற்ற மன உளைச்சலிலிருந்து உங்களை நான் காப்பாற்றியிருப்பேன். மீண்டும் கர்மா தன் பணியினைச் செய்கின்றது. எல்லா ஆசிர் வாதங்களும் உங்களை அடையட்டும். உங்களுடையதாகவே என்றும் இருக்கட்டும். இதுவே உங்கள், உங்களுடைய தொடர்ச்சியான பிராத்தனையாகவும் இருக்கட்டும்.

**விவேகானந்தா (SW: 8-478)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் கலைகள்

## அருள்மிகு சட்டை முனி சித்தர்

**வணங்க வேண்டிய சிறப்பு நாள்:** வெள்ளிக்கிழமை

**இயற்றிய நூல்களில் சில:**

1. சட்டை முனி கற்பகம்- 100
2. சட்டை முனி நிகண்டு- 1200

**மூலமந்திரம்:-** ஓம் ஸ்ரீம் சட்டை முனி சித்தர் சுவாமியே போற்றி! போற்றி!

108 முறை

**நிவேதனப் பொருள்:** வாழைப் பழம், பஞ்சாமிர்தம். எலுமிச்சபழம்

**பூஜைக்குரியவை :** முல்லை, வில்வம், விருச்சிப்பூ, கதிர் பச்சை

**பூஜையின் பலன்கள்:**

கேதுவால் பலன் ஏற்படும், உடல் நலம் சரியாகும், மனக்கோளாறுகள் நீங்கும், கல்வி வளர்ச்சி பெறலாம்.

பூஜையில் நீல வண்ண ஆடைகள், துணிகள் படைத்து ஏழை எளியவருக்குத் தானம் அளிக்கவும்.

## அருள்மிகு அழுகண்ணிச் சித்தர்

**வணங்க வேண்டிய சிறப்பு நாள்:** சனிக்கிழமை

**சித்தி அடைந்த திருத்தலம்:** நாகபட்டினம்

**இயற்றிய நூல்களில் சில:**

1. அழுகண் வைத்தியம்
2. அழுகண் யோகம்

**மூலமந்திரம்:-** ஓம் ஸ்ரீம் ரீம் ஐம் அழுகண்ணிச் சித்தர் சுவாமிகளே போற்றி! போற்றி!

108 முறை

**நிவேதனப் பொருள்:** சக்கரை பொங்கல், சம்பா பொங்கல்

**பூஜைக்குரியவை :**துளசி, வில்வம், கதிர்பச்சை.

**பூஜையின் பலன்கள்:**

1. நாகதோஷப் பிரார்த்தனைக்கு நல்லது
2. மனத்தெளிவு பெறலாம்.
3. குடும்பம் ஒற்றுமையுடன் இருக்கும்
4. தொழில் சிறக்கும்.

கருப்புத் துணி, ஆடைகள் சித்தருக்குப் படைத்து தானம் வழங்கவும்.

*தொடரும்*




JOY GLORIOUS
*Cosmetic & Fashion Jewellery*
கேள்வி-பதில் போட்டி!



வெற்றியாளருக்கு
பெறுமதி வாய்ந்த பரிசு!

சபரி மலைக்கு 18 முறைக்கு மேல் சென்று வந்தவரை எப்படி அழைப்பர்?

- ஐங்கரர்
- குருசாமி
- சக்திவேல்

Call Now & Win

FLEX Publications - 0778 335 552
1st December-16th December Call -Friday From 9am - 5pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருஸ்தான்

ஷீர்டியில்- பாபா முதன் முதலில் பதினாறு வயது இளைஞனாகக் காட்சி கொடுத்த புனித இடம் இது. இந்த குருஸ்தானில் இப்போதும் காணப்படும் வேப்ப மரத்தடியில்தான் பாபா காட்சி கொடுத்தார். இந்த மரத்துக்கு அருகில் சில அடி தூரத்தில், பூமிக்கு அடியில் அமர்ந்திருந்த ஓர் அறையில்தான் தன் குரு இருந்து வந்ததாக பாபா கூறினார். அது மட்டுமல்லாமல், அந்த இடத்தை நல்ல முறையில் பாதுகாத்து வரவேண்டும் என்றும் பாபா கூறினார்.

தான் தங்கியிருந்த மசூதியிலிருந்து, தான் உருவாக்கிய தோட்டத்துக்குச் செல்லும் போது குருஸ்தானில் சிறிது நேரம் நின்று பாபா தன் குருவை வணங்குவது வழக்கம்.

பாபா தன் குரு வாசம் செய்ததாகச் சுட்டிக்காட்டிய இடத்துக்கு மேல் ஒரு கட்டடம் எழுப்பப்பட்டுள்ளது. இங்கு சலவைக் கற்களால் ஆன இரு பாதங்களைக் காணலாம். இந்தப் பாதங்கள் பாபாவால் தொட்டு ஆசீர் வதிக்கப்பட்டவை. மேலும், இங்கு பாபாவின் படமும் வைக்கப்பட்டுள்ளன. பாபாவின் படம் அவரது வாழ்நாளிலேயே அவரது ஆசியுடன் வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டது.

பாபாவின் பக்தர்களின் ஒருவரான மேகா என்பவர் சிவபக்தர். அந்த மேகாவுக்கு பாபா ஒரு சிவலிங்கத்தை வழங்கினார். மேகா அந்த லிங்கத்தை குருஸ்தானிலேயே பிரதிஷ்டை செய்திருக்கிறார்.

குருஸ்தான் காலை ஐந்து முதல் இரவு ஒன்பது மணிவரை திறந்து இருக்கும். ஷீர்டி செல்லும் பக்தர்கள் தவறாமல் தரிசிக்க வேண்டிய புனிதத் தலங்களில் இதுவும் ஒன்று.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துணிவுக்குத் துணை நிற்கும் ஸ்ரீ துர்க்கா தேவி

சக்தி தெய்வங்களில் வீரம்மிக்க தெய்வமாக விளங்குபவள் ஸ்ரீ துர்க்கா தேவியாவாள். பக்தியுடன் வழிபடுபவர்களுக்கு அன்னை பல சௌபாக்யங்களை அருள்கிறாள். பக்தர்கள் தளராத முயற்சியுடன் இடைவிடாது தியானிக்க, கேட்கும் வரங்களை அருள்கிறாள். சக்தி மூன்று வடிவங்களில் காட்சியளிக்கிறாள். பக்தர்களுக்கு பொருளையும், அருளையும் வழங்கும் சக்தியாக விளங்குவது லக்ஷ்மி வடிவான சக்தி: அறிவையும் ஞானத்தையும் வழங்கும் சக்தியாக இருப்பது மகாசரஸ்வதி என்ற ஞான சக்தியாகும். துன்பங்களைப் போக்கி, தைரியத்தை வழங்குகின்ற சக்தியை நாம் ஸ்ரீ துர்க்காதேவி என்று அழைக்கிறோம். துன்பங்களும், தொல்லைகளும் மிகுந்து காணப்படும் இந்நாளில் நாம் வழிபடுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற சக்தி தெய்வமாக விளங்கி அருள் பாலிப்பவள் ஸ்ரீ துர்க்காதேவி. அஞ்ஞானத்தை அழித்து, பயத்தை போக்கி நமது வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் வாரி வழங்குபவள் ஸ்ரீ துர்க்காதேவி. தன்பால் வந்து சரணடைந்தவர்களுக்கு அபயம் தந்து காக்கும் ஸ்ரீ துர்க்காதேவியின் சாந்த சொரூபம் காப்பதற்கும்: ரௌத்திர ரூபம் துஷ்டர்களை அழித்து பக்தர்களை அரவணைப்பதற்காகவும் அமைந்துள்ளது எனலாம்.

ஸ்ரீ துர்க்கா தேவி நம்மிடம் அறிவாகவும், ஜீவாத்மாவாகவும், பலமாகவும், நித்தி ரையாகவும், தைரியமிக்க வீரமாகவும் விளங்குகிறாள். பத்ரகாளி, மாகாளி என்னும் பெயருடைய சக்தியான துர்க்கையின் வடிவத்தை சங்காயன சிரௌத சூத்திரம் அழகாக எடுத்துக்காட்டுகிறது. எண்ணி லடங்காத கோடானு கோடி அண்டங்களையும், காலத்தையும் ஸ்ரீ துர்க்காதேவி விழுங்கி, தன்னகத்தே அடக்குவதால் அவள் 'காலி' என்றும்: 'காலிகா' என்றும் வடமொழியில் அழைக்கப்படுகிறாள். "காலி' என்ற சொல்லே, தமிழில் 'காளி' என்று அழைக்கப்படுகிறது.

காளி கரிய நிறமுடையவள். எங்கும் நிறைந்திருப்பதாலும், எல்லாத் திசைகளிலும் வியாபித்திருப்பதாலும், காளியை திகம்பரி என்று அழைக்கிறார்கள். திக்குகளையே உடையாகப் பெற்றவள் என்ற பொருளில் திகம்பரியாக வர்ணிக்கப்படுகிறாள். ஆத்ம ஞானம், செல்வம், அறிவு, பலம் போன்றவற்றை அருளுவதோடு, ஆதி பௌதிகம், ஆதி தைவிகம், ஆத்யாத்மிகம் என்ற மூன்று வகையான பாபங்களை வேரறுக்கும் தன்மை கொண்டவளாக விளங்குகிறாள் ஸ்ரீ துர்க்காதேவி. எழுநூறு ஸ்லோகங்களைக் கொண்டு விளங்கும் பகவத் கீதை, மகாபாரதத்தில் நடுநாயகமாக விளங்குவதைப் போன்று, எழுநூறு மந்திரங்களின் வடிவமாக விளங்கும் தேவி மகாத்மியம், மார்க்கண்ட புராணத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. இது 'சண்டி' என்னும் சண்டிகாதேவியாகிய துர்க்கா தேவியைத் துதிப்பதால், 'துர்க்கா சப்தசதி' என்ற அழைக்கப்படுகிறது.

இந்த சப்தசதியின் அதிதேவதை ஸ்ரீ துர்க்காதேவி. அவளுடைய லட்சணங்கள் ஒன்பது ரூபமாகக் கவசத்தில் கூறப்பட்டுள்ளன. 1.சைவபுத்ரி, 2.பிரம்மசாரிணி, 3. சந்திரகாண்டா, 4.கூஷ்மாண்டா, 5.ஸ்கந்த மாதா, 6.காத்யாயினி, 7. காலராத்திரி, 8. மகாகௌரி, 9. சித்திப்பிரதா ஆகியவையாகும்.

ஸ்ரீ துர்க்காதேவியின் உபாசனா கல்பத்திரயம் என்ற கிரந்தத்தில் ஜயா, விஜயா, பத்ரகாளி, ஸுமுகி, துர்முகி, பிரக்ஞா, வியாகர்முகி, பத்ரா, சிம்ஹமுகி என்றும்: வனதுரக்க, ஜலதுர்க்கை, வன்னி துர்க்கை, ஸ்தூல துர்க்கை, பிரம்ம துர்க்கை, ருத்ர துர்க்கை, சூலினி துர்க்கை, மகா துர்க்கை, என்றும் பல்வேறு நாமங்களால் துதிக்கப்படுகிறாள். 'பெண் தவிர, வேறு யாராலும் எனக்கு மரணம் நேரிடக்கூடாது' என்று வரம் பெற்ற மூர்க்கனான மகிஷாசுரனை சம் ஹரித்ததால், 'மகிஷாசுரமர்த்தனி' என்றும் தேவி அழைக்கப்படுகிறாள்.

வேறு சக்திகளால் அழிக்கமுடியாத, சும்பன், நிசும்பன் போன்ற அசுரர்களையும் ஸ்ரீ துர்க்காதேவி சம்ஹாரம் செய்திருக்கிறாள். சகல வேதங்களும், பரப்பிரம்ம ரூபிணியான அன்னையிடமிருந்தே உண்டாயின என்ற ஐதீகப்படி, வேதம் 'ஜாதவேதஸே' என்று அழைத்துப் போற்றுகிறது. ஸ்ரீ துர்க்கா சூக்தம், ஏழு மந்திரங்களைக் கொண்டதாக விளங்குகிறது.

1. முதலாவது மந்திரத்தால் சத்ரு நிவர்த்தியையும், சகல துக்க நிவாரணங்களையும் வேண்டுகிறது.
2. இரண்டாவது மந்திரம் சகல சக்தி பொருந்திய ஜகன்மாதாவை சரணடைகிற மந்திரமாகும்.
3. மூன்றாவது மந்திரம் நாடு செழிப்படைய வேண்டும் என்று துதிப்பதாகும்.
4. நான்காவது மந்திரம், காசிக, வாசிக, மானசிகங்களிலுள்ள காமக் குரோதங்களை விட்டு, வணங்க வேண்டிய உபாயத்தை எனக்கு காட்டு என்று வேண்டுவதாகும்.
5. நான் இருக்குமிடம் வந்து, குற்றங்களைப் போக்கி அருள் செய்ய வேண்டும் என்று ஐந்தாவது மந்திரம் கூறுகிறது.
6. எனது பூஜையால் அடைந்து, சகல சௌபாக்கியங்களையும் எனக்கு கொடு என்று ஆறாவது மந்திரம் தெரிவிக்கிறது.
7. ஏழாவது மந்திரம், சகல தேவர்களாலும் துதிக்கப்படுகிற உன்னை துதிக்கும் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று பிரார்த்திக்கிறது.

'துர்க்காம் தேவீம் சரணமஹம் பிரபத்யே ஸுதரஸி தரஸே நம' என்று நாம் பிரார்த்திக்கும்போது அன்னையின் அருள் நமக்குக் கிடைக்கிறது.

எந்தக் காரியம் செய்தால் கடவுளுடைய பேரருள் கிடைக்குமோ அதைச் செய்வதுதான் பக்தி எனப்படும். அந்த பக்தியும் ஸ்திரமாகத் தொடர்ந்து செய்ய வேண்டும். அப்படிப் பக்தி செய்தால் அன்னை நமக்கு அருள் செய்வாள் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, 'துர்க்காதேவியைச் சரணடைகிறேன்' என்று வேதம் சொல்கிறது. பிற ஹிம்சை ஏற்படும் போது அதைத் தானாக விலக்கிக் கொள்ள இயலாது போகுங்கால், பிறரைச் சார்ந்து, அந்த ஆபத்திலிருந்து விடுவித்து, தம்மைக் காக்குமாறு அடைக்கலம் புகுவதே சரணாகதி என்பதன் பொருள். எனவே, 'தாயே நின்னைச் சரணடையும் என்னைக் காப்பாற்றும்' என்று சரணாகதி மந்திரங்கள் மூலம் அன்னையை வேண்டுகிறோம்.

## ஸ்ரீ துர்க்காதேவியின் மூலமந்திரம்

**ஜ்வல ஜ்வல சூலினி துஷ்ட**
**க்ரஹ ஹூம் பட் ஸ்வாஹா**

இது செய்வினைகளை விலக்கக் கூடியது. சகல விதமான சத்ரு உபாதைகளைப் போக்கி, சகல சௌபாக்கியங்களையும் வாரி வழங்குவதில் நிகரற்றது. இந்த சூலினி துர்க்கை மஹா மந்திரத்தை 108 அல்லது 1008 முறை தினமும் ஜபித்து வரலாம். குருமுகமாக இதன் பெருமைகளை அறிவது மிக மிக அவசியமாகும். மந்திரங்களின் உச்சரிப்புக்கள் மற்றும் பிரயோக முறைகள் போன்றவற்றை கூடுமான வரையில் குருமுகமாக அறிந்து கொள்வது அவசியம்.

ஏகாக்கிர சிந்தையுடன் இந்த மந்திரத்தை ஜபித்து வந்தால், குருவருளால் சகல சௌபாக்கியங்களும் உறுதியாக சாதகரைத் தேடிவரும். மேலும் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை தினங்களில் ஸ்ரீ துர்க்கையின் சந்நிதானத்திற்கு சென்று துர்க்கையை தரிசிக்கலாம். ஸ்ரீ துர்க்காதேவிக்கு அர்ச்சனை வழிபாடுகளும் செய்து வரலாம். உபாசனையாகச் செய்ய நினைப்பவர்கள் அவசியம் குருமுகமாகவே பீஜாக்ஷர மந்திரத்தை அறிவது முக்கியமாகும்.

ஸ்ரீ துர்க்காதேவியைச் சிவப்பு நிறப் பூக்களால் அர்ச்சிப்பதும் குங்குமத்தால் அர்ச்சிப்பதும் மிகவும் விசேஷமானது. ஸ்ரீ துர்க்கா சகஸ்ரநாம பாராயணமும் அல்லது ஸ்ரீ துர்க்கா திரிசதியும் செய்து வருவதும் மிகுந்த பயனுள்ளதாகும்.

# யோகா
## கற்றுக்கொள்ளுங்கள்

### சித்தாசனா



- தரையில் உட்கார்ந்து கால்களை நீட்டவும்
- இடது காலை முழங்காலில் மடக்கவும். இடது பாதத்தை கையால் பிடித்து வலது காலின் தொடைக்கு இடையே சொருகவும்.
- வலது காலை மடக்கி வலது பாதத்தை இடது கால் தொடைக்கு இடையில் சொருகவும்.
- கைகளை முன்னால் நீட்டவும். அவை முழங்கால்கள் மீது லேசாகப்படும்படி இருக்கவேண்டும்.
- கட்டை விரலையும், சுண்டு விரலையும் வளைத்து ஞானமுத்ரா வரவேண்டும்

படத்தில் இருப்பது போல் மட்டும் இன்றி, வலதுகால் மேற்புறம் இருக்குமாறும், இடதுகால் கீழ்புறம் இருக்குமாறும் செய்யலாம்.

**பலன்கள்**

சித்தாசனாவால் கூனல் இல்லாமல் நிமிர்ந்து உட்காரப்பழகலாம். மனம் ஒரு நிலைப்படுகிறது. இந்த ஆசனாவில் நிகழ்வது தியானம். ஆசனமும் தியானமும் இணைவதால், மனம் - உடல் ஒருங்கிணைப்பு நன்றாக ஏற்படுகிறது. ரிலாக்ஸ் செய்வது பற்றி தற்போது நிறைய பேசப்படுகிறது. இந்த ஆசனாவின் மூலம் உடலையும், மனத்தையும் நன்கு ரிலாக்ஸ் செய்யலாம். சித்தாசனாவில் பத்து அல்லது பதினைந்து நிமிடம் இருந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Canada

பத்திரிகைகளில் உங்களது

மணமகன்/மணமகள், திருமண விளம்பரங்கள்,

தொடர்மாடிமனை மற்றும் ஏனைய விளம்பரங்களும்

சிறந்த முறையில் நியாயமான கட்டணத்தில்

பிரசுரித்திட உடன் அழையுங்கள்

0777 555 026

flex GRAPHIC
THE LEADING DIGITAL HOUSE FOR ADVERTISING

**Free! Issue Paper | Every Friday**

No. 4-IBC Road, Wellawatte.
E-mail: flexvijay@sltnet.lk

## SL Estates

**Colombo Estate Agent**

**S. Muralitharan**
Management Consultant

No. 298, Galle Road, Colombo-06

**Mob: 0779 588 536 , 0754 900 464, 0712 229 102 Fax: 0112 504 236**

www.slestates.lk , murali@slestates.lk

## விளம்பரக் கட்டணங்கள்

| | |
|---|---|
| முழுப்பக்கம் (வர்ணம்) | ரூபா 6,000/= |
| முழுப்பக்கம் (கறுப்பு, வெள்ளை) | ரூபா 4,000/= |
| ½ பக்கம் (வர்ணம்) | ரூபா 4,000/= |
| ½ பக்கம் (கறுப்பு, வெள்ளை) | ரூபா 3,000/= |
| 1 BOX (கறுப்பு, வெள்ளை) | ரூபா 500/= |
| 1வது, 2வது, 3வது அல்லது கடைசி இரு பக்கங்களைக் கொண்ட வர்ண விளம்பரம் | ரூபா 15,000/= |

மேலதிக விபரங்களுக்கு
அழையுங்கள்: 0777 614 186

**பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான ஆன்மிக கேள்வி-பதில் போட்டி!**

PETER STORES
FASHIONABLE HOUSE FOR QUALITY TEXTILES
201, Galle Road, Wellawatte.
Tel : 2586066



ஷீரடி சாயியை தரிசிக்க வேண்டிய தலங்களில் ஒன்று

- மைசூர்
- ஸ்ரீரங்கம்
- குருஸ்தான்

1st December -16 December
Call Monday-Friday
From 9am - 5pm

**Call Now & Win School Uniform**

**FLEX Publications - 0778 335 552**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி....



# பெண்கள்
## செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்

❖ எந்த நிலையிலும் சட்டத்திற்கு, தருமத்திற்கு, நியாயத்திற்கு சமுகத்திற்கு எதிரான, ஏற்காத செயல்களை செய்ய வேண்டும் என மனதில் கூட நினைக்காதீர்கள். அந்த நினைப்பு வந்தால் இது தேவையில்லை, இதனால் குடும்பம் சீரழியும் என்ற எண்ணத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டு வேறு நல்ல சிந்தனைக்கு மாறுங்கள்.

❖ நாம் செய்யும் தவறு யாருக்குத் தெரியப் போகிறது என்று தவறான செயல்களில் ஈடுப்பட்டால் அதன் கொடூரமான பின் விளைவுகள் நமக்கு எதிர்காலத்தில் பெரிய துன்பத்தைக் கொடுத்துவிடும்.

❖ மௌனம், எப்போதும் கடவுள் சிந்தனை, தினசரி கடமைகளைச் சரிவர செய்தல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகியவை என்றும் உயர்வைத் தரும்.

❖ குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அனு சரணையாக இருக்கப் பழக வேண்டும்.

❖ கணவனிடத்திலும், வீட்டில் உள்ள பெரியவர்களிடமும், வயது வந்த பிள்ளை களிடத்திலும், பெண்களிடத்திலும் முக்கியமான விஷயங்களைக் கேட்டுச் செய்தல் அல்லது செய்ததைச் சொல்லுதல் நல்லது.

❖ கணவரிடம் நாம் என்ன கேட்பது அவர் என்ன சொல்வது என்று நினைக்கக் கூடாது. குடும்பம் என்பது அடிமைத்தனம் நிறைந்த பாசறை அல்ல. அனைவருக்கும் சம உரிமை என்றாலும் அனுபவம் உள்ள கணவனிடம் மனைவி கேட்பதோ, மனைவியிடம் கணவன் கேட்பதோ ஆகியவற்றில் எந்தத் தவறும் இல்லை. இதனால் யாரும் குறைந்து விடமாட்டார்கள். இங்கே ஈகோ தேவை இல்லை.

❖ மனம் போனபடி சிந்தித்தலும் அதன்வழி நடத்தலும் கூடாது. அதற்கு ஓர் உச்சவரம்பு வேண்டும். மனதை இழுத்துப்பிடித்து சுய நிலைக்குக் கொண்டு வரவேண்டும்.

❖ தவறுகள் செய்யக் கூடாது. தவறுகளை நியாயப்படுத்தக் கூடாது. தவறு யார் செய்தாலும் தவறுதான், எப்போது செய்தாலும் தவறுதான். தவறுகள் நியாயப்படுத்தப்பட்டால் குடும்பம் தாங்காது. சமூகம் தாங்காது. நாடு தாங்காது.

❖ எதிர்மறைப் பேச்சுகள், எதற்கெடுத்ததாலும் இல்லை, முடியாது போன்ற வார்த்தைகள் பேசக்கூடாது.

❖ மனதில் தெய்வத்திற்கு இடம் கொடுங்கள். பிறகு தவறு செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் கூட உங்களால் தவறுகள் செய்ய முடியாது.

*தொடரும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண் திருஷ்டி

### ஆன்மீக ஈடுபாட்டாளர்களுக்கான திருஷ்டிகள்

ஆன்மீக உணர்வு கொண்டு தெய்வீக வாழ்க்கை வாழ்ந்து வரும் உத்தமர்களுக்கும் திருஷ்டிகள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இதை எவ்வாறு உணரமுடிகிறது என்றால், ஆன்மீக நிலைகளில் ஓர் உன்னத நிலை வகித்துவரும் சில பெரியோர்களின் வாழ்வியல் நிகழ்வுகள் சிலவற்றில் தோன்றிய, எதிர் கொண்ட பிரச்சினைகளிலிருந்து அறிய முடிகிறது! எந்நேரமும் விபூதி, குங்குமம், ருத்ராட்சம், கடுக்கண், குடுமி, பூணூல், ரட்சாபந்தனங்கள், மந்திர ஜபங்கள், தியானங்கள், அர்ச்சனை ஆராதனைகள் போன்ற ஆன்மீக செய்களிலேயே மூழ்கி கிடக்கும் தெய்வீக சக்தி நிரம்பியவர்களையே திருஷ்டி தாக்குகிறது என்றால் சாதாரண நாமெல்லாம் எம்மாத்திரம் என்பதை இனியேனும் புரிந்துணருவோம் அன்பர்களே! இதனால் சொன்னார்கள் போலும் கல்லடியில் தப்பினாலும் கண்ணடியில் தப்ப முடியாது என்று!

### திருஷ்டியின் விளைவுகள்:-

- அன்றாட வழிபாடு மற்றும் பூஜை புனஸ்காரங்கள், ஜபம் தவம், தியானம் போன்றவற்றில் தடைகள், தாமதங்கள் போன்ற ஏற்படுதல் திருஷ்டியின் தீயவிளைவுகள்!
- வழிபாடு, பூஜை செய்வதற்கான மனநிலை ஒத்துழையாமை, சூழ்நிலையில் சாதகம் இல்லாமல் போன்றன யாவும் திருஷ்டிகளின் பாதிப்புகளே!
- அவர்களால் மட்டுமே எப்படி இந்த அளவு தெய்வீக நிலையில் இருக்க முடிகிறது. நம்மால் முடியவில்லையே என்ற ஏக்க பொறாமை உணர்வுகள் தாமே திருஷ்டிகளாக விழுகிறது! எனவே. பலர் அறியும்படி எதையும் செய்யக் கூடாது.

### ஜோதிட கலைஞர்களுக்கான திருஷ்டிகள்:-

இறையருள், குருவருள் மற்றும் நவக் கிரகங்களின் ஆசிகளை பூரணமாக பெற்று ஜோதிட வித்வான்களின் திரிகால ஞானத்தை கண்ணுறும் பொது ஜனங்களின் திரிகால ஞானத்தை கண்ணுறும் பொது ஜனங்களின் மனத்தாக்கங்கள் தாமே பெருத்த திருஷ்டிகளாக உருவெடுக்கிறது! அதனால் எல்லையில்லா இடையூறுகளை ஜோதிட கலைஞர்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது! இவர்களால் மட்டும் எப்படி இவ்வாறு நடந்த நிகழ்ச்சிகளையும், நடக்கிற நிகழ்ச்சிகளையும் நடக்கப்போகிற நிகழ்ச்சிகளையும் துல்லியமாக முன்னுரைக்க முடிகிறது என்ற வியப்புணர்ச்சிகளும், ஈர்ப்புணர்ச்சிகளுமே திருஷ்டிகளாக மாறுகிறது! மேலும் சக ஜோதிட கலைஞர்களின் திருஷ்டிகளும் ஏற்பட வாய்ப்புகள் நிறைய உண்டு!

### திருஷ்டியின் விளைவுகள்:-

- ஜோதிட பலன்கள் உரைப்பதில் தவறுதல் ஏற்படுதல், அதனால் அபிமானிகளின் நன்மதிப்பில் சலனம் ஏற்படுதல் ஒருவகை திருஷ்டிதான்!
- உடல்நலம் பாதித்தல், மனக்கோளாறு உண்டாகும்படியான சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகள் உண்டாகுதல் போன்றன யாவும் திருஷ்டிகளின் விளைவுகள்தாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயம் தொட்ட பழமொழிகள்

:**"விளக்கை பார்க்காதே... வெளிச்சத்தை பார்"** என்பது ஒரு அழகான பழமொழி. பொதுவாக, இருட்டை வெளிச்சமாக்கி நம் கண்ணுக்கு புலப்பட வைக்கும் பொருளை விளக்கு என்று சொன்னார்கள். விளக்கு இருக்கும் இடம் அனைத்தும் வெளிச்சம் வரும் என்றாலும், விளக்கின் கீழ் இருட்டு வீடு கட்டிக் கொண்டிருக்கும் என்று கண்ணதாசன் வர்ணிப்பார்.

இருட்டை பகலாக்குவது விளக்கு ஒளி. அந்த ஒளி தரும் விளக்கு மண் விளக்காக இருந்தாலும், பொன் விளக்காக இருந்தாலும், அகல் விளக்காக இருந்தாலும் உருவ அமைப்பில் மாறுபாடுகள் இருக்குமே தவிர, ஒளி கொடுப்பதில் குறைவிருக்காது.

அதை போல், நமக்கு வாழ்க்கைக்கு வழிகாட்டும் நல்ல கருத்துக்களை தருகிற மனிதர் எந்த இனமாக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும், எந்த மொழி பேசுபவராக இருந்தாலும், எப்படிப்பட்டவராக இருந்தாலும், அவரது உருவத்தையும், தோற்றத்தையும் பற்றி ஆராயாமல், அவரது நல்ல பண்பினையும், அறிவாற்றலையும், சிந்தனையையும் மட்டுமே நாம் பார்க்க வேண்டும். என்பதே இந்த பழமொழியின் உண்மையான விளக்கமாகும்.

"ஒலி கொடுத்தால் வழி கிடைக்கும்" என்று எழுதியிருக்கும் வாகனங்களை பார்த்து இருப்பீர்கள். அதேபோல், கோவில்களில், தெய்வங்களின் சந்நிதிகளில் நாம் விளக்கேற்றி ஒளி கொடுத்தால் வழி கிடைக்கும் என்பது நம்பிக்கை. அப்படிப்பட்ட ஒளியைக் கொடுக்கும் விளக்கில் எந்த விளக்காக இருந்தாலும் சரி, அதனுடைய வெளிச்சம் தான் நமக்குத் தேவை. உலோகத்தைப் பார்க்காமல் ஒளியின் அமைப்பை பயன்படுத்தும் விதத்தைத்தான் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் தங்க விளக்காக இருந்தாலும், தூண்டுகோல் ஒன்று தேவை என்பதை வலியுறுத்தி **"தங்க விளக்கானாலும் தூண்டுகோல் தேவை"** என்ற பழமொழியையும் முன்னோர் சொல்லி வைத்திருக்கிறார்கள். இதற்குரிய விளக்கமும் அற்புதமானதாகும். எப்படித்தான் தங்கத்திலே நீங்கள் விளக்கு செய்து கொண்டு வந்தாலும், விலை மதிப்புள்ள அந்த விளக்கை ஏற்றுவது சாதாரண தீக்குச்சி தான். தங்கத்தில் தீக்குச்சி செய்ய இயலாது. மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்களின் கூட சாதாரண நிலையில் உள்ளவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் உயர் நிலையை அடைய முடியாது, என்பதை வலியுறுத்தும் விதத்தில் இப்பழமொழி அமைந்துள்ளது.

சாமானிய மனிதர்களின் ஒத்துழைப்பு இருந்தால் தான் ஒருவன் சக்கரவர்த்தியாக மாற முடியும். இல்லையேல், பூமியில் பிறந்த மனிதர்களில் பத்தோடு பதினொன்றாவது ஆளாகத்தான் அவன் இருக்க முடியும். தூண்டுகோல் இல்லாவிட்டால் விளக்கு பிரகாசமாக எரிய முடியாது. அதைப் போல் நமக்கு எவ்வளவு தான் திறதை இருந்தாலும், நமக்கு பின்னணியாக- தூண்டு கோலாக ஒருவர் இருந்து, செயல்படுத்தினால்தான் மிகப் பெரிய முன்னேற்றத்தை ஒருவர் அடைய முடியும்.

**"கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல"** என்பது ஒரு பழமொழி. கிணற்றுக்குள் இருந்து எப்படி பூதம் கிளம்பும் என்ற நீங்கள் நினைக்கலாம். ஆனால் இந்த பழமொழிக்குள் ஆழ்ந்த கருத்தொன்று மறைந்து இருக்கிறது. ஐம்பூதங்கள் என்று நாம் வர்ணிப்பது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் போன்றவை தான். காரணம், அவை ஐந்தும் மிகப் பெரியதாக, பூதகரமாக காட்சி அளிக்கின்றது.

கடல் அருகில் நின்றுப் பார்த்தால் கடல் நமக்குப் பூதகரமாக தோன்றும். வானத்தை நிமிர்ந்து பார்த்தால், அதுவும் பூதகரமாகத் தெரியும். எனவேதான் அவற்றுக்கு பூதம் என்று பெயரிட்டு இருக்கின்றனர்.

எனவேதான், நிலம் என்ற ஒரு பூதத்தை (ஐம்பூதங்களில் ஒன்று) வெட்டுகிற போது, தண்ணீர் என்று ஒரு பூதம் (பஞ்ச பூதங்களில் ஒன்று) வெளி வருகிறது. இதையே கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல என்று சொல்லி வைத்தார்கள். இப்படி எத்தனையோ நல்ல கருத்துகள் பழமொழிக்குள் பதுங்கி இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளவத்தையில்!

ULTRA SUPER LUXURY APARTMENTS

0777 44 44 22

Location: . 26B, IBC Road, Colombo 6, Sri Lanka.

Developed by:

**HYTOR ENGINEERING PVT LTD**

298A, Galle Road, Colombo 6, Sri Lanka.

0112 36 37 66
0112 36 37 44
info@hellohytor.com
www.hellohytor.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்ற இதழின் தொடர்ச்சி

# ஜாதகமும் திருமணப் பொருத்தங்களும்

## பெயர் ராசிப் பொருத்தங்கள்

இருவருக்குமே ஜாதகம் இல்லாவிட்டால், ஜன்ம நட்சத்திரமாவது தெரிந்திருந்தால் அதைக் கொண்டு நட்சத்திரங்களைப் பார்த்துத் திருமணத்தை நிச்சயித்துச் செய்விக்கலாம். அந்த ஜன்ம நட்சத்திரமுங்கூட தெரியாமற் போனால், வதூவரர்களின் பெயர்களைக் கேட்டு, அந்தப் பெயர்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு, பெயர் ராசிப்படி நாம நட்சத்திர ரீதியான பொருத்தங்களைப் பார்த்து திருமணஞ் செய்விக்கலாம். பொருத்தம் பார்க்கும் போது, வதூவரர்களில் ஒருவருடைய ஜன்ம நட்சத்திரத்தையும் மற்றொருவரின் நாம நட்சத்திரத்தையும் ஒப்பிட்டுப் பொருத்தம் பார்க்கக் கூடாது. இருவருக்குமே பெயர் ராசிப்படியே பொருத்தங்களைப் பார்த்து திருமணஞ் செய்விக்க வேண்டும்.

ஆண், பெண்களிள் பெயர்களைக் குறித்துக் கொண்டு அந்தந்தப் பெயரின் முதல் எழுத்துக்களையும் தனித்தனியாகக் குறித்துக் கொண்டுவிட்டால், அந்தந்த அட்சரத்துக்கு என்ன நட்சத்திர பாதம் வருகிறது என்பதைத் தெரிந்து கொண்டு விடலாம். இந்தக் கிரமம் ஒரேவிதமாக ஒவ்வொரு தமிழ் வருடப் பஞ்சாங்கத்திலும் இருக்கும். உதாரணமாக, கே-கோ-ஹ-ஹி இவைகளின் நாம நட்சத்திரம் புனர்ப்பூசம் என்றுள்ளது. இதில் கேதாரி, கேசவமூர்த்தி இதுபோன்ற எந்தப் பெயராயினும் அநதப் பெயரின் முதலெழுத்து "கே" என்றிருப்பின் அதுவே, அந்தப் பெயரின் நாம நட்சத்திரமாகிய புனர்பூசத்தின் முதற் பாதமாகும். கோமளவல்லி, கோவிந்தசாமி போன்ற பெயராயின் புனர்பூசத்தின் 2வது பாதமாகும். ஹம்சவல்லி, ஹரிநாதன் என்பது போன்ற பெயராயின் புனர்பூசத்தின் 3வது பாதமாகும். ஹிருதயநாதன், ஹிருதயலக்ஷ்மி, ஹிருதயநாதன் போன்ற பெயர்களாயின் புனர்பூசம் 4ஆம் பாதம் என்றும் பார்க்க வேண்டும். இவ்வாறே ஸ்திரீ புருஷரின் பெயரின் முதல் எழுத்தை ஆதாரமாகக் கொண்டு பார்ப்பதற்கே பெயர் ராசி (நாம நட்சத்திர)ப் பொருத்தம் பார்க்கும் முறை என்று பெயர்.

பொதுவாக, நமது நாட்டில் ஒரு குழந்தை பிறந்தவுடனேயே அந்த குழந்தை பிறந்த தினத்திலும் நேரத்திலும் அமைந்தள்ள நடசத்திரம் எதுவோ, அதன் எந்தப் பாதமோ அதற்கு என்ன எழுத்து எதுவோ அந்த எழுத்தையே முதல் எழுத்தாகக் கொண்ட பெயரை வைப்பது, நமது பெரியோர்களின் வழக்கம். இப்படி பெயர் வைப்பதால் அந்தப் பெயர் உலகில் புகழ்பெற்று விளங்கும் என்பதோடு, அவ்வப்போது பெயரைக் கொண்டே கோட்சார நட்சத்திர ரீதியான பலன்களைக் கொண்டு அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்ல முடியும் என்று கருதி தமது குழந்தைகளுக்குப் பெயர் சூட்டி வந்தார்கள்.

இதைப் போலவே ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் மிருகம், பட்சி, மரம், கணம் போன்றவைகளைக் குறித்துள்ளனர். இதன் உபயோகம் என்னவென்றால், நாம் நட்சத்திரப்படி பசு, எருமை, ஆடு, குதிரை போன்ற உபயோகமான மிருகங்கள் வருமாயின், அவர்களுக்கு அந்த நாற்கால் பிராணிகளாலும் அவற்றை உபயோகிக்கும் வாகனங்களாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல பலன்கள் உண்டாகும் என்று கருதினர். பாலுள்ள மிருகமாக வந்தால் கறவை மாடுகள், ஆடுகள் முதலியவற்றால் பால்பாக்கிய விருத்தியுண்டாகும் என்று நிச்சயித்தனர்.

மரங்கள் பாலுள்ளதாயும் பழமுள்ளதாயும் வந்தால், அவர்களுக்கு பழமரத் தோப்புகள், செழிப்பான பயிர்கள் மூலம் ஆதாயமுண்டாகும் என்றும் புத்திர பாக்கியம் உண்டாகும் என்றும் கருதினர். மரங்களில் பலா, மா, இலுப்பை, சண்பகம், எருக்கு, வஞ்சி, அரசு, ஆல், அத்தி, மாதுளை, பாரய் என்ற பதினான்கு மரங்களும் பாலுள்ள மரங்களாகும். மற்றவை வைரமுள்ள மரங்களாகும். புருஷன் வைரமுள்ள மரமாகவும் பெண் பால் மரமுமாயின் புத்திரனுண்டு. பெண் வைரமரமும் ஆண் பால்மரமாயின் மலடு. இருவரும் வைரமரமானால் புத்திரச் சேதம். இருவருமே பால்மரமானால் அதிக நலம்.

பட்சிகள் உபயோகமான பறவைகளாக வந்தால் அவற்றால் அனுகூலம் உண்டாகும் என்றும், புறா, கிளி, மயில் முதலியவற்றால் அவர்களுக்கு அனுகூலம் உண்டாகும் என்றும் கோழிப் பண்ணை வைக்க ஆதாயமுண்டாகும் என்று கருதினர். மயிலுக்கு கோழியும் வல்லூறும் பகை, வலியனுக்கு ஆந்தை பகை, ஆந்தைக்கு வலியன் பகை, வல்லூறுக்கு ஆந்தையைத் தவிர, எல்லாமே பகை. இவ்வாறே புருஷனுக்கும் பெண்ணுக்கும் உள்ள பட்சி பகையில்லாதிருக்க வேண்டும்.

கணமும் இப்படியேதான். ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே கணமாயின் இருவருக்கும் உடலுறவு பொருத்தம், குணப் பொருத்தம் முதலியவை சமமாக இருக்கும். பெண்ணுடைய நட்சத்திரமும், புருஷனுடைய நட்சத்திரமும், ஒரே கணமானால் உத்தமம். இராட்சத இனமும் தேவகணமுமாயின் குடும்பத்தில் சிக்கல், சச்சரவுண்டாகும். பெண் இராட்சத கணமும் ஆண் மனுஷ கணமானால் மரணம் சம்பவிக்கும். பெண் மனுஷ கணமும் அதன் தேவ கணமுமாகில் மத்திமமான பலனாகும்.
ஜன்ம நட்சத்திர ரீதியாகவம், இந்த கணம், இந்த பட்சி, மரம் முதலியவற்றின் பலன்களையும் பார்ப்பது நாடெங்கும் உள்ள பழக்கமாக இருந்து வருகிறது.

# அனுமாரும் கிருஷ்ணரும்!



ஸ்ரீஅனுமார் சஞ்சீவி மலையைத் தூக்கினார். ஸ்ரீகிருஷ்ணர், கோவர்த்தன மலையை தன் விரலால் தூக்கினார்.

ஸ்ரீஅனுமார் பாரிஜாத மரத்தின் வேரில் இருப்பவர். ஸ்ரீகிருஷ்ணர் பாரிஜாத மரத்தடியில் அமர்ந்திருப்பவர்.

ஸ்ரீஅனுமார், ராமபிரானுக்காக சீதாதேவியை மீட்கவும் தர்மத்தை நிலைநிறுத்தவும் இலங்கைக்கு ராவணனிடம் தூது சென்றார். அந்தத் தூது ராம-ராவண யுத்தத்தில் முடிந்தது. இறுதியில் ராமர் வென்றார். சீதையை மீட்டார். ஸ்ரீகிருஷ்ணர், பஞ்ச பாண்டவர்களுக்காக திருதராஷ்டிரனிடம் தூது சென்றார். அந்தத் தூது மகாபாரத யுத்தத்தில் முடிந்தது. பாண்டவர்கள் வென்றனர். அரசை மீண்டும் பெற்றனர்.

ஸ்ரீஅனுமார், சீதாதேவியின் துயரத்தை போக்கி ராமருடன் சேர்த்துவைக்க உதவினார். துரியோதனனின் அரசவையில் திரௌபதிக்கு வஸ்திரம் கொடுத்து உதவி அவளுடைய மானத்தை காத்தார் ஸ்ரீகிருஷ்ணர்.

ஸ்ரீஅனுமாருக்கும் பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கும் வெண்ணை மிகவும் பிடித்தமான உணவுப் பொருள். ஸ்ரீஅனுமாரும் ஸ்ரீகிருஷ்ணரும் விஸ்பரூபம் எடுத்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாம்பூலம்

திருமணத்தின் ஒரு பகுதி, "வாக் தானம்". பெண்ணின் தகப்பனார், பெண்ணை மணமகனுக்குக் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கிறார். "நிச்சயம் தாம்பூலம்" என்றும் இதனை குறிப்பிடலாம். திருமணத்தின் தொடக்கம் நிச்சயத் தாம்பூலம். வாக்குறுதிக்குச் சாட்சி, தாம்பூலம். அதை சம்ஸ்காரமாக மாற்றி, மங்களகரமான திருமண ஆரம்பத்தை மங்களப் பொருளான தாம்பூலத்தின் மூலம் ஆரம்பிக்க வேண்டும் என்பது தர்ம சாஸ்திரத்தின் வழிகாட்டல். தாம்பூலம் என்பது பண்பாட்டின் அடையாளம். திருமணத்தை உறுதி செய்ய நிச்சயத் தாம்பூலம். திருமணத்தை நிறைவு செய்ய முகூர்த்த தாம்பூலம். விருந்தினரின் வாய் மணக்க புக்தத் தாம்பூலம். தெய்வ வழிபாட்டில் உபசரிக்க கர்ப்பூரத் தாம்பூலம். மக்கள் செல்வம் பெருக தானத் தாம்பூலம். சுமங்கலிப் பெண்களுக்கு மங்களைத் தாம்பூலம். நவராத்திரியில் நங்கையர்களுக்கு கொழுத் தாம்பூலம். வரவேற்ப்பிலும் தாம்பூலம். கௌரவிப்பதிலும் தாம்பூலம். பிரிவு உபசாரத்திலும் தாம்பூலம். தமிழ் கலாசாரத்தில் எங்கும் தாம்பூலம்... எதிலும் தாம்பூலம்.

அன்பளிப்பு, வாழ்த்து இவற்றில் பங்கு பெற்றவர்களை வெற்றிலை-பாக்கோடு வழியனுப்புகிறோம். மாமனுக்குப் பணமில்லாத தாம்பூலம். அத்தைக்கு பணத்தோடு தாம்பூலம். சம்பந்திக்கு, பதில் மரியாதைத் தாம்பூலம். சபையை அலங்கரிக்கும் அறிஞர்களுக்கு சபா தாம்பூலம்.

***ஸதக்ஷிணாகம் ஸதாம்பூலம் துப்யமஹும் ஸம்பிரததே....***

கொடை வழங்கும் பொருளோடு தாம்பூலத்தையும் சேர்த்து வழங்க வேண்டும் என்பது தர்ம சாஸ்திரத்தின் பரிந்துரை.

***தாம்பூல சர்வண முஹுர்த்தத: ஸுமுஹுர்த்தோ அஸ்து....இதி-***

மணநாளன்று தம்பதி முதல் தாம்பூலத்தை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு நல்ல வேளையில் சுவைக்க வேண்டும் என்பது சம்பிரதாயம். முன்னோர்களின் நினைவு நாளில் தாம்பூலத்தின் விருந்தோமல் தொடங்குகிறது.

***அஸ்த சுத்யர்த்தம் இதம் தாம்பூலம்-***

வாய் தூய்மை பெற தாம்பூலத்தை சுவையுங்கள் என்று கொடுக்கிறோம். உணவருந்திய பிறகு ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, இவற்றோடு தாம்பூலம் கொடுத்து நிறைவு செய்கிறோம். இங்கு ஆரம்பம், முடிவு இரண்டையும் தீர்மானிப்பது தாம்பூலம்

***(ஏலா லவங்க ஸஹிதம் இதம் வ: தாம்பூலம்).***

பண்டைய கல்யாணச் சீர்வரிசையில் வெற்றிலைச் செல்லம் (பெட்டி), சுண்ணாம்பு கரண்டாம், பாக்கு வெட்டி ஆகியவை இடம் பெற்றிருந்தன. அந்த கால அரசாங்கப் பிரமுகர்கள், மந்திரிகள் போன்றோருடன் செல்லப்பெட்டியோடு பணிப்பெண் ஒருத்தி பின் தொடர்வாள். அவளுக்கு "தாம்பூல கரங்கவாஹினி" என்ற பெயரும் உண்டு. தெய்வ வழிபாட்டில் பதினாறு உபசாரங்களில் நிறைவு உபசாரமாக தாம்பூலம் பங்கு பெறுகின்றது.

***பூகீபலஸமாயுக்தம் நாகவல்லீ தஹுர்யுதம்...***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பூரம், பாக்கு இவற்றோடு தாம்பூலத்தை பெற்று கொள்ளுமாறு கடவுளை வேண்டுகிறோம். வெற்றிலை-பச்சை: பாக்கு-மங்கலான வெண்மை: சுண்ணாம்பு-தூயவெண்மை. இவற்றின் சேர்க்கையில் "சிவப்பு" தானாகவே தோன்றுவதால் உலக பரிமாணத்துக்கு இயற்கையே பெரிய சக்தி என்கிற நாத்திகவாதத்துக்குத் துணை போனதால், 'தர்சன'த்திலும் இடம்பிடித்து விட்டது தாம்பூலம்.

வெற்றிலையில் வைக்கப்பட்ட பாண லிங்க வடிவில் அமைந்த கொட்டை பாக்கு, ஆவுடையரோடு சிவலிங்கத்தை நினைவூட்டுவதால், உமாமகேஸ்வரரின் மகிழ்ச்சிக்கு காரணமாக தாம்பூலம் அமைந்தது என்கிறது தர்ம சாஸ்திரம். செல்வ செழிப்பு, மங்களம், நன்மைகளை ஈட்டி தரும் தகுதி அத்தனையும் தாம்பூலத்துக்கு இருப்பதால் உமா மகேஸ்வரரின் அருளை வேண்டி, தங்களுக்கு அளிக்கின்றேன்

*தாம்பூலம் ச்சரீங்காரம் பத்ரம்....)*

என்று தர்ம சாஸ்திரத்தில் தன் செல்வாக்கை வெளிப்படுத்துகிறது தாம்பூலம்.

***தம்பூலாக்ரே நிவஸ்திரமா மத்யதோ லாகதீசா... ஸருவதோ நாகவல்யா:***

வெற்றிலையின் நுனியில் அலைமகள், நடுவில் கலைமகள், அடியில் ஜ்யேஷ்டா, இடப் பக்கம் மலைமகள், வலப் பக்கம் பூமாதேவி, உள் பக்கம் விஷ்ணு, வெளியே சந்திரன், ஓரங்களில் சிவனும் பிரம்மனும், மேலே இந்திரனும் ஆதவனும், எல்லா இடங்களிலும் மன்மதனும் குடிகொண்டிருக்கிறார்கள். தேவதைகளின் இருப்பிடமாக தாம்பூலத்தை உயர்த்தியது ஜோதிடம். வெற்றிலையின் நுனியைக் கிள்ளி வலது நெற்றியின் ஓரத்தில் ஒட்டி வைத்துக் கொள்வது உண்டு. அது அலைமகளின் அம்சமானதால், அவளை கௌரவிப்பதாக அமைந்துவிடுகிறது. காம்பைக் கிள்ளி எறிந்து விடுகிறோம். ஜ்யேஷ்டா விலக்கப்பட வேண்டியவள். ஜ்யேஷ்டாவோடு தொடர்புடைய நரம்புகளை அகற்றி விடுகிறோம். நரம்பு களோடு ஒன்றி யிருக்கும் கிருமிகளும் தானாகவே அகன்று விடுகின்றன. தாம்பூலம் தரிப்பதில் காலை அம்சமும் கரு தாம்பூலமும் சேர்ந்து மணம் வீசுகின்றன. தேவதைகள் வெற்றிலையை முழுமையாக ஆட்கொண்டிருப்பதினால்

வெற்று இடம் இல்லாத இலை வெற்றிலை என்பது அதன் தனி சிறப்பு. மறைந்து வாழ்ந்து கொண்டு இருக்கும் காளிதாசனை கட்டிலறையில் சந்தித்த காரிகை, தருணம் பார்த்து போஜராஜனின் செய்யுளுக்கு விடை காண தாம்பூலத்தை அளிக்கும் தருவாயில் செய்யுளின் நான்காவது அடியை அவன் முன் வைத்தாள். "இவ்வாறு காதலர்களின் உரையாடலில் இரவு சென்றுவிட்டது." என்கிற பொருளில் "ராத்ரிரேவம் வ்யரம்சித்" என்று கூறி, விடையை எதிர் பார்த்தாள். காளிதாசனோ, 'பொழுது புலர்ந்து. உரையாடல் முற்று பெறவில்லை'. என்கிற அர்த்தத்தில் "ராத்ரிரேவ வ்யரம்ஸீத்'' என்று சொல்லி விட்டு, தாம்பூலத்தை மென்றபடியே, "சுன்னமதிகம்" என்று பதிலளித்தாள். சுண்ணம் என்கிற வார்த்தைக்கு, சுண்ணாம்பு, பூஜ்யம் என்று இரு பொருள் உண்டு. தாம்பூலத்தை மென்று கொண்டு, "ஏவம் என்ற சொல்லில் சுண்ணம் (வெறுமை) அதிகம். அதை எடுத்து விடு!" தாம்பூலத்திலும் சுண்ணம் -சுண்ணாம்பு அதிகம் என்னும் பொருள்படச் சொன்னான். சுண்ணாம்பு அதிகமானதால் தாம்பூலம் சிறக்காது. ஞானசம்பந்தரை அம்பாளின் தாய்ப்பால் கவியாக மாறியது. அன்னையின் தாம்பூலம் காளிதாசனை கவியரசனாகியது.

***(ஸ்தன்யேன க: சித்கவயாம் பபூவ தாம்பூலரா கேணபரோ ஜனன்யா:)***

அம்பாளின் நாக்கு, தாம்பூலச் சிவப்பால் விளங்குகிறது என்கிறது புராணம். முக்காலத்தையும் விளக்கும் ஜோதிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசானாகத் தென்படுகிறது தாம்பூலம். வெற்றிலையின் எண்ணிக்கையை வைத்து லக்கினத்தை வரவழைத்து பன்னிரண்டு ராசிகளின் பலாபலன்களை விளக்கும் நடைமுறை ஜோதிடத்தில் உண்டு. பிரஸ்ன ஜோதிடத்தில் "தாம்பூல லக்னம்" என்ற கௌரவத்தை பெற்றிருக்கிறது வெற்றிலை-பாக்கு. கொண்டுவந்த வெற்றிலையின் எண்ணிக்கையை இரண்டுமடங்காக்கி அதை ஐந்தால் பெருக்கி, ஒன்றை கூட்டி எழால் வகுத்த மிச்சத்தை சூரியன் முதல் வரிசையாக எண்ணி கிடைத்த கிரகம் அந்த வேளையில் எந்த ராசியில் இருக்கிறதோ, அதை லக்கினமாக வைத்து பலாபலன்களை கூறும் தாம்பூல லக்னம் என்கிற விளக்கம் ஜோதிடத்தில் உள்ளது.

*(தாம்பூலஸம்க்யாம் த்விகுணாம்.... யத்ரஸலக்னராசி:)*

*பத்யம் சிப்த்தாத்திதே புக்தே.... சதான் -*

துயில் எழுந்தவுடன், உணவருந்திய பின், சோர்வுற்றிருக்கையில், வாந்தியெடுத்த பின்-தாம்பூலம் சுவைப்பது மிகவும் சிறப்பு என்பது ஆயுர்வேதத்தின் அறிவுரை.

அது வாயில் தோன்றும் பிணிகளை அகற்றும். தேஜஸை நிலைநாட்டும். ஜீரண சக்தியை வலுப்படுத்தும். வாய் துர்நாற்றத்தை போக்கும். முகத்துக்கு பொலிவூட்டும். மகிழ்ச்சி பொங்க செய்யும். கூடலை ஊக்குவிக்கும். செல்வச் செழிப்பை நிலைநிறுத்தும்

*(தாம்பூலம் முகரோகநாசி நிபுணம்... ஸுகஸ்யாஸ்பதம்)*

என்று தாம்பூலத்தை சிறப்பை ஆயுர்வேதம் கூறுகிறது. குழந்தைகள் வைத்தியத்தில் பெரும்பாலான மருந்துகளுக்கு அனுபானமாக தாம்பூலச் சாறு பயன்படுத்துவது உண்டு. பண்டைய அரசாங்கத்தில் தாம்பூலம் உயர்ந்த மரியாதையாக கருதப்பட்டது. கன்யாகுப்ஜதேச அரசனிடம் இருந்து இரண்டு தாம்பூலத்தோடு பதவியும் கிடைத்ததாகப் பெருமிதமடைகிறார் ஒரு கவி.

*(தாம்பூலத்வயம் ஆஸனம்ச லபதெ ய: கான்யகுப்ஜேஸ்வநாத்).*

வெற்றிலை என்றால் கும்பகோணமும் வெற்றிலை போடுபவர்கள் என்றால் தஞ்சையும் இன்றும் நினைவில் வரும். இரவு-பகலாக சங்கிலி தொடர் போல் தாம்பூலம் தரிப்பதை ஆயுர்வேதமும் தர்ம சாஸ்திரமும் ஏற்றுக் கொள்ளவில்லை. கல்வி கற்கும் பருவத்தில் தாம்பூலம் தரிப்பதை ஏற்கவில்லை தர்ம சாஸ்திரம். மணநாளில் அதை அறிமுகம் செய்தது, பிறகு பயன்படுத்த வேண்டும் என்று அது வலியுறுத்தும். "பாக்கு-வெற்றிலை மாற்றிக்கொண்டோம்" என்று திருமணம் நிச்சயமானதை குறிப்பிடுவோம். இன்னும் கொச்சையாக தட்டை மாற்றிக் கொண்டோம் என்றும் சொல்வதுண்டு. திருமணத்தின் அங்கமாக, அதுவும் நம்பிக்கை அளிக்கக் கூடிய சடங்காகத் திகழ்கிறது நிச்சயத் தாம்பூலம். வாக்குக் கொடுத்துவிட்டால், கல்யாணம் நடந்துவிட்டதாகவே எண்ணிவிடும் தர்ம சாஸ்திரம். ஒருவருக்கு வாக்களித்துவிட்டு அதை மாற்றி இன்னொருவருக்கு மண முடிப்பதை மருமணமாகத்தான் கருதுகிறது தர்ம சாஸ்திரம். உறுதிமொழியை மீறும் செயலை பாவ காரியமாகப் பார்க்கிறது அது. இரு பெற்றோரும் ஒன்று சேர்ந்து செய்யும் சடங்கு இது. வேத விற்பன்னர்கள், பெரியோர்கள் நிறைந்த அவையில் மேளதாளத்தோடு செயல்படும் நிச்சய தாம்பூலம், திருமண சமஸ்காரத்தின் முதல் நாழிகைக் கல்.

## மணி ஓசையின் தனித்தன்மை

பூஜை நேரங்களிலும். கோயில்களிலும் மட்டும் பயன்படுத்தியிருந்த மணி இப்போது வீடுகளில் அழைப்பு மணியாகவும் பயன்படுத்தி வருகின்றனர். பூஜைக்கு பயன்படும் ஒரு பெருளாகவே மணியைப்பற்றி நாம் கருதி வந்தோம். ஆனால் மணியோசையை யாரும் ஆராய்ந்தறிய முன்வருவதில்லை. கிராமப்புறத்து செம்மண் சாலைகளில் ஊர்ந்து நகரும் மாட்டு வண்டிகளில் மாடுகளின் கழுத்திலிருந்து எழும்பும் மணியோசையைப் பற்றி நம் கவிஞர்கள் அழகாக வர்ணித்துள்ளனர். மணியோசை ஓர் ஓம்கார நாதம் என்பதே அதை ஆராய்ந்தவர்கள் கண்டறிந்தது. அலை போல் உயர்ந்து படிப்படியாகத் தாழ்ந்து ஒரு குறிப்பிட்ட அளவில் உயரும் ஓம் என்ற பிரவண மந்திரத்துக்கு மனதை உணர்வூட்ட இயலும் என்று அவர்கள் கருத்து. பக்தர்களை பரவசத்திற்கு கொண்டு செல்லும் இயல்பு இவ்வோசைக்கு உண்டு என்பதை நாம் கண்டறிந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வளமான வாழ்விற்கு ஃபெங் ஷூய்

**உத்தரம் – தீய விளைவைத் தரும்: எச்சரிக்கை தேவை**

வீட்டு மேற்கூரையிலுள்ள உத்தரத்தைப் பொறுத்தமட்டில் ஒருவர் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். இப் பிரச்சனையில் நீங்கள் விழிப்புடன் இருப்பதற்கு தேவையான அறிகுறிகளைப் பெறுவீர்கள் என்பதோடு, உத்தரத்தினால் விளையும் கெடுபலன்கள் என்னவென்பதையும் நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். உத்தரத்திற்குக் கீழே படுக்கும் ஒருவனுக்கு துரதிர்ஷ்டமே உண்டாகும். காரணம் உத்தரம் கட்டடத்தின் முழுச் சுமையையும் தாங்குகிறது. அதனால் அது நல்லதிர்ஷ்டத்தை எழ விடாமல் கீழே போட்டு அழுத்துகின்றது. சாப்பாடு மேஜைக்கு மேலே இருக்கும் உத்தரமும் கெடுபலன் தரவல்லதாகும். உத்தரத்திற்குக் கீழே அமர்ந்து வேலை செய்தீர்கள் என்றால் அந்த வேலை, செய்வதற்குக் கஷ்டமாக இருக்கும் என்பதோடு உங்கள் திட்டப்படி அதனை முடிக்கவும் முடியாது.

உத்தரத்திற்கு கீழே அமர்ந்து படிக்கும் மாணவ மாணவிகள் தங்கள் படிப்பில் கவனம் செலுத்த முடியாது என்பதோடு தங்கள் தேர்வுகளில் மோசமான முடிவுகளையே பெறுவர். உத்தரத்தினால் விளையும் இப்பிரச்சனைக்குத் தீர்வு, உத்தரத்தை மறைத்து உத்தரத்திற்குக் கீழே ஒரு தட்டியை (False Ceiling) அமைத்துவிட வேண்டும். மற்றொரு தீர்வு, மூங்கில் குழல்களைக் கட்டித் தொங்கவிடுவதாகும். படத்தில் காட்டியுள்ளபடி ஒரு ஜோடி மூங்கில் குழல்களை உத்தரத்திற்கு மேலே 45 பாகை கோணத்தில் கட்டித் தொங்கவிடுங்கள். மூங்கில் குழல்கள், தீய "சி" யைத் தனது ஓட்டையின் வழியே கவர்ந்து அதனைத் தாமதப்படுத்தி, பிறகு நேர்முகச் சக்தியாக மாற்றுகின்றன.

**45 கோணத்தில் மூங்கில் குழல்கள்**




# RICH BUY

Dealers in Branded Watches & Watch Repairs



WESTAR - CASIO - SEIKO - TITAN CITIZEN - Q & Q

Shop # 340/A Galle Road, Wellawatte. Sri Lanka.
Tel: Shop 0774 659 092

# JEEVA ALUMINUM FABRICATORS

- Doors & Window,
- Shop Fronts
- Partition, Ceiling
- Curtain Walls
- Special Aluminum Pantry Cupboards
- Tempered Glass
- Bath Room Cubicles, குறைந்த விலையில் சிறந்த சேவை
- Cladding Aluminum Ceiling,
- Office Partition % Roof Works



WWW. aluminlanka.com
mail@aluminlanka.com

77B, High Level Road, Kirulapone. Tel : 0774 659 092



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநெறி

## வினா விடை தொகுப்பு – தரம் 8

## 16. ஆலயக் கிரியைகள்

**42. படைத்தல் தொழிலை எக் கிரியைகள் குறிக்கின்றன?**

கொடியேற்றமும் அதற்கு முன்னுள்ள கிரியைகளும் படைத்தலைக் குறிக்கின்றன.

**43. "கொடியேற்றம்" எதனை குறிக்கிறது?**

ஆணவம் வலியிழந்து, ஆன்மா மலநீக்கம் பெறுதற் பொருட்டுத் திருவருளாகிய கொடியை ஏற்றுவதையே இது குறிக்கும்.

**44. மகோற்சவத்தில் காத்தலைக் குறிக்கும் திருவிழா எது?**

வாகனத் திருவிழா, வேட்டைத் திருவிழா. என்பன

**45. அழித்தலைக் குறிக்கும் மகோற்சவம் எது?**

தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும்.

**46. மறைத்தலைக் குறிக்கும் மகோற்சவம் எது?**

சூர்ணோற்சவம் மறைத்தலைக் குறிக்கும்.

**47. இறுதி நாளில் நடைபெறும் தீர்த்தோற்சவம் எதனைக் குறிக்கும்?**

இறுதிநாளில் தீர்த்தோற்சவம் அருளலை குறிக்கின்றது.

**48. நைமித்திய கிரியைகளில் மிக விசேடமானது எது?**

மகாகும்பாபிஷேகம் மிக விசேடமானது.

**49. கும்பாபிஷேகம் வேறு எவ்வாறு கூறப்படும்?**

குடமுழுக்கு அல்லது கும்பநீராட்டு எனக் கூறப்படும்.

**50. கும்பாபிஷேகம் எத்தனை வகைப்படும். அவை எவை?**

நான்கு வகைப்படும். ஆநாவர்தனம், ஆவர்தனம், புனராவர்தனம், அந்தரிதம் என்பன.

**51. அநாவர்தனம் எனப்படுவது?**

புதிதாக ஆலயம் ஒன்றை அமைத்து அங்கு புதிதாக ஒரு மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது.

**52. பிரதிஷ்டை என்பதன் பொருள் என்ன?**

நன்கு நிலை நிறுத்துதல் என்பது பொருளாகும்.

**53. ஆவர்த்தனம் என்பது யாது?**

முன்பிருந்த ஆலயம் முற்றாக அழிந்து விட்டால் அவ்விடத்தில் மறுபடி ஓர் ஆலயத்தை அமைத்து கும்பாபிஷேகம் செய்தல் இதுவாகும்.

**54. புனரவைத்தனம் எனப்படுவது யாது?**

பூசை வழிபாடுகள் நிகழும் கோயிலில் திருத்த வேலைகளுக்காக பாலஸ்தாபனம் செய்து, திருத்த வேலைகளை முடித்த பின் மறுபடி மூலமூர்த்தியை பிரதிஷ்டை செய்வது புனராவர்தனம் ஆகும்.

**55. பாலஸ்தாபனம் செய்வது என்பது யாது?**

பூசை வழிபாடுகள் நிகழும் கோயிலில் திருத்த வேலைகளுக்காக மூலமூர்த்தியை அங்கே வேறு இடத்தில தற்காலிகமா வைத்து வழிபாடாற்றுதல் 'பாலஸ்தாபனம்' எனப்படும்.

**56. அந்தரிதம் என்றால் என்ன?**

ஆலயத்தினுள் மரணம், களவு, முதலிய ஆசாரக் குறைவு (குற்றங்கள்) ஏற்பட்டால் அவற்றை நீக்குவதற்கு நிகழும் பிரதிஷ்டை 'அந்தரிதம்' எனப்படும்.

**57. ஒரு ஆலயத்தில் எத்தனை வருடங்களுக்கு ஒரு முறை குட முழுக்கு நிகழ வேண்டும்?**

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை யாவது குடமுழுக்கு நிகழ வேண்டும் என்பது ஆகம விதியாகும். பல ஆண்டு களுக்கு ஒரு முறை குடமுழுக்கு நிகழ்வதால் இதனை தரிசித்தல் யாம் பெற்ற பெரும் பேறாகும் எனலாம்.

**58. பின்வரும் சொற்களுக்கான விளக்கங்கள்**

கொடிமரம் - பதி;

கொடிச்சீலை - ஆன்மா;

கொடிகட்டப்பட்டிருக்கும் தருப்பை கயிறு- பாசம்;

கொடியேறத்துணைபுரியும் மஞ்சட்கயிறு -திருவருள்.

தொடரும்

அறிவே கடவுள், அன்பே வாழ்வு ஒன்றில்லாமல் ஒன்றுக்கு சிறப்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் தெளிவு



## கூடா ஒழுக்கம்

**01. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்.**

**பொருள்:** வஞ்சமனத்தானது பொய் யொழுக்கத்தை அவனுடைய உடம்பாக அமைந்து திகழும் ஐந்து பூதங்களும் கண்டு தம்முள்ளே எள்ளிச் சிரிக்கும்.

**02. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம் தான்அறி குற்றப் படின்.**

**பொருள்:** தன் நெஞ்சம் தான் அறிந்து செய்யும் குற்றத்தில் தங்குமானால், அத்தகையவனது வானத்தைப் போல் உயர்ந்துள்ள தவக்கோலம் ஒருவனுக்கு என்ன பயனைத் தரும்?

**03. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம் புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.**

**பொருள்:** மனவலிமை இல்லாதவன் மேற்கொள்ளும் வலிய தவத்தோற்றம், புலியின் தோலைப் பசு போர்த்துக்கொண்டு பயிரை மேய்ந்தாற் போன்றதாகும்.

**04. தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.**

**பொருள்:** தவக்கோலத்தில் மறைந்து கொண்டு தவம் அல்லாத தீயசெயல்களைச் செய்தல், கொலை குறித்த வேடன் புதரில் மறைந்து நின்று பறவைகளை வலைவீசிப் பிடித்தலை ஒத்தது.

**05. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று ஏதம் பலவுந் தரும்.**

**பொருள்:** பற்றுக்களைத் துறந்துவிட்டதாகப் பாசாங்கு செய்து கொண்டு வாழ்பவரின் பொய் ஒழுக்கம் "என்ன செய்தோம்? என்ன செய்தோம்?" என்று வருந்தும்படியான பல்வகைத் துன்பங்களையும் தரும்.

**06. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்.**

**பொருள்:** மனதில் பற்றுக்களைத் துறக்காமல் புறத்திலே துறந்தவரைப் போல காட்டிக்கொண்டு வஞ்சனை செய்து வாழ் கின்றவரைப்போல் இரக்கமற்றவர்கள் எவரும் இல்லை.

**07. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி மூக்கிற் கரியார் உடைத்து.**

**பொருள்:** புறத்தோற்றத்தில் குன்றுமணியின் நிறம் போன்ற செம்மையான தோற்றம் உடையவராகக் காணப்பட்டாலும் உள்ளத்தில் குன்றுமணியின் மூக்குப்போலக் கறுத்தி ருப்பவரும் உண்டு.

**08. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி மறைந்தொழுகு மாந்தர் பலர்.**

**பொருள்:** மனத்தில் மாசு நிறைந்திருக்கத் தவத்தால் மாண்பு பெற்றவனைப்போல் நீராடி மறைவாக வாழ்வு நடத்தும் வஞ்சனையுடைய மாந்தர்களும் இந்த உலகில் பலர் உள்ளனர்.

**09. கணைகொடிது யாழ்கோடு செவ்விது ஆங் கன்ன வினைபடு பாலால் கொளல்.**

**பொருள்:** நேராகத் தோன்றினாலும் அம்பு கொடுமை செய்வது: வளைவானாலும், யாழின் கொம்பு இன்னிசையைத் தருவது: மக்களின் பண்புகளையும் இப்படியே அவரவர் சொல்வகையால் அறிந்துகொள்ள வேண்டும்.

**10. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்.**

உலகம் பழிக்கும் தீச்செயல்களைத் தவிர்த்து விட்டால் மொட்டையடித்துக் கொண்டாலும் சடையைச் செயற்கை முறையில் வளர்த்துக் கொள்ளலும் வேண்டா.

தொடரும்

### இடைவெளியை நிரப்புங்கள்!

1. கோவர்த்தண மலையை விரலால் தூக்கியவர்,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கி | | ஷ் | | ர் |

2. கும்பாபிஷேகத்தை இப்படியும் அழைப்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கு | | மு | | க் | |

3. 43 முக்கோணங்களைக் கொண்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீ | | க் | | ர | |

4. ஆண்கள் காதில் அணிவது

| | | | | |
|---|---|---|---|---|
| | டு | | க | |

5. சபரி மலைக்கு முதல் முறையாக செல்பவர்

| | | | | |
|---|---|---|---|---|
| க | | னி | | மி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்தனை

## புதிய கோணங்களில்...

முடியாது என்று தோன்றும் ஆரம்ப அபிப்பிராயத்திற்கு நாம் அடிப்பணியக் கூடாது.பார்வையை விரிவுப்படுத்த வேண்டும்.

முன்னோர் காலத்தில் சீனாவில் ஒரு பெரிய வியாபாரி, தனக்குப்பின் வியாபாரத்தை தன் மூன்று மகன்களில் யார்வசம் ஒப்படைப்பதென்று தீர்மானிக்க அவர்களுக்கு ஒரு போட்டி வைத்தான். யார் அதிகளவு சீப்புகளை மடாலயத்திற்கு விற்கிறார்களோ, அவன்தான் தன் வியாபாரத்தை நிர்வகிக்கத் தகுதியானவன் என்பதே அந்தப் போட்டி.

'மடாலயத்தில் மொட்டை அடித்துள்ள சீடர்களிடம் சீப்பு வியாபாரமா?' என்று மகன்கள் மூவரும் ஆரம்பத்தில் திகைத்தனர்.

ஒரு சீப்பைக்கூட விற்க முடியாதே என்று நினைத்தனர். ஆனால் பின் மூவரும் முயற்சிக்கலாமென்று முடிவெடுத்தனர். அவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த சில நாட்கள் அவகாசம் கொடுத்த அந்த வியாபாரி, அது முடிந்தவுடன் மகன்களை அழைத்து அவர்கள் எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறார்களென்று கேட்டான்.

ஒரு மகன் சொன்னான். "நான் இரண்டு சீப்புகள் மடாலயத்திற்கு விற்றேன்." வியாபாரி, "எப்படி?" என்று கேட்டான்.

"சீடர்களிடம் அந்த சீப்பை முதுகு சொறியவும் உபயோகிக்கலாம் என்று சொல்லிப்பார்த்தேன். இரண்டு சீடர்களுக்கு அது சரியென்றுபட்டது. அதனால் அவர்கள் இருவரும் இரண்டு சீப்புகள் வாங்கினார்கள்."

இன்னொரு மகன் சொன்னான். "நான் பத்து சீப்புகள் விற்பனை செய்தேன்." வியாபாரி ஆச்சரியத்துடன் கேட்டான். "எப்படி.?" "வழியெல்லாம் காற்று அதிகமாக உள்ளதால், மலை மேலுள்ள அந்த மடாலயத்திற்குப் போகிறவர்களின் தலைமுடியெல்லாம். பெரும்பாலும் கலைந்துவிடுகிறது. அப்படிக் கலைந்த தலைமுடியுடன் குருவை தரிசிக்க பக்தர்கள் செல்வது குருவுக்கு செய்யும் அவமரியாதையென்று மடாலயத்தில் சொன்னேன். ஒரு பெரிய கண்ணாடியும் சில சீப்புகளும் வைத்தால் அவர்கள் தங்கள் தலைமுடியை சரி செய்து கொண்டு குருவை தரிசிக்கச் செல்வது நன்றாக இருக்குமென்று ஆலோசனையும் சொன்னேன். ஒப்புகொண்டு பத்து சீப்புகள் வாங்கினார்கள்." வியாபாரி அந்த மகனைப் பாராட்டினான்.

மூன்றாம் மகன் சொன்னான். "நான் ஆயிரம் சீப்புகள் விற்பனை செய்தேன்." வியாபாரி ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றான். "எப்படி?"

"அந்த மடாலயத்திற்கு ஏராளமானோர் வந்து பொருளுதவி செய்கிறார்கள். அவர்கள் உதவியைப் பாராட்டி, குருவின் ஆசிகள் அவர்களை வழிநடத்தும் வண்ணம் ஏதாவது ஒரு நினைவுப்பரிசை அவர்களுக்கு வழங்கினால், அது மேலும் பலரை மடாலயத்திற்கு உதவி செய்யத்தூண்டும் என்றேன். அந்த மடாலயத் தலைவர் என்ன நினைவுப் பரிசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரலாமென்று கேட்டார்.

நான் மடாலய குருவின் வாசகங்கள் பதித்து வைத்திருந்த சில சீப்புகளை நீட்டினேன். அந்த சீப்புகளை தினமும் உபயோகிக்கும் பக்தர்களுக்கு, அந்த உபதேசங்களை தினமும் காணும் வாய்ப்பும் கிடைக்கும். அந்த உபதேசங்கள் அவர்களை தினமும் வழி நடத்துபவையாகவும் இருக்குமென்று தெரி வித்தேன். அது நல்ல யோசனையென்று நினைத்த மடாலயத் தலைவர் உடனடியாக அப்படி குருவின் வாசகங்கள் பதித்த ஆயிரம் சீப்புகளை வாங்க ஒப்புக்கொண்டார்."

அந்த வியாபாரி எந்த மகனிடம் தன் வியாபாரத்தை ஒப்புகொடுத்தாரென்று சொல்ல வேண்டியதில்லை. மொட்டைத்தலை சீடர்களிடம் சீப்பு விற்கப்போவது கண்டிப்பாக ஆகாத வேலையென்று நினைப்பதுதான் பொதுவாக நாம் காணக்கூடிய மனோபாவம். விதி சில சமயங்களில் நம்மைக் கொண்டு சேர்க்கும் சூழ்நிலையும் கிட்டத்தட்ட இதேபோலத்தான் இருக்கும். அதிலிருந்து மீள்வதற்கு வழியே இல்லையென்று முதலில் தோன்றும். ஆனால் அதை ஒப்புக்கொண்டு முடங்கி நிற்போமானால், நாம் தோல்வியை ஒப்புகொண்டுவிட்டோம் என்பது பொருள்.

அந்த வியாபாரியின் மகன்கள் ஏதாவது முயற்சி செய்யவேண்டுமென்று தீர்மானித்தது. புத்திசாலித்தனமான செயல். அதுபோல நாம் இருக்கும் அந்த மோசமான சூழ்நிலைக்கு தீர்வே இல்லையென்று ஆரம்பத்தில் தோன்றினாலும், ஏதாவது செய்ய வேண்டு மென்று தீர்மானிப்பதுவே அறிவு.

முயற்சிகளிலும் பலவகையுண்டு என்பதற்கு வியாபாரியின் மூன்று மகன்களே உதாரணம்.

ஒரு மகன் மொட்டைத்தலை சீடர்களுக்கு தலை வார சீப்பு பயன்படாவிட்டால் வேறெதற்காவது பயன் படுமா என்று யோசித்ததன் பலனாக இரண்டு சீப்புகள் விற்க முடிந்தது. சீடர்களுக்கு சீப்பு பயன்படாமல் போனாலும் அவர்களை சார்ந்தவர்களுக்குப் பயன்படுமா என்று இன்னொரு மகன் யோசித்ததால் பத்து சீப்புகள் விற்கமுடிந்தது.

ஆனால் இந்த இரண்டு மகன்களுடைய முயற்சியாலும் அந்த மடாலயத்திற்கு தொடர்ந்து சீப்பு விற்க வழியில்லை. அவர்களுடைய விற்பனை ஒரு முறையோடு முடிந்துவிட்டது.

மூன்றாம் மகன்கூட இரண்டாம் மகன் போலவே மடாலய சீடர்களுக்கு பயனில்லாவிட்டாலும் அவர்களுடன் சம்பந்தப்படும் மற்றவர்களுக்குப் பயன்படுமல்லவா என்கிற சிந்தனையைத்தான் செய்தான். அந்த வெறும் சீப்பை குருவின் உபதேசங்களைச் செதுக்கி அதை அவர்கள் விரும்பும் வண்ணம் உயர்த்தி, அதை நன்கொடை வழங்கும் பக்தர்களுக்கு குருவின் ஆசியாக மாற்றி விற்பனை செய்தான். அவனுடைய வித்தியாசமான சிந்தனை, அதற்காக அவன் எடுத்துக்கொண்ட உழைப்பு எல்லாம் சேர்ந்து மற்றவர்களை மிஞ்சும் வண்ணம் வெற்றிபெற்றது. மேலும் மற்ற இருவரைப் போல் இவனுடைய விற்பனை ஒருமுறையோடு முடிவதல்ல. மடாலயத்திற்கு நன்கொடைகள் தருகிறவர்கள் அதிகரிக்க அதிகரிக்க, இவன் விற்பனையும் அதிகரிக்கும்.

ஒரு சூழ்நிலையை ஒரே நேர்கோணத்தில் பார்ப்பது இரண்டு சீப்பு விற்ற மகனைப் போல அற்பவிளைவுகளையே ஏற்படுத்தும். பார்வையை சற்று விரிவுபடுத்தி வேறு கோணங்களிலும் சிந்தித்து செயல்படுவது பத்து சீப்பு விற்றவன் முயற்சி போல நல்ல விளைவுகளை அதிகரிக்கும். மேலும் பல கோணங்களிலும் சிந்தித்து, தன் திறமையையும் உழைப்பையும் சேர்த்து முயற்சி செய்பவன் அடையும் நன்மைகள் ஆயிரம் சீப்புகள் விற்பனை செய்தவன் முயற்சியைப்போல பல மடங்கு அதிகரிக்கும். ஆரம்பத்தில் வழியே இல்லை யென்று தோன்றியது மாறி, புதிய பிரதே சங்களுக்கு நம்மை அழைத்துச்செல்லும் வாய்ப்பாக அமையும்.

எனவே எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும் மனம் துவண்டுவிடக்கூடாது. முடியாது என்று தோன்றும் ஆரம்ப அபிப்பிராயத்திற்கு அடிபணியக்கூடாது. பார்வையை விரிவுபடுத்தி புதிய புதிய கோணங்களில் சிந்தித்து, சிறிய மாற்றங்களால் பெரிய விளைவுகளை ஏற்படுத்த முடியுமாவென்று யோசிக்கவேண்டும். பொறுமையுடனும், நம்பிக்கையுடனும், துடிப்புடனும் முயன்றால், அந்தக் கடினமான சூழ்நிலையே நாம் அடையப்போகும் அளப்பரிய வெற்றிகளுக்கு அஸ்திவாரமாக அமையக்கூடும்.

**எந்த ஒரு செயலையும் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு செய்கிறபோது, மிகப்பெரிய வேலைகளும் நமக்கு எளிதாகி விடும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சக்ரம்

ஸ்ரீசக்ரத்திற்கு 43 முக்கோணம். அவை முறையே சிவகோணம் -3, சக்திகோணம் - 5, அஷ்டதளம், ஷோடச தளம், மூன்று வலயங்கள், 4 - சக்ரங்கள், பிந்துநாதம் கலை இவைகளுமாகச் சேர்ந்து அமைவதாகும். இந்த ஸ்ரீசக்ரத்திலே யோக சாஸ்திரங்களில் விளக்கி உள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களும் அடங்கியுள்ளன. அதாவது முக்கோணம் மூலாதாரமாகவும், அஷ்டாரம் சுவாதிஷ்டானமாகவும், தசாரம் மணிபூரகமாகவும், பஹிர் தசாரம் அனாஹதமாகவும், மன்வச்ரம் விசுத்தியாகவும், பிந்து ஆக்ஞையாகவும் கூறப்பட்டிருக்கின்றது. (அண்டத்திலே சுவாதிஷ்டான க்ஷேத்ரமாக திருஆனைக்கா விளங்குகின்றது.)

சரீரத்திலே மூலாதாரத்திற்கு மேலே இரண்டு அங்குலத்தில் ரத்னம் நான்கு தளங்களைக் கொண்டு சுவாதிஷ்டானம் என்னும் சக்ரமானது விளங்குகிறது. ஆறு இதழ்களோடு ஆறு அக்ஷரங்களோடு செந்நிறப்பொலிவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கும் அத்தாமரையை அறிஞர்கள் சுவாதிஷ்டானம் என அழைப்பார்கள். அவ்விடத்தில் பாலன் என்ற சித்தனும், ராகினி என்ற தேவியும் வசிக்கின்றனர்.

ஆறு இதழ்களிலும் பந்தினி, பத்ரகாளி, மஹாமாயா, யசஸ்வினி, ராமசம்பேஷ்டி என ஆறு தேவிகளும் வசிக்கின்றனர். இந்த ஆதாரமானது தனக்கு மேலான அக்னி தத்துவத்துடன் இணைந்து விளங்குகிறது. இவ்விடத்திலேதான் குண்டலினி தானே அதிஷ்டானமாகி கிரந்திகளைச் செய்து கொண்டிருக்கும் என சாத்திரங்கள் கூறுவதால், அந்த ஆதாரத்திற்குச் சுவாதிஷ்டானம் எனப் பெயர்.

சித்தாந்த சாத்திரமானது சரஸ்வதியோடு கூடிய பிரம்மாவை, அபயம், வரதம், கமண்டலு, அட்சரமாலை இவைகளை நான்கு கைகளிலும் தரித்துக் கொண்டு அக்ஷரங்களோடு கற்பனை செய்யப்பெற்ற பத்மத்திலே காந்தியுடன் சிந்தனை செய்யவேண்டும் எனக் கூறப்படுகின்றது. சக்தி உபாசகர்கள் மேதஸ் என்ற தாதுவை தனது இருப்பிடமாகக் கொண்ட காசினி என்ற தேவதையைத் தியானம் செய்கின்றார்கள். இதே போன்று மற்ற ஆதாரங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீசக்ரத்தைப் பூஜிக்கும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் குருவினுடைய பரம்பரை வழிவந்த உபதேசம் பெற்று ஒவ்வொன்றையும் நன்கு கவனித்துச் செய்யவேண்டும். குருவினுடைய முன்னிலையில் பூஜைகள் செய்து, அவருடைய அனுமதியைப் பெற்றுத் தனிமையில் பூஜையைச் செய்யவேண்டும் என்பதும் நமது முன்னோர்களுடைய மரபாகும். அம்பிகையை ஸ்ரீசக்ரம் அல்லது ஸ்ரீசக்ர மேருவில் நவாவரண பூஜை செய்வது சிறப்பு. நவ ஆவரணம் என்றால் ஒன்பது சுற்றுக்கள் என்பது பொருள். ஆவரணம் என்றால் சுற்று அல்லது அடைப்பு என்று பொருள் கொள்ளலாம்.

## நவாவரண அமைப்பு....

ஸ்ரீசக்ரத்தில் முதல் சதுர வடிவாய் உள்ள மூன்று கோடுகள் த்ரைலோக்ய மோகன சக்ரம் எனப்படும். இது முதலாவது ஆவரணம். இதில் உள்ள சக்திகள் பிரகடயோகினிகள் எனப்பெறுவர்.

இரண்டாவது ஆவரணம் ஸர்வாசாபரிபூரக சக்ரம் ஆகும். இதில் உள்ள சக்திகள் குப்தயோகினி ஆவர்.

மூன்றாவது ஆவரணம் எட்டுத்தளம் உடைய ஸர்வஸம்க்ஷோபண சக்ரம். இதில் உள்ள சக்திகள் குப்ததர யோகினிகளாவர்.

நான்காவது ஆவரணமான பதினான்கு கோணம் உடைய ஸர்வஸௌபாக்ய சக்ரத்தில் ஸம்ப்ரதாய யோகினிகள் வசிக்கின்றனர்.

ஐந்தாவது ஆவரணம் வெளிப்படுத்துக்கோணம், ஸர்வரக்ஷாகரசக்ரம். இதில் உள்ள சக்திகள் குலோத்தீர்ண யோகினிகளாவர்.

ஆறாவது ஆவரணம் பத்துக் கோணமுடைய ஸர்வார்த்தஸாதகசக்ரம். இதில் உள்ள தேவதைகள் நிகர்ப்பயோகினிகள்.

ஏழாவது ஆவரணம் எட்டுக்கோணமுடைய ஸர்வரோகஹர சக்ரமாகும். இதில் உள்ள சக்திகள் ரஹஸ்யயோகினிகளாவர்.

எட்டாவது ஆவரணம் முக்கோண வடிவமுடைய ஸர்வஸித்திப்ரத சக்ரமாகும். தேவதைகள் அதிரஹஸ்ய யோகினிகளாவர்.

ஒன்பதாவது ஆவரணம் சர்வானந்த மய சக்ரம். இது பிந்து வடிவமானது. இதில்தான் பரமேச்வரனும் பரமேச்வரியும் இருந்து உலகை ரட்சிக்கின்றனர்.



## ஸ்ரீ நரசிம்மர்

ஓம்

வஜ்ர நாகாய வித்மஹே

தீக்ஷ்ண தம்ஷ்டராய தீமஹி

தந்நோ நரசிம்ஹ ப்ரசோதயாத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவறுகளைப் பெரியோர்கள் கண்டிக்காவிட்டால்..

காமனின் பாணத்தால் கட்டுண்ட ராவணனை சீதையின் மீதிருந்த மோகம் ஆக்கிரமித்து, பல சிக்கல்களில் தள்ளி, இறுதியில் அவனையே அழித்தது. ராவணனின் ஆசை வார்த்தைகள் சீதையிடம் மனக்கசப்பை உண்டாக்கின: கோபத்தைத் தூண்டின. அவள் அவனை எதிர்த்துப் பேசிய சொற்கள் மிரட்டல், புகழ்ச்சி மற்றும் உபதேசம் ஆகியவற்றின் கலவையாக, அவற்றில் ஏதேனும் ஒன்றாவது ராவணனின் தீய குணத்தை மாற்றாதா என்று பார்ப்பது போல் அமைந்தன.

ராவணனை நல்லதொரு முடிவுக்கு வரத் தூண்டும், உறுதியான உயர் தொனியில் அமைந்த சீதையின் உபதேசம் இது:

'...ராவணா, இலங்கையில் நல்லவர்களே கிடையாதா? நன்னடத்தையை மதித்துப் போற்றி அதன் வழி செல்லும் நேர்மையானவர்கள் இங்கில்லையா? அவ்வாறு இருக்க முடியாது. இலங்கை பெரிய நாடு, இங்கு வேதங்கள் ஓதப்படுகின்றன. நம் மதம் நம்பிக்கையுடன் செயல்படுத்தப்படுகிறது. எனவே இங்கு பல நல்லவர்கள் இருக்கத்தான் வேண்டும். நீதான் அவர்கள் வழிநடப்பதில்லை என்று தோன்றுகிறது. இங்குள்ள நல்லவர்களை நீ மதிப்பதில்லை போலும்.'

இந்தச் சூழ்நிலையை மேம்படுத்த காட்டும் ஒரு விளக்கம்: நல்லவர் கூறும் உபதேசங்களுக்கு ராவணன் செவிமடுப்பதில்லை என்று சீதை அச்சம் கொள்கிறாள். இது பெரியவர்களின் கடமையை எடுத்துக் கூறுகிறது. நல்மனம் கொண்ட முதியவர்கள் தமக்குத் தாமே, 'அவன் ஒரு முட்டாள். அவனருகில் நான் செல்ல மாட்டேன். என் வயதையோ, நரைத்த தலைமுடியையோ அவன் மதிக்க மாட்டான். அவனிடம் பேசி என்ன நன்மை விளையப் போகிறது?' என்று கூறி வாளாவிருக்கக் கூடாது. நல்லவர்கள் இத்தகைய மனப்பான்மை கொள்வது தகாது என்பதே சீதாதேவியின் எண்ணம். உங்கள் உண்மையான நண்பர்கள் எவராயிருந்தாலும், அவர்கள் சம வயதோ, பெரியவர்களோ, சிறியவர்களோ, நீங்கள் அவர்களது நன்மையைக் கருதினால், மற்றவர்கள் எது செய்தாலும், கூறினாலும், அவர்களுக்கு சரியான வழியைக் காட்ட வேண்டும். முடிந்த சமயங்களில் நல்ல அறிவுரைகளைக் கூறுங்கள்.

அவர்களது தீய புத்தியால் சறுக்கிக் கீழே விழும்போது பார்த்துக் கொண்டு சும்மா இருத்தலாகாது. எல்லாம் முடிந்து போன பின்பு அவர்களிடம், அவர்களது விதியை நொந்து அழுதபடி, "நான் அன்றே உன்னை எச்சரித்திருப்பேன். நீதான் கேட்பவனில்லையே" என்று கூறாதீர்கள்.

பிறர் செவிமடுத்து கேட்டாலும் கேட்க மறுத்தாலும், ஒரு நண்பனின் கடமைகள் எவ்வித பயமின்றிச் செயல்படுத்தப்பட வேண்டும். அது அவர்களுக்கு எதிர்வரும் தீமையைக் குறித்த எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும். முடிவில் அவன் வீழ்ந்துபட்டாலும், சரியான வழிமுறை கிடைக்காததால் வீழ்ந்தான் என்றில்லாமல், தெரிந்தே தான் விழ்ந்தான் என்ற வகையில் அமைய வேண்டும்.

பலரும் தம் தீய செயல்களைத் தெரியாமலே செய்து, தன் செயல்களைச் சிலர் கவனித்து வருகிறார்கள் என்ற சந்தேகமும் இல்லாமல், தான் மேற்கொண்ட பாதையின் முடிவில் அவர்களுக்கு அழிவு காத்திருக்கிறது என்ற உணர்வுமின்றி உள்ளனர். அத்தகையவர்களுக்குச் சரியான நேரத்தில் கூறும் எச்சரிக்கை பயனளிக்கக்கூடும்.

ராமாயணம் போன்ற உயர்ந்த நூல்களையும், அதிலுள்ள உயர்ந்தோரின் மொழிகளையும் நாம் படித்துப் பயனுற முடியும் என்பதால், நான் ராவணனுக்குச் சீதை கூறிய அறிவுரையை வலியுறுத்துகிறேன்.

வாழ்வில் ஏற்படும் இது போன்ற சிக்கலான சூழ்நிலையில், நல்லவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதும், சஞ்சலமுள்ளவர்கள் இதுபோன்ற உபதேசங்களைப் பெறும்போது என்ன செய்ய வேண்டும் என்பதும் மிகச் சரியான சொற்களின் மூலம் சீதை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது வால்மீகி இராமாயணத்தின் இப்பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வர்ணம் தீட்டுங்கள்!



10 வித்தியாசங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*A portrait is a Perfect Gift*

# PORTRAIT

## IN PASTEL / PENCIL

by YOGA



Ideal for:

•Weddings •Birthdays •Retirements •Special events much more..

*100% Hand Drawing



பென்சில் ஓவியத்தில் இலங்கையில் பிரபல

திரைப்பட, பக்தி பாடல்கள் பாடி புகழ் பெற்ற பாடகி கலாவதி சின்னசாமி அவர்கள்

**FLEX Graphic** 4, IBC Road, Wellawatte. **Call: 0777-614-186**

**Email: flexvijay@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னர் ஹாஸ்...ஹா!



உங்களைப் புகழ்ந்து பாடுவதற்கு புலவர் வந்திருக்கிறார் மன்னா!

எனக்கு எதிரிவெளியில் இல்லை அமைச்சரே!



எதிரியின் வான்வழி தாக்குதலால் பதுங்குகுழியில் இருந்த மன்னருக்கு எப்படி காயம் ஏற்பட்டது

"ஹெலிகாப்டர் சத்தம் கேட்டதும் வேடிக்கை பார்க்க மேலே வந்திருக்கிறார்!

"மன்னா, ஒரு காலண்டர் அதிகமா இருக்கு!

பதுங்குகுழியில மாட்டிரு!"



"மன்னர் ஏன் மகாராணிகளை வரிசையாக நிற்க வைத்து எண்ணிக்கொண்டு இருக்கிறார்!"

நகர்வலம் சென்று வருவதற்குள் நடுவுல கொஞ்சம் மகாராணிகளைக் காணோமாம்.!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆண்கள் கடுக்கன் போடும் பழக்கம்

காதுகுத்தி, தோடுகள் அல்லது கடுக்கன்களை அணிவது அழகுக்காக மட்டுமல்ல: அதற்கு ஒரு காரணம் உள்ளது.

நமது உடலிலுள்ள ஒவ்வொரு பாகத்தையும், உறுப்புக்களையும் கட்டுப்படுத்தும் அக்குபங்சர் புள்ளிகள் (வர்மப் புள்ளிகள்) நம் காதுகளில் உள்ளன. அந்தப் புள்ளிகளைத் தூண்டிவிடுவதன் மூலம் நம் உள்ளுறுப்புக்களைப் பலப்படுத்த முடியும். பல நோய்களையும் குணமாக்கலாம்.

நாம் தோடு அணியும் இடத்தில் இருக்கும் வர்மப் புள்ளி நம் கண்களை இயக்கும் வர்மப் புள்ளி ஆகும். இந்த வர்மப்புள்ளி ஒரு செ.மீட்டரை விட அளவில் சிறியதாக இருக்கும்.

சரியாக அந்த புள்ளியை கண்டுபிடித்து காது குத்த வேண்டும். (இது ஒருவகை அக்குபங்சரே) பின்னர் அது தங்கத்தினாலான தோடை அணியும் போது அது (ஒரு அக்கபங்சர் ஊசியைப் போல) தொடர்ந்து அந்தப் புள்ளியைத் தூண்டிக் கொண்டேயிருக்கும்.

தங்கம் தூண்டிவிடும் (Tonification) தன்மைகொண்ட உலோகம். வெள்ளி பலத்தைக் குறைக்கும் (Sedetion) உலோகம். எனவே தங்கத்தால் ஆன தோடுகளையே அணிய வேண்டும். புதிய நாகரீகம் என்ற பெயரால் வெள்ளித் தோடுகளைப் போட்டால் கண்கள் பலவீனமாகும்.

"எங்க தாத்தா 90 வயதிலும் கண்ணாடி போடாமலேயே வாசிப்பார் ஆனால் இன்றுள்ள குழந்தைகள் பத்து வயதிலேயே கண்ணாடி போட்டு விடுகிறார்கள்." என்ற புலம்பலை அடிக்கடி கேட்டிருப்பீர்கள். 90 வயதிலும் கண்ணாடி இல்லாமல் வாசித்ததன் சூட்சுமம் காது குத்தியதில் இருக்கிறது.

இன்றும் பெண்கள் அனைவரும் காது குத்தி தோடு போடுகிறார்கள். ஆனாலும் கண்ணாடி அணிகிறார்களே என்ற சந்தேகம் வரும். காது குத்துவது அழகுக்காக என்ற நினைப்பால் வந்த வினை இது!

மிகப் பழமையான காலத்தில் வர்மக்கலைப் பயின்று, வர்மப் புள்ளிகள் ரகசியங்களைத் தெரிந்த வைத்தியர்களே காது குத்தி விடுபவர்களாக இருந்ததால் கண் பார்வையைக் கூராக்கும் வர்மப் புள்ளியில் சரியாகக் காது குத்திவிட்டார்கள். பார்வை கூர்மையாயிற்று. ஆனால் 'வர்மக் கலை' ஒரு ரகசியக் கலையாகவே பாதுகாத்து வரப்பட்டதால், இந்த உண்மைகள் காலப்போக்கில் மறைந்துப் போய்விட்டன.

**உடல் அமைதி பெற மனதை அமைதியாய் வைத்துக்கொள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாங்கம்

| டிசம்பர் | | கார்த்திகை | | | |
|---|---|---|---|---|---|
| 01 | வெள்ளி | 15 | ராகு 10.44 -12.14<br>சுப 6.14 - 7.44<br>எம 3.14 - 4.44<br>குளி 7.44 - 9.14 | வ.பி: திரயோதசி பி.இ 2-32,<br>அச்சுவினி பி.ப 12-26<br>அமிர்தசித்தம் | பிரதோஷவிரதம் |
| 02 | சனி | 16 | ராகு 9.15 -10.45<br>சுப 3.15 - 4.45<br>எம 1.45 - 3.15<br>குளி 6.15 - 7.45 | வ.பி சதுர்த்தசி பி.இ 12-39,<br>பரணி மு.ப 11-24, சித்தம், | திருக்கார்த்திகை<br>விரதம். |
| 03 | ஞாயிறு | 17 | ராகு 4.45 - 6.15<br>சுப 9.15 -10.45<br>எம 12.05 - 1.45<br>குளி 3.15 - 4.45 | பூரணை மு.இ 10-31,<br>கார்த்திகை மு.ப 10-05, சித்தம், | பூரணை விரதம்<br>சர்வாலய தீபம்<br>(வீடுகளில் தீபம்). |
| 04 | திங்கள் | 18 | ராகு 7.45 - 9.15<br>சுப 12.15 - 1.45<br>எம 10.45 -12.45<br>குளி 1.45 - 3.15 | தே.பி: பிரதமை<br>மு.இ 8-15, ரோகினி<br>மு.ப 8-34, அமிர்தம் | |
| 05 | செவ்வாய் | 19 | ராகு 3.16 - 4.46<br>சுப 10.46 -12.16<br>எம 9.16 -10.46<br>குளி 12.16 - 1.46 | தே.பி துதியை மா 5-56,<br>மிருகசீரீடம் சித்தம் கா6-57,<br>திருவாதிரை மரண பி.இ 5-18 | |
| 06 | புதன் | 20 | ராகு 12.17 - 1.47<br>சுப 4.47 - 6.17<br>எம 4.47 - 9.17<br>குளி 10.47 -12.17 | தே.பி: திருதியை பி.ப 3-38,<br>புநர்பூசம் பி.இ 3-43,சித்தம் | சங்கடஹரசதுர்த்தி |
| 07 | வியாழன் | 21 | ராகு 1.47 - 3.17<br>சுப 7.47 - 9.17<br>எம 6.17 - 7.47<br>குளி 9.17 -10.47 | தே.பி சதுர்த்தி பி.ப 1-24,<br>பூசம் பி.இ 2-17 | |
| 08 | வெள்ளி | 22 | ராகு 10.47 -12.17<br>சுப 6.17 - 7.47<br>எம 3.17 - 4.47<br>குளி 7.47 - 9.17 | தே.பி பஞ்சமி மு.ப 11-21,<br>ஆயிலியம் பி.ப 1-02, மரண | |
| 09 | சனி | 23 | ராகு 9.18 -10.48<br>சுப 3.18 - 4.48<br>எம 1.48 - 3.18<br>குளி 6.18 - 7.48 | தே.பி ஷஷ்டி மு.ப 9-32<br>மகம் பி.இ 12.05,<br>அமிர்தசித்தம் | |
| 10 | ஞாயிறு | 24 | ராகு 4.49 - 6.19<br>சுப 9.19 -10.49<br>எம 12.19 - 1.49<br>குளி 3.19 - 4.49 | தே.பி. ஸப்தமி மு.ப 8-02<br>பூரம் ம.இ 11-29 சித்தாமிர்தம்<br>அட்டமி மு.ப. 8.02 முதல் | |
| 11 | திங்கள் | 25 | ராகு 7.49 - 9.19<br>சுப 12.19 - 1.49<br>எம 10.49 -12.19<br>குளி 1.49 - 3.19 | தே.பி அட்டமி கா6-54,<br>நவமி பி.இ 6-13, உத்தரம்.<br>மு.இ 6-13, உத்தரம்<br>மு.இ 11-17,சித்தம் | |
| 12 | செவ்வாய் | 26 | ராகு 3.20 - 4.50<br>சுப 10.50 -12.20<br>எம 9.20 -10.50<br>குளி 12.20 - 1.50 | தே.பி. தசமி பி.இ 6-05, அத்தம்<br>மு.இ 11-35, சித்தம்<br>நவமி பி.இ. 6.13 வரை | |
| 13 | புதன் | 27 | ராகு 12.20 - 1.50<br>சுப 4.50 - 6.20<br>எம 7.50 - 9.20<br>குளி 10.50 -12.20 | தே.பி ஏகாதசி முழுவதும்,<br>சித்திரை பி.இ 12-21,சித்தம் | |
| 14 | வியாழன் | 28 | ராகு 1.51 - 3.21<br>சுப 7.51 - 9.21<br>எம 6.21 - 7.51<br>குளி 9.21 -10.51 | தே.பி ஏகாதசி கா 6-26,<br>சுவாதி அமிர்தம் பி.இ 1-38, | ஏகாதசி விரதம் |
| 15 | வெள்ளி | 29 | ராகு 10.51 -12.21<br>சுப 6.21 - 7.51<br>எம 3.21 - 4.51<br>குளி 7.51 - 9.21 | தே.பி துவாதசி மு.ப 7-21,<br>விசாகம் பி.இ 3-21, சித்தம் | பிரதோஷ விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| டிசம்பர் | | மார்கழி | | | |
|---|---|---|---|---|---|
| 16 | சனி | 01 | ராகு 9.22 -10.52<br>சுப 3.22 - 4.52<br>எம 1.52 - 3.22<br>குளி 6.22 - 7.52 | தே.பி. திரயோதி மு.ப 8-35, அனுசம் பி.இ 5-29 | |
| 17 | ஞாயிறு | 02 | ராகு 4.52 - 6.22<br>சுப 9.22 -10.52<br>எம 12.22 - 1.52<br>குளி 3.22 - 4.52 | தே.பி. சதுர்த்தி மு.ப 10-19, கேட்டை முழுவதும் | அமாவாசை விரதம் |
| 18 | திங்கள் | 03 | ராகு 7.53 - 9.23<br>சுப 12.23 - 1.53<br>எம 10.53 -12.23<br>குளி 1.53 - 3.23 | அமாவாசை பி.ப 12-21, கேட்டை கா 7-56, சித்தம் | |
| 19 | செவ்வாய் | 04 | ராகு 3.23 - 4.53<br>சுப 10.53 -12.23<br>எம 9.23 -10.53<br>குளி 12.23 - 1.53 | வ.பி: பிரதமை பி.ப 2-28, மூலம் மு.ப 10-30, அமிர்தசித்தம் | |
| 20 | புதன் | 05 | ராகு 12.24 - 1.54<br>சுப 4.54 - 6.24<br>எம 7.54 - 9.24<br>குளி 10.52 -12.24 | வ.பி: துதியை பி.ப 4-33, பூராடம்பி.ப 1-02, அமிர்தம் | |
| 21 | வியாழன் | 06 | ராகு 1.54 - 3.24<br>சுப 7.54 - 9.24<br>எம 6.24 - 7.54<br>குளி 9.24 -10.54 | வ.பி திருதியை மா 6-26, உத்தராடம் பி.ப 3-24, சித்தம் கரிநாள் | |
| 22 | வெள்ளி | 07 | ராகு 10.55 -12.25<br>சுப 6.25 - 7.55<br>எம 3.25 - 4.55<br>குளி 7.55 - 9.25 | வ.பி: சதுர்த்தி மு.இ 8-20, திருவோணம் மரண மா 5-31 | சதுர்த்தி விரதம் |
| 23 | சனி | 08 | ராகு 9.25 -10.55<br>சுப 3.25 - 4.55<br>எம 1.55 - 3.25<br>குளி 6.25 - 7.55 | வ.பி பஞ்சமி மு.ப 9-11, அவிட்டம் மு.இ 7-12, சித்தாமிர்தம் | |
| 24 | ஞாயிறு | 09 | ராகு 4.56 - 6.26<br>சுப 9.26 -10.56<br>எம 12.26 - 1.56<br>குளி 3.26 - 4.56 | வ.பி: ஷஷ்டி பி.மு 9-51 சதயம் மு.இ 8-26, சித்தம், | திருவெம்பாவைபூஜை ஆரம்பம் விநாயகாஷஷ்டி விரதம் |
| 25 | திங்கள் | 10 | ராகு 7.56 - 9.26<br>சுப 12.26 - 1.56<br>எம 10.56 -12.26<br>குளி 1.56 - 3.26 | வ.பி. ஸப்தமி மரண மு.இ 9-59, பூரட்டாதி மு.இ 9-10 அட்டமி மு.இ 9.59 முதல் | |
| 26 | செவ்வாய் | 11 | ராகு 3.27 - 4.57<br>சுப 10.57 -12.27<br>எம 09.27 -10.57<br>குளி 12.27 - 1.57 | வ.பி.வ.பி: அட்டமி மு.இ 9-38, உத்தரட்டாதி மு.இ 9-23 அமிர்தசித்தம், கரிநாள் | |
| 27 | புதன் | 12 | ராகு 12.27 - 1.57<br>சுப 4.57 - 6.27<br>எம 7.57 - 9.27<br>குளி 10.57 -12.27 | வ.பி நவமி மு.இ 8-47, ரேவதி மு.இ 9-10, மரண நவமி மு.இ 8.47வரை | |
| 28 | வியாழன் | 13 | ராகு 1.58 - 3.28<br>சுப 7.58 - 9.28<br>எம 6.28 - 7.58<br>குளி 9.28 -10.58 | வ.பி: தசமி மு.இ 7-32, அச்சுவினி மு.இ 8-32, அமிர்த்சித்தம் | |
| 29 | வெள்ளி | 14 | ராகு 10.58 -12.28<br>சுப 6.28 - 7.58<br>எம 3.28 - 4.58<br>குளி 7.58 - 9.28 | வ.பி: ஏகாதசி மா 5-55, பரணி மு.இ 7-33,சித்தம், | சுவர்க்கவாயிலேகாதசி விரதம் |
| 30 | சனி | 15 | ராகு 9.29 -10.59<br>சுப 3.29 - 4.59<br>எம 1.59 - 3.29<br>குளி 6.29 - 7.59 | வ.பி துவாதசி பி.ப 4-01, கார்த்திகை மா 6-17 அமிர்த்தம் | சனிப் பிரதோஷ விரதம் கார்த்திகை விரதம் |
| 31 | ஞாயிறு | 16 | ராகு 4.59- 6.29<br>சுப 9.29-10.59<br>எம 12.29- 1.59<br>குளி 3.29- 4.59 | திரியோதசி காலை 8.23 சதுர்தசி மரண பி.இ 6.10 ரோகினி சித்தம் மு.ப 11.19 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான (கார்த்திகை- மார்கழி) விரதங்கள்



| டிசம்பர் | கார்த்திகை | | |
|---|---|---|---|
| 01 | 15 | வெள்ளி | - பிரதோஷ விரதம் |
| 02 | 16 | சனி | - திருக்கார்த்திகை விரதம் |
| 03 | 17 | ஞாயிறு | - பூரணை விரதம்<br>சர்வாலய தீபம் |
| 06 | 20 | புதன் | - சங்கடஹரசதுர்த்தி |
| 14 | 28 | வியாழன் | - ஏகாதசி விரதம் |
| 15 | 29 | வெள்ளி | - பிரதோஷ விரதம் |
| **டிசம்பர்** | **மார்கழி** | | |
| 17 | 02 | ஞாயிறு | - அமாவாசை விரதம் |
| 22 | 07 | வெள்ளி | - சதுர்த்தி விரதம் |
| 24 | 09 | ஞாயிறு | - திருவெம்பாவைபூஜை ஆரம்பம்<br>விநாயகர் ஷஷ்டி விரதம் |
| 29 | 14 | வெள்ளி | - சுவர்க்கவாயிலேகாதசி விரதம் |
| 30 | 15 | சனி | - சனிப்பிரதோஷ விரதம்,<br>கார்த்திகை விரதம் |







நவம்பர் மாத
கேள்வி - பதில்
போட்டியில்
**வெற்றியாளர்கள்**

செல்வி. நிரோஷினி தேவராஜா



ஸ்ரீ சாரதாதேவி எங்கு பிறந்தார்?

- மதுரை
- கல்கத்தா
- பெங்களூர்

**JEYECHANDRANS**

கேள்வி பதில் போட்டியில்
கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடையை கூறி
குலுக்கல் முறையில் வெற்றிபெறும் போட்டியாளருக்கு

**JEYECHANDRANS TEXTILE**

வழங்கும் பட்டுப்புடைவை ஒன்று
பரிசாக வழங்கப்படும்.

**(1st December- 16th December)**

**Contact:**

**077 833 5552**

**Flex Publications**

Call Monday - Friday from 9a.m - 5p.m


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Get It Delivery

## To Your Door Step

**Safety Check at your home When gas delivered**




உங்கள் வசதிக்காக எமது புதிய Mobile App மூலம் உங்கள் சமையல் எரிவாயு Order மூலம் பெற்றுக் கொள்ள "WELLAWATTE GAS CENTRE" என Type செய்து பதிவிறக்கம் செய்யவும்.

# Wellawatte Gas Centre

LITRO GAS

No. 36, Hampden Lane, Colombo 06.
Hotline : 077 368 3070 | Contact : 2 367373 / 2 554648
www.wellawattegascentre.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான ராசிபலன்




### திட்டமிட்டு செயலாற்றும் மேஷ ராசி அன்பர்களே!

ஒரு கட்டுப்பாட்டிற்குள் எதையும் செய்திடவும் வாய்ப்பு ஏற்படும். சிறிய முதலீடு, எதிர்பார்ப்பு, நற்சிந்தனை இது எல்லாம் நலமே. பயணம், தகவல், அரங்கேற்றம், ஆன்மீக நிலை இதுவும் சாதகமே. ஆண், பெண் மகிழ்ச்சி, விருப்பம், அக்கம் பக்கம் ஒத்துழைப்பு உயர்வே

### உற்சாகத்துடன் முன்னேறும் ரிஷப ராசி அன்பர்களே!

பொருள் விரையம் இருக்கும் கமிஷன், பணப் பொருப்பு இவற்றில் பிரச்சினை வரும். அதிக வேலை பளு, அதிகாரிகள் நெருக்கடி, டென்சன் எதிர்பாராத செலவுகள் உண்டு. விழிப்புடன் இருக்க வேண்டும். பக்தி, தர்மம், தன்னை காக்க வேண்டும்.







### திட்டமிட்டு வளர்ச்சி காணும் மிதுனராசி அன்பர்களே!

உங்க காரிய முயற்சி அனைத்தும் எதிர்காலத்திற்கு ஒரு வித்துக்களே. தம்பதியர்களின் தாம்பத்தியம் சுகமே. பிள்ளை பாக்கியம் கிட்டும். சில முக்கிய நபர்களின் வருகை. உங்க குடும்பம். தொழிலுக்கு பயன்தரகூடியதாக இருக்கும் விளையாட்டில் விருதுகளே. விருந்து உபச்சாரமும் உண்டு. சுபச்செலவுகளே.

### வாழ்க்கை வாழ்வதற்கே என கருதும் கடகராசி அன்பர்களே!

சிக்கலான எந்த ஒரு விசயத்திற்கும் ஒரு நல்ல தீர்வுகள் அமையும். சுப விசயம் கூடி வரும். ஒருவிதமான சந்தோஷம் இருந்து வரும். பிள்ளைகள், பெற்றோர்கள் மூலம் குடும்பத் தலைவன் தலைவிக்கு பெருமைகளே. தன்னிலும் மேம்பட்டவர்களின் ஆதரவு போட்டி பந்தயங்களில் உங்களுக்கு புகழிடம், பொருமையாக எதையும் செய்து உங்க காரியத்தை சாதிப்பீர்கள்.







### துணிவே துணை என முழங்கிடும் சிம்ம ராசி அன்பர்களே!

கட்டுக் கோப்பாக இருந்து எதையும் சமாளிப்பீர்கள்.தன் ஸ்திர சொத்து அம்சம் சுபவிசயத்தில் பெரியவர்களின் ஆசி, தன் பெற்றோர்களுக்காக எதையும் செய்து வைக்கும் அமைப்பு ஏற்படும், விசயம் முதலாளி சமாச்சாரம் எல்லாம் உங்களுக்கு ஒரு முன்னேற்றத்தை தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான ராசிபலன்




**நண்பர்களை மதித்து நடக்கும் கன்னி ராசி அன்பர்களே!**

நன்மைகள் தன் மனதுக்கு விருப்பமான சம்பவங்கள் அமையும் மாதம் இது. தம்பதியர்களின் தாம்பத்தியமும் சந்தோஷமே. பல சுபச் செலவுகளை செய்வீர்கள்.தைரியம் தன்னம்பிக்கை கைக் கொண்டு எதையும் சிறப்பாக முடிப்பீர்கள். உங்களுக்கு மட்டும் அல்ல உங்களை சேர்ந்தவர்களுக்கு நன்மையே. ஸ்திர சொத்து பொன், ஆபரணம் பொருள் ஆடைகள் இதன் சேர்க்கை உண்டு.

**நல்லதையே சிந்திக்கும் துலாம் ராசி அன்பர்களே!**

உடல் ரீதியில் தொல்லைகள் இருக்கும். தொலைதூர விசயத்தில் மனசஞ்சலம் உண்டு. அற்பசுகம் படிப்பு, ஜீவனம், கூட்டு அமைப்பு, கொடுக்கல், வாங்கல் இதில் எல்லாம் பாதகமே குறிப்பாக வாகனம் எரிபொருள், மின்சாதனம் இதில் உஷார்.







**நல்லதையே நினைக்கும் விருச்சிய ராசி அன்பர்களே!**

மருத்துவ செலவுகள் இருக்கும். எதையும் ஒன்றுக்கு பல முறை யோசித்து செய்யவில்லையானால் ஏதேனும் விவகாரத்தில் மாட்டிக் கொள்ள நேரும் குடும்பம். தொழில் ரகசியங்களை காபாற்றவும் தொலைதூர விசயங்களை தள்ளி போடவும். மனைவி பிள்ளைகளினால் மனக்குறைவு வரும்.

**நேர்மை குணம் கொண்ட தனுசு ராசி அன்பர்களே!**

விட்டுக் கொடுத்து விவேமாகதான் சில விசயத்தை செய்ய முடியும். அதிக அலைச்சல், அகால உணவு உறக்கத்திற்கு இடம் உண்டு. இரவு, பகல் பாராது உழைத்து வருவாய் ஈட்ட நேரும். பிள்ளைகளினால் பிரச்சினை வந்து சீராகும். காவல் சுரங்கம் உலைக்கூடம் நெருப்பு. இரசாயன பட்டைதீட்டும் தொழில் இதில் இருப்பவர் பாதுகாப்பாக எதையும் செய்ய வேண்டும்.







**எண்ணத்தைச் செயலாக்கும் மகர ராசி அன்பர்களே!**

எதிலும் எச்சரிக்கையாக இருக்கவும். மன உளைச்சல் உண்டு. ஜாமின் பொறுப்புகளிலும் சங்கடம் வரும். சதிபதிகள் சந்தோஷத்தில் குறைபாடு இருக்கும் சிலருக்கு மாற்றம். தொழில், வீடுகளில் சன்மானம் கூட்டான காரியங்களில் பிரிவு வரும். மருத்துவ ஆலோசனை மனதுக்கு பலவீனம் தரும். பக்தி, தியானம் கொண்டு தர்மம் தக்க உபாயங்களே. மேற்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான ராசிபலன்




## மனதில் பட்டதை வெளிப்படுத்தும் கும்ப ராசி அன்பர்களே!

எதையும் ஏற்று அதில் ஜெயிக்க கூடிய ஆற்றல் அனுபவம் கூடவே ஆண்டவன் அனுக்கிரகமும் அமையும். மனரீதியில் ஆக்டிவாக செயல்படுவீர்கள். பெற்றோர்கள் விரும்பியதை பிள்ளைகள் நிறைவேற்றி வைக்கக் கூடும். படிப்பு, பதவி, பவர், பணியாட்களில் பயன் உண்டு. பெண்களினால் ஆண்களுக்கு சாதகமே. பேச்சால், செயலால் தன் செயல் திறனால் பிறரைக் கவர்வீர்கள்.

## பொறுமையின் இருப்பிடமான மீன ராசி அன்பர்களே!

கணவன், மனைவி நல்லுறுவு, பிள்ளைப்பாக்கியம் பெற்றோர் பெரியவர்களின் ஆசி பெருமை சேர்க்கும் உங்க திறமை எந்த உருவத்தில் ஆவது சாதனை, பரிசு, பாராட்டு பேட்டி அமையும் கொடுக்கல் வாங்கல். குதூகல பயணம் இருக்கும். அயல்தேசத்தின் தொடர்பால் ஆதாயங்கள் கிட்டும். ஸ்திர சொத்து பாக்கியம் உண்டு. சில கடன்கள் கட்டுவீர்கள். நீங்க விரும்பிய ஆடை, அணிகலன் அனுபவிக்க நேரும்.





## திருமண சேவை

விமலன் திருமண சேவை - 011 6477181542

மீன்மகள் திருமண சேவை - 076 6606422

57, விகாரை லேன், வெள்ளவத்தை - 076 6069104

238, அரசடி வீதி, யாழ்ப்பாணம் - 021 2227147

www.thaalee.com - 2523127

www.thirukalyanam.lk - 0777 877717

**குரும்ப சிட்டியூர் வேல்அமுதன்**
8-3-3, Metro Apartment 55th Lane, வெள்ளவத்தை.
011 236 0488

**ராதா கிருஷ்ணா திருமண சேவை**
5E, வில்லியம் சந்தி, தெஹிவளை. 011 552 2084

**மயில்வாகனம் சர்வதேச திருமண சேவை**
22/1, சுபோதாராம வீதி, தெஹிவளை. 076 657 7292

**கனகராஜன்**
19, கல்பொத்த வீதி, கொழும்பு 13.
072 324 4945, 072 524 6419

**குருக்கள் ஜோதிஷம்**
165/6, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13.
011 243 1982

**சக்தி திருமண சேவை**
30, ரமணி மாவத்தை, நீர்கொழும்பு. 031 223 2130

**HAPPY MARRIAGE SERVICE**
CG-5, Central Road, Colombo 12.
077 530 1437 / 077 677 6630

**SRI LUXMIE MARRIAGE CENTER**
289 2/1, காலி வீதி, கொழும்பு 06. 0114 527 432

## திருமண வைபவங்களுக்கான...

| | |
|---|---|
| விவாக பதிவாளர் | Ms. Chandrani - 071 312 2889 |
| மணவறை | 077 6638393 |
| வாடகை நகைகள் | Joy Glorious - 077 494 9961 |
| திருமண ஒப்பனை | Brintha - 2 593 693 / 077 633 1257 |
| ஜோதிடம் | Nalendra Institute - 077 2951368 |
| ஜோதிடம் | Kurukkal Jothisham - 077 656 7869 |
| ஜோதிடம் | J. Sharma - 258 6373 |

| | |
|---|---|
| குருக்கள் | S.S. Kurukkal - 077 8955986 |
| திருமண ஆடைகள் | Little Asia - 011 250 4470 |
| புகைப்படம் / வீடியோ | Chhaya Rabeshan - 077 768 4937 |
| மெகந்தி | Mehendi - 0777 667 727 |
| திருமண வாகனம் | Mal-Key Rent a Car - 2 365 365 |
| திருமண சைவ உணவு | Mahen's Catering - 0777 563 620 |
| திருமண சைவ உணவு | Dushi Catering - 077 743 1159 |
| திருமண பரிசுகள் | Visgha - 077 277 4776 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3000Cars

*Luxury Car for your wedding*





**Hummer H3 Limo | Chrysler 300C Limo**
**Rolls - Royce Silver Sprit | BMW 520d | Benz E Class | Hummer H3 | Chrysler 300C | Benz 200SLK**
**Vezel | Mini Cooper Crossover | Prado | Voxy | Moke**

*So many ways to get you there in style*

| Bambalapitiya | Peliyagoda | Negombo |
|---|---|---|
| 0114003000 | 0114853000 | 0114943000 |
| 0718223000 | 0710663000 | 0714113000 |

www.3000.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



No. 40, 1/1, Galle Road, Wellawatte, Colombo 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி / நீதிக் கதைகள்

-யோகா



## எளிய பக்தி

வேதம் படித்த ஒரு பாகவதர், கேட்போர் உருகும்படியாக அருமையாக ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். அவரிடம் நாவல்பழம் அளவுக்கு ஒரு சாளக்கிராமம் இருந்தது. நேபாளத்திலுள்ள கண்டகி நதியில் அந்த வகைக் கற்கள் கிடைக்கும். புனிதமான அந்தக்கற்களை விஷ்ணுவாகக் கருதி வழிபடுவார்கள். அதை ஒரு சின்ன வெற்றிலை பெட்டியில் போட்டு 'சந்தான கோபாலன்' என்று அதற்கு பெயரும் வைத்து விட்டார். அதற்கு தன்னால் இயன்ற அளவு பால், பழம், தயிர்சாதம், பாயாசம்... என நைவேத்யம் செய்வார். ஒருநாள், சுவாமிக்கு பஞ்சாமிர்த நைவேத்யம் செய்தார். அப்பொழுது தற்செயலாக அவரிடமிருந்த நாவற்பழ அளவுள்ள சாளக்கிராமம் பிரசாதத்துக்குள் விழுந்து விட்டது. பஞ்சாமிர்தத்தில் கருப்பு திராட்சைகளும் கிடந்ததால், பிரசாதம் விநியோகிக்கும் போது, அடையாளம் கண்டுபிடிக்க இயலாமல் சாளக்கிராமத்தையும் சேர்த்து யாருக்கோ கொடுத்து விட்டார். எல்லோரும் சென்றதும், சாளக்கிராமத்தை எடுத்து பெட்டியில் வைப்பதற்காக வைத்த இடத்தில் பார்த்த போது, அதைக் காணவில்லை. அதிர்ந்தவர் "கோபாலனுக்கு நம்மேல் என்ன கோபமோ? பூஜையில் ஏதாவது தவறு செய்து விட்டேனோ? ஓடிவிட்டானே!" என வருத்தத்தில் ஆழ்ந்தார். ஆனால், பிரசாதம் வாங்கிச் சென்ற ஒருவர் இரண்டு நாள் கழித்து வந்து, தனக்கு தந்த பிரசாதத்துடன் சாளக்கிராமம் இருந்ததைச் சொல்லி திருப்பிக் கொடுத்துவிட்டார். அடுத்த நாள், ஒரு இடத்தில் உபன்யாசம். இவர் பாக்குபோடும் போது, பாக்கு என நினைத்து சாளக்கிராமத்தையும் சேர்த்து வாயில் போட்டு விட்டார். அன்று, வேதம் சரளமாய் பொழிந்தது மேடையிலே. இப்படிக்கூட பேச முடியுமா!" என்று கூட்டத்திற்கு ஆச்சரியம். திடீரென வாயில் ஏதோ கடிபட, பதறிப்போய் பார்த்தார். வாயில் பகவான் கிடக்கிறான். அதை உமிழ்ந்தார். நன்றாக கழுவி, சுத்தி பூஜையெல்லாம் செய்து பெட்டியில் வைக்கப் போனார். உபன்யாசத்திற்கு வந்த ஒரு பணக்காரர் அதைக் கவனித்து விட்டார்பாகவதரிடம்வந்தவர் "சுவாமியை இப்படி வெற்றிலை பெட்டியில் போட்டு வைத்துள்ளீரே! என்னிடம் கொடுத்தால் தங்கப்பேழை செய்து அதில் வைத்தல்லவா பூஜை செய்வேன்," என்றான். பகவானைத் தேடி தங்கம் வருகிறது 'எத்தனை நாள் தான் இந்தக் கோபாலன் இந்த சின்னப் பெட்டிக்குள் சிரமப்படுவான். இன்று வாய்க்குள் வேறு போய்விட்டான்,' என்று நினைத்து பாகவதர் அவரிடமே கொடுத்து விட்டார். பணக்காரர் வீட்டுக்குப் போன சந்தான கோபாலன், தங்கப் பேழைக்குள் சிறைபட்டு விட்டான் மறுநாள் நைவேத்யம். விதம் விதமாக, அண்டா அண்டாவாக... பேழையைத் திறந்தார் பணக்காரர். கோபாலன் உள்ளே வருத்தத்தில் இருந்தான். "ஏனப்பா வருத்தப்படுகிறாய்? தங்கப் பெட்டி... வகை வகையாய் சாப்பாடு... வடையே பத்து தினிசு! உனக்கென்ன குறை," என்றார் பணக்காரர். "இங்கே வேதசப்தம் கேட்கவில்லையே! பாகவதர் வாய்க்குள் என்னை அடக்கி, எச்சிலுக்குள் ஊறப் போட்டாலும், காதால் வேதம் கேட்டேனே!" என்றான் பகவான். பார்த்தீர்களா! எளிய பக்தியையே இறைவன் விரும்புகிறான். கோயில் திரு விழாக்களில் ஆடம்பரத்தைக் குறையுங்கள். அந்தப் பணத்தை பொதுப்பணிகளுக்கு செலவளியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை துரோகம்



வேடன் ஒருவன், காட்டிற்குள் நடந்து கொண்டிருந்தான். எதிர்பாராத விதமாக ஒரு புலி வேடனைத் துரத்தியது. வேடன் மிகவும் பயந்து விட்டான். தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அருகில் இருந்த ஒரு மரதத்தின் மீது ஏறிக் கொண்டான். வேடன் ஏறிய மரத்தின் மேல் கிளையில் ஒரு கரடி உட்கார்ந்திருந்தது.

கரடியை பார்த்த வேடன் அதனிடம், "ஒரு புலி என்னைத் துரத்தி வருகிறது. இந்த ஆபத்திலிருந்து என்னை நீதான் காப்பாற்ற வேண்டும். நான் உன்னிடம் சரணடைகிறேன்." என்று கூறி சரணடைந்தான்.'

தன்னிடம் சரணடைந்த வேடனிடம் கரடி "நீ பயப்படாதே! உன்னை நான் காப்பாற்றுகிறேன்." என்று வாக்குறுதி அளித்தது.

இதற்குள் வேடனைத் துரத்தி வந்த புலி, அந்த மரத்தின் கீழ் வந்து நின்றது. புலி அந்த இடத்தைவிட்டுப் போகாமல், அங்கேயே நின்றுகொண்டிருந்தது. சிறிது நேரம் ஆயிற்று வேடனுக்கு தூக்கம் வந்தது. வேடன் கரடியின் மடியில் தலைவைத்து, தன்னை மறந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

அப்போது மரத்தின் கீழே நின்றுக்கொண்டிருந்த புலி, மரத்தில் உட்கார்ந்திருந்த கரடியிடம், "நண்பனே! நாம் இருவரும் மிருகங்கள், ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். நம் இருவருக்கும் தொடர்பு இருக்கிறது. இவனோ மனிதன், அதிலும் வேடன்... நம் இருவருக்கும் ஜென்மப் பகைவன். இவன் நம்மைக் கொல்வதையே தன் தொழிலாகக் கொண்டிருக்கிறான். இவன் நம் இனத்தைச் சேர்ந்தவன் அல்ல, நாம் வாழும் இடத்தில் வாழ்பவனும் அல்ல. இன்றைய தினம் நீ இவனைக் காப்பாற்றினாலும்- அதை மறந்து விட்டு, நாளைய தினமே இவன் உன்னைக் கொல்லுவதற்கு முயற்சி செய்வான். எனவே, நீ இந்த வேடனை பிடித்துத் தள்ளிவிடு. அதனால் நமக்கு பெரிய ஓர் ஆபத்து நீங்கும்," என்று கேட்டுக் கொண்டது.

புலி கூறியதைக் கேட்ட கரடி, "இது என்ன அநியாயம்? நான் இருக்கும் இடத்தைத் தேடி வந்து, இந்த வேடன் என்னிடம் சரணடைந்திருக்கிறான். அத்தகைய வேடனை நான் கைவிடக் கூடாது, கைவிடவும் மாட்டேன். அப்படிக் கைவிட்டால், எனக்கு இந்த உலகத்தில், 'நண்பனுக்கு துரோகம் செய்தவன்' என்ற கெட்ட பெயர் ஏற்படும். அதோடு, மறு உலகத்தில் கடுமையான நரகமும் கிடைக்கும்.

எனவே நீ சொல்வதுபோல், செய்ய மாட்டேன்."

என்று கூறியது. இந்த உரையாடலுக்கு பிறகு, தூங்கிக் கொண்டிருந்த வேடன் உறக்கம் கலைந்து கண் விழித்தான். இப்போது கரடிக்கு தூக்கம் வந்தது. அது வேடன் மடியில் தன் தலையை வைத்து தூங்க ஆரம்பித்தது. கரடி நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தது.

அப்போது மரத்தின் கீழே இருந்த புலி வேடனிடம், "முட்டாளே! 'என்னிடமிருந்து தப்ப வேண்டும்' என்று நீ போயும் போயும் ஒரு கரடியிடம் சரணடைந்திருக்கிறாயே! கரடி என்ன உன் மனித இனத்தைச் சேர்ந்ததா? அது உன்னுடைய நண்பனா? கரடி உன்னுடைய பகைவன் என்பதை நீ சரியாகப் புரிந்துகொள். நான் எப்போது இந்த மரத்தின் கீழிருந்து போவேன்' என்று, இந்தக் கரடி காத்துக் கொண்டிருக்கிறது! நான் இங்கிருந்து சென்றதும், உடனே கரடி உன்னைக் கொன்றுவிடும்! கரடியின் உறக்கம் கலைவதற்கு முன்பு, அதைப்பிடித்து நீ என்னிடம் தள்ளிவிடு. நான் உனக்கு பதிலாக அதை தின்றுவிட்டு, இங்கிருந்து சென்று விடுகிறேன். அதனால் நம் இருவருக்கும் நன்மை ஏற்படும்," என்று கூறியது.

புலி கூறியதை கேட்ட வேடன் மயங்கினான். அவனுக்கு கரடியிடம் இருந்த நம்பிக்கை போய்விட்டது. எனவே அவன் கரடியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்திலிருந்து தள்ளிவிட்டான்! கீழே விழும்போதே கரடிக்கு தூக்கம் கலைந்தது. அதனால் அது தன் இயல்பு காரணமாக ஒரு கிளையை பிடித்து, மீண்டும் மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டது. இதை வேடன் பார்த்தான். அப்போது அவன் 'கரடிக்கு நான் செய்த துரோகம் இப்போது தெரிந்து விட்டது. அதனால் அது இப்போது என்னை கொன்றுவிடப் போகிறது!' என்று நினைத்து பயந்து நடுங்கினான்.

வேடன் பயப்படுவதை கரடி புரிந்து கொண்டது. எனவே அது வேடனிடம், "நண்பனே! நீ பயப்படாதே... 'நீ எனக்கு துரோகம் செய்தாய்,' என்று நான் நினைக்கவே மாட்டேன். நான் உன்னை காப்பாற்றுவதாக வாக்கு கொடுத்திருக்கிறேன். அதை நிச்சயம் காப்பாற்றுவேன். நான் வாக்கு தவற மாட்டேன்" என்று கூறியது. அப்போது புலி கரடியிடம், "நண்பனே! நான் கூறியது போலவே நடந்ததை நீயே பார்த்தாய் அல்லவா? 'இந்த வேடன் நன்றி இல்லாதவன், செய்நன்றி கொன்றவன்-நண்பனுக்குத் துரோகம் செய்பவன் என்று, இப்போதாவது நீ தெரிந்துகொண்டாயா? இனியும் இவன் மீது நீ இரக்கம் காட்டாமல், இவனை என்னிடம் தள்ளிவிடு," என்றது. அதற்குக் கரடி, "தீய இயல்பு உடையவர்கள், மற்றவர்களுக்குத் தீமை செய்தாலும், அறிவுள்ள ஒருவன், தீமை செய்தவர்களை பகைத்துக் கொள்வானா? நான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது தான் எனக்கு பெரிதே தவிர, என் உயிர் எனக்கு பெரிதல்ல. உலகில் பிறவி எடுத்தவர்களுக்கு அணிகலனாக இருப்பது சத்தியம் மட்டுமே!" என்று பதில் கூறியது. சொன்னபடி கரடி வேடனைக் காப்பாற்றியது நமக்கு நன்மை செய்தவர்களிடம், நாம் எப்படி அன்பு பாராட்டி அவர்களுக்கு உதவி செய்கிறோமோ, அது போலவே நமக்குத் தீமை செய்தவர்களுக்கும் நாம் உதவி செய்ய வேண்டும். நமக்கு உதவி செய்தவர்களுக்கு நாம் உதவி செய்வதில் ஆச்சரியம் எதுவுமில்லை. நமக்கு தீமை செய்தவர்களுக்கு உதவி செய்வது தான் சிறப்புக்கு உரியது.



# மக்கள் நலப் பணிகள்

அந்த நாட்டு அரசன் தன் மக்கள் நலப் பணிகளைச் செயல்படுத்த மூன்று அதிகாரிகளை நியமித்து, அவர்களுக்கு வானளாவிய அதிகாரங்களையும் கொடுத்தான். ஒரு அமைச்சருக்குச் சமமான ஊதியத்தையும் அந்தஸ்தையும் வழங்கினான். மக்கள் நலப் பணிகளில் ஊழல் நடப்பதாகப் புகார்கள் குவிந்தன. அதிகாரிகளைக் கூப்பிட்டு விசாரித்தான் மன்னன். "ஐயோ நாங்கள் உத்தமர்கள் மன்னா! மக்களுக்காகவே தியாக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்று சிந்து பாடினார்கள் அதிகாரிகள். "செய்யும் ஊழலை மிகவும் திறமையாகச் செய்தி ருக்கிறார்கள். இந்த மூவருமே ஊழல் பெருச்சாளிகளா அல்லது விதிவிலக்குகள் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய வேண்டும்." என்றும் நினைத்தான் மன்னன். அவர்களை அனுப்பி விட்டு யோசனையில் ஆழ்ந்தான். இரண்டு நாட்கள் கழித்து அதிகாரிகள் மீண்டும் அழைக்கப்பட்டார்கள். "மக்கள் பணியில் இருக்கும் உங்களுக்குக் களப்பயிற்சி தரப் போகிறேன். உங்களிடம் ஒரு பெரிய சாக்கு தரப்படும். அதை எடுத்துக்கொண்டு நம் நாட்டின் எல்லைகளில் உள்ள காட்டுப் பகுதிகளுக்குச் செல்லுங்கள். உங்களிடம் கொடுக்கப்பட்டிருக்கும் சாக்குகளை காய், கனி, கிழங்குகளால் நிரப்ப வேண்டும். அப்படி நீங்கள் நிரப்பும் பொருட்களை வைத்துக் கொண்டு ஒரு மனிதன் இரண்டு வாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட வேண்டும். நீங்கள் கொண்டு வரும் சாக்குகளை நாங்கள் யாரும் பரிசோதிக்க மாட்டோம். அதை அப்படியே ஒரு ஏழையிடம் கொடுத்து விடுவோம். அவன் அதை உண்டு உங்களை வாழ்த்த வேண்டும்... இந்தப் பயிற்சி திட்டம் வெற்றி பெற்றால், மக்கள் நலப் பணியாளர்களை இந்தப் பணியில் அமர்த்தி மக்களின் பசி போக்கலாம்.."

மறுநாள் மூவரும் வெவ்வேறு காடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். காடுகளில் காய், கனி கிழங்குகளுக்குப் பஞ்சமில்லைதான். ஆனால், அவற்றை அலைந்து திரிந்து சேகரிக்க வேண்டியிருந்தது. மேலும் அதை சேகரிக்கும் வரை அதிகாரிகளுக்கு காட்டில் கிடைக்கும் காய் கனிகள் தான் உணவு. மூன்று அதிகாரிகளும் அரண்மனை போன்ற வீடுகளில் சொகுசாக வாழ்ந்து பழகியவர்கள். அதனால் அவர்களுக்கு அந்த வேலை மிகவும் கடினமாக இருந்தது. முதல் அதிகாரி நல்ல பொருட்களைச் சேகரித்தார். நாம் துன்ப ப்பட்டாலும் இந்தத் திட்டம் வெற்றி பெற்றால் மக்கள் பசியாறுவார்களே என்ற நினைப்பே அவருக்கு உந்து சக்தியாக இருந்தது. சாக்குப்பையை நிரப்ப அவருக்கு மூன்று, நான்கு நாட்கள் தேவைப்பட்டது. ஆனால், உள்ளே இருந்தவை எல்லாம் தரமான பொருட்கள். இரண்டாமவர் கொஞ்சம் குறுக்கு வழியில் யோசித்தார்.

பையை யாரும் சோதிக்கமாட்டார்கள். என்று மன்னரே சொல்லி விட்டார். சோதித்தாலும் மேலோட்டமாகத் தான் பார்ப்பார்கள். மேலே நல்ல தரமான பொருட்களை வைத்துவிடலாம். கீழே அழுகிய பழங்கள், கொட்டைகள், என்று வைத்துவிட்டால் யாருக்கு என்ன தெரிய ப்போகிறது? அப்படியே செய்தார் அந்த மகானுபாவர். அவர் ஒரே நாளில் பணியை முடித்துவிட்டார். மூன்றாம் அதிகாரி அந்த அளவிற்குக்கூடச் சிரமப்படவில்லை. பைக்குள் என்ன இருக்கிறது என்பதை யார் பார்க்கப் போகிறார்கள் என்ற நினைப்பில் காய்ந்த இலைகளையும் சருகுகளையும் போட்டு பையை நிரப்பி அரண்மனையில் சேர்த்துவிட்டார். ஒரு நாழிகைப் பொழுதில் வேலையை முடித் துவிட்டுத் தன் மாளிகைக்குச் சென்று சுகமாக உண்டு உறங்கிவிட்டார். மன்னன் மூன்று அதிகாரிகளையும் அழைத்தான். அவர்கள் முன்னிலையில் தன் காவலர்களுக்குக் கட்டளையிட்டான். "இந்த மூவரையம் தனித் தனியாகப் பாதாளச் சிறையில் அடையுங்கள். அவரவருடைய சாக்குப் பைகளை அவரவரிடம் வைத்துவிடுங்கள். சிறைத்தண்டனை இரண்டு வாரங்கள் தொடரும். அந்த இரண்டு வாரங்களில் அவர்களுக்கு வேறு எந்த உணவும் வழங்க வேண்டாம். அவர்கள் சேகரித்த காய் கனி கிழங்கு வகைகள் தான் அவர்களுக்கு உணவு. மூன்றாம் அதிகாரியால் காய்ந்த இலைகளையும் சருகுகளையும் உண்டு உயிர் வாழ முடியவில்லை. ஐந்தே நாட்களில் அவர் பசி தாங்காமல் மாண்டு விட்டார். இரண்டாமவரோ அழுகிய கனிகளையும் நல்ல கனிகளையும் உண்டு எப்படியோ இரண்டு வாரங்கள் உயிர் வாழ்ந்துவிட்டார். ஆனால், அவர் உடநலம் கெட்டுவிட்டது. மன்னன் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டான் முதலாம் அதிகாரி இரண்டு வாரங்களையும் தனிமைச்சிறையில் மகிழ்ச்சியாகக் கழித்து விட்டு வெளியே வந்தார். தான் சேகரிந்த தரமான காய் கனி கிழங்குகளை உண்டு இன்னும் அதிகமான தெளிவுடன் வெளியே வந்தார். மன்னன் அவனுக்குப் பல பரிசுகளைக் கொடுத்து அவனை முதலமைச்சர் ஆக்கி கொண்டான். இந்தக் கதையில் உள்ள வாழ் வியல் தத்துவத்தை நச்சென்று விளக்குகிறது

மகாபாரதத்தில் வரும் ஒரு ஸ்லோகம். அதன் உட்பொருள் இதுதான். ஒரு இடத்தில் ஆயிரம் பசுக்கள் இருக்கின்றன. தன் தாயைத் தேடி வரும் ஒரு கன்று அந்த ஆயிரம் பசுக்களில் தன் தாயைச் சில நொடிகளில் கண்டுபிடித்து அதனிடம் போய்ச் சேர்ந்து விடுகிறது. அதேபோல், ஒருவன் செய்யும் வினையின் பயனானது அவன் எங்கிருந்தாலும் அவனைச் சென்றடைந்துவிடும்." வினையை விதை த்துவிட்டு அறுவடைக்காலத்தில் சாமர் த்தியமாக வெளியூர் சென்று விட்டாலும் வினையிடமிருந்து தப்பமுடியாது. வினையை விதைத்தால் வினையை அறுவடை செய்தேயாக வேண்டும். உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்தேயாக வேண்டும். நாம் அனைவரும் நன்மை செய்கிறோமா, தீமை செய்கிறோமா என்று இறைவன் கண்காணிப்புக் கேமரா வைத்துக் கொண்டு பார்பதில்லை. நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் என்று நமக்குப் பூரண சுதந்திரத்தைக் கொடுத்துவிட்டான். ஆனால் உங்கள் செயலின் பலனை நீங்கள்தான் அனுபவிக்க வேண்டும் என்ற நியதியையும் அழுத்தமாக வைத்துவிட்டான். நீங்கள் உங்கள் பையில் நல்ல பழக்கங்களைப் போடு கிறீர்களா... இல்லை. சருகுகளையும் அழுகிய பழங்களையும் போடுகிறீர்களா என்று யாருமே கண்காணிப்பதில்லை.. ஆனால் நீங்கள் சேகரித்ததை நீங்கள்தான் சாப்பிட வேண்டும் என்பதை மட்டும் மறந்துவிடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராவணன் பிறந்த கதை

கோதாவரி நதி கரையோரம் சில முனிவர்கள், சிவன், வில்வம் பற்றி பேசிக்கொண்டிருந்தனர். அங்கிருந்த நான்கு குரங்குகள் முனிவர்கள் பேச்சைக் கேட்டன. அவற்றிற்கு சிவன் மீது பக்தி ஏற்பட்டது. அவை வில்வ இலைகளைப் பறித்துக்கொண்டு அருகே இருந்த சிவாலயத்திற்கு சென்றன. கோவில் உட்புறமாய் தாழிடப்பட்டிருந்தது. உள்ளே புலத்திய முனிவர் சிவனுக்கு பூஜை செய்துகொண்டிருந்தார். இதை அறியாத குரங்குகள் கதவுகளை பெயர்த்து நகர்த்துவிட்டு உள்ளே சென்றன. புலத்தியருக்கு குரங்குகளின் செயல் கோபத்தை ஏற்படுத்தியது.

"என்னுடைய பூஜைக்கு இடையூறு செய்த நீங்கள் நால்வரும் அழிந்து போவீர்கள்," என சாபமிட்டார்.

குரங்குகள் அவரிடம், "முனிவரே... நாங்கள் சிவனை பூஜிக்கவே வந்தோம். நீங்கள் உள்ளே இருப்பது எங்களுக்கு தெரியாது. அறியாமல் செய்த தவறுக்கு, எங்களிடம் விளக்கம் கேட்காமலே, தண்டனை தந்த நீங்கள் அடுத்த பிறவியில் உங்கள் குலத்தோடு எங்களால் மடிவீர்கள்," என சாபமிட்டு விட்டு இறந்து விட்டன.

குரங்குகளின் சாபத்தால், புலத்தியர் அடுத்த பிறவியில் ராவணனாகப் பிறந்தார். புலத்திய முனிவரின் சாபத்தால் நான்கு குரங்குகளும் வாலி, சுக்ரீவன், அனுமன், அங்கதன் எனப் பிறந்தனர். அவர்கள் ராமனுக்கு உதவி புரிந்தனர். ராணவனின் வம்சம் அழிந்தது.

தினமும் காலையில் கடற்கரையில் நடைப்பயிற்சி செய்த ஒருவன், "கடவுளே, என் வாழ்வின் இறுதிவரை நீ என்னுடன் இருக்க வேண்டும்", என பிராத்திப்பான். சில நாட்களுக்குப் பின் தனது பிரார்த்தனை கடவுளைச் சென்றடைந்திருக்குமா? என்று சந்தேகித்தான்.

ஒருநாள் அவனது கனவில் தோன்றிய கடவுள், தினமும் நீ நடக்கும்பொழுது உன் காலடித்தடம் அருகில் எனது காலடித்தடமும் தெரியும். அதைக்கொண்டு நான் உன்னுடன் இருப்பதை புரிந்து கொள்," என்றார். அடுத்த நாளில் இருந்து அதே போல் நிகழ்ந்தது. ஒருமுறை அவனுக்கு தொழிலில் நஷ்டம் ஏற்பட்டது. சொந்தங்கள், நண்பர்கள் பிரிந்து விட்டனர். ஆயினும் கலங்காமல் தொழிலை நடத்தினான். ஒருநாள் அவனது காலடித் தடங்கள் மட்டுமே மண்ணில் பதிந்திருந்தன. இதுகண்டு வருந்திய அவன் "கடவுளே! என் சொந்தபந்தங்கள் தான் பிரிந்தனர் என்றால், நீயுமா பிரிந்துவிட்டாய்? எனக் கதறினான். அவனது கனவில் தோன்றிய கடவுள், 'நீ இன்று பார்த்தது என் கால் தடத்தை தான். நஷ்டத்திலும் கலங்காமல் தொழிலைத் தொடர்வதைப் பார்த்து, உன்னைத் தோளில் சுமந்து கொண்டு நடந்தேன்," என்றார்.

நம்பியவருடன் கடவுள் உடன் வருவார். அவருக்கு துன்பம் வந்தால் தோளிலேயே சுமப்பார்.

# ஆண்டவன் சோதிப்பான் ஆனா.. கைவிடமாட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## flex அருள் தகவல்கள்




செல்வி. நிரோஷினி தேவராஜா
80/11, சதிஸ்வர மாவத்தை, கல்கிஸ்சை




செல்வி. ராஜேந்திரன் வினோஜா
85/15, பீட்டர்ஸன் ஒழுங்கை, வெள்ளவத்தை




செல்வி. P மிர்துளா
37/2, முதலிந்து ஜோன் றொட்ரிகோ மாவத்தை, கொழும்பு 15

## நவம்பர் மாத கேள்வி -பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

Flex Group நிர்வாக இயக்குனர்
திரு P.விஜய் அவர்களால்
வெற்றி பெற்றவர்களுக்கு
பரிசில்கள் வழங்கப்பட்டது

flex அருள்






## நவம்பர் மாத கேள்வி பதில் போட்டி

Flex Group நிர்வாக இயக்குனர்
திரு P.விஜய் மற்றும்
Flex அருள் ஆசிரியர்
திரு கே. யோகேந்திரன்
ஆகியோரால்
வெற்றிபெற்றவர் குலுக்கல்
முறையில்
தெரிவு செய்யப்படுகிறார்கள்

**Flex** அருள் **JAYECHANDRANS** கேள்வி - பதில் போட்டி தொலைபேசி மூலம் கேள்விக்கான விடையை கூறி அல்லது முகப்புத்தகத்தில் பதிவு செய்து வெற்றி பெறுங்கள்.

**ஜனவரி மாதத்திற்கான** விளம்பரங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது

***Flex Publications***
**0777 555 026**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை வந்த இதழ்கள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**flex அருள்**

சந்தா செலுத்துங்கள் அருள் இதழ்
உங்கள் முகவரிக்கே வந்துவிடும்

| காலம் | இலங்கை | அவுஸ்திரேலியா | இலண்டன் | ஐரோப்பிய நாடுகள் | கனடா |
|---|---|---|---|---|---|
| 6 மாதங்கள் | ரூபா 550/= | இலங்கை ரூபா 3500/= AUSTRALIAN DOLLARS AUD 30 | இலங்கை ரூபா 3500/= UK POUND 18 | இலங்கை ரூபா 3000/= EURO 18 | இலங்கை ரூபா 3500/= CANADIAN DOLLARS 31 |
| 1 வருடம் | ரூபா 1100/= | இலங்கை ரூபா 7000/= AUSTRALIAN DOLLARS AUD 60 | இலங்கை ரூபா 7000/= UK POUND 36 | இலங்கை ரூபா 6000/= EURO 36 | இலங்கை ரூபா 7000/= CANADIAN DOLLARS 62 |

**More Details:** P. Vijay - Director,
Flex Graphic, 04, IBC Road, Wellawatte, Colombo 06, Sri Lanka.
**Tel: 0094 777 555 026 / Email: flexvijay@sltnet.lk**

## கிடைக்கும் இடங்கள்

**ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்**
123, காலி வீதி, கொழும்பு 04. 0773002238

**கந்தையா அன் கம்பனி**
357, காலி வீதி, கொழும்பு 04. 2590346
(அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் அருகில்)

**ஸ்ரீ மயூராபதி கோவில்**
17A, மயூரா பிளேஸ், கொழும்பு 05. 2500840

**ஸ்ரீ ஐஸ்வர்யலக்ஸ்மி திருக்கோவில்**
ரொக்ஸி கார்டன், வெள்ளவத்தை. 2360525

**ஸ்ரீ வெங்கடேஸ்வரர் விஷ்ணு கோவில்**
100, கோவில் வீதி, கொழும்பு 15. 0771739094

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
காலி வீதி, வெள்ளவத்தை 4515775

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
202, செட்டியார் தெரு, கொழும்பு 11. 2422321

**World Communication**
298, காலி வீதி, வெள்ளவத்தை. 2504236

**ஸ்ரீ வெங்கடேஸ்வரர் விஷ்ணு கோவில்**
தெஹிவளை

**Flex** அருள் இதழினை விற்பனை செய்யும்
விற்பனை விநியோகஸ்தர்களுக்கு
**மனப்பூர்வமான நன்றிகள்!**

**Joy Glorious**
NO, 199, காலி வீதி, வெள்ளவத்தை. 0774949961

**Areena**
116A, காலி வீதி, வெள்ளவத்தை. 2058033

**Windsor Bookshop**
372, காலி வீதி, வெள்ளவத்தை. 2589081

**Amma Food City**
331, செட்டியார் தெரு, கொழும்பு 11. 0777410472

**Maha Net**
206/B, காலி வீதி, வெள்ளவத்தை. 0773375374

**Shankar Book Shop**
240, காலி வீதி, வெள்ளவத்தை. 2559251

**Ahulakers**
253, காலி வீதி, வெள்ளவத்தை. 2362742

**Chandra Tranding**
405, காலி வீதி, வெள்ளவத்தை 011 236 4190

**Flex Publications**
4, IBC Road, வெள்ளவத்தை. 0777555026

**ஆஞ்சநேயர் கோவில்**
தெஹிவளை- 0768 599 253

அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
131இ கியூ வீதி, கொழும்பு 02. 0778947830

**இவ் இதழினை விற்பதற்கான விற்பனை விநியோகஸ்தர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளவும். Tel: 0777 614 186**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Appolo Optician



## விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம்...

இலவசக்கணனிமய கண்பரிசோதனை மூலம் உங்கள் கண்களைப்பரிசோதித்து நீங்கள் விரும்பிய வகையிலான நேர்த்தியான, வண்ணமயமான மூக்குக்கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்வது மட்டுமின்றி இலவசப் பின்னனிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.







**Appolo Optician**

No. 317 B, Galle Road, Wellawatte, Colombo-06, Sri Lanka. Tel: 011 2363 609, 011 451 6609
facebook.com/appoloopticals

**Appolo Opticals**

No. 297, George R.De silva Mawatha, Kotahena, Colombo-13, Sri Lanka. Tel/Fax: 011 4610 459
E-mail: appolo.opto@yahoo.com | www.appoloopticlan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






- Hair Therapy
- Hair Cutting
- Bridal Dressing
- Pedi Cure
- Meni Cure
- Facial
- Eyebrow Threading



# Kutz n Glitz
BEAUTY CARE

**MADU**
**Beautician**

kutzngliz **Opening Time: 8.30 am - 9.00 pm**

No. 73B, Manning Place, Wellawatte, Colombo - 06

**077 736 3522 / 077 861 6546 / 077 44 777 82**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கவேண்டிய
# ஸ்ரீமத் பாகவதம்

288 வண்ணப்படங்கள், 18000 ஸ்லோகங்கள், 12 காண்டங்கள், 18 புத்தகங்களாக
"ஸ்ரீமத்பாகவதம்" புராணங்களுள் மகுடம் போன்றது.

வேதங்கள் கற்பக விருகக்ஷமென்றால் அதில் பழுத்த பழத்தின் ரசம் ஸ்ரீமத் பாகவதம், பாவங்களையும், மரணமெனும் அச்சத்தையும் போக்கி பகவானிடத்து கொண்டுசெல்லும் பக்தியை ஞானவைராக்கியத்துடன் வளர்க்கும் ஸ்ரீமத் பாகவதம். கடவுள் பற்றிய நூல்கள் பல இருப்பினும் கடவுளால் நேரடியாக மொழிந்தருளப்பட்டது பகவத்கீதை. இப் பொக்கிஷங்கள் உலகெங்கும் கிருஷ்ணபக்தியை பரப்புவதை நோக்காக கொண்டு வெற்றி கண்ட ஸ்ரீல பிரபுபாதாவின் மொழிபெயர்ப்பு பொருளுரையுடன் எழுதப்பட்டுள்ளது. இப் புத்தகங்கள் பக்திவேதாந்த நூல் வெளியீட்டு மையத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

உலகெங்கும் பல பல்கலைக்கழகங்களில் பாடமாக்கப்பட்ட இப் பாகவதம் தற்போது தமிழிலும் இலங்கையில் கிடைக்கப் பெற்றுள்ளது. படைத்தல், காத்தல், அழித்தல் உட்பட பல உயர் விஞ்ஞான அறிவை அதிகாரபூர்வமாக கொண்டது. இந் நூல்களை வாங்கி படித்து உங்கள் வாழ்கையை பயனுடையதாக செய்யுங்கள். இவ் அரும் பெரும் பொக்கிஷத்தை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.






## SRI SRI RADHA KRISHNA TEMPLE
INTERNATIONAL SOCIETY FOR KRISHNA CONSCIOUSNESS
Founder Acharya His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada



No.188, New Chetty Street, Colombo 13, Sri Lanka. Tel : 2433325
Fax : 2471099 Email : iskcon@slt.lk www.iskcon.lk



# கோகுலம்



Founder Acharya:
His Divine Grace
A.C. Bhaktivedanta Swami Prabhupada

வத்தளை, மாபோல, இல. 607A, நீர்கொழும்பு வீதியில் இயங்கும் பக்திவேதாந்த சிறுவர் இல்லம் "கோகுலம்" சிறுவர்களுக்கு அன்பும் அரவணைப்பும் நல்வாழ்வும் அளிக்கும் கருணை இல்லமாக இயங்கி வருகின்றது. இவர்களுக்கு சிறந்த கல்வியையும், நற்பழக்க வழக்கங்களையும் கற்பிக்கக்கூடிய வகையில் இந்த இல்லத்துடன் இணைந்த பாடசாலையும் இங்கு உண்டு. இவர்களின் நல்வாழ்வுக்கான சேவையில் தாங்களும் இணைந்து கொண்டு தங்களால் இயன்ற உதவிகளை வழங்கி இறைவன் அருளைப் பெற வேண்டுகின்றோம்.

Help These Children For their better Future!

தற்போதைய சூழ்நிலையில் அவர்களைப் பராமரிக்க ஒரு நாளைக்கு ரூ. 35,000/- செலவாகின்றது.

## கருணை இல்லமாக இயங்கும்.
## பக்திவேதாந்த சிறுவர் இல்லம்




www.gokulam.com

தங்களின் அல்லது தங்கள் பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்களின் திருமண நாள், உறவினர்களின் ஞாபகார்த்தம் போன்ற எந்த தினங்களிலும் நன்கொடைகளை வழங்கி இச் சிறார்களுக்கு உதவலாம்.

BHAKTIVEDANTA CHILDREN'S HOME GOKULAM No. 607A, Negombo Road, Mabola, Wattala.
Tel - Office : 011 2433325 Home : 011 2948398


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரே கிருஷ்ணா

கொழும்பு புதுச்செட்டித் தெருவில்,

# "ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்"

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"



இலங்கை தலைநகரில் முதன் முதலாக அமைக்கப்படும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத் திருப்பணிகள் அரைவாசி அளவில் நிறைவேறிய நிலையில் தற்சமயம் 134 அடி உயரமான ஸ்தூபி (மூலஸ்தானத்திற்கு மேலே) அமைக்கப்பட்டு வருகிறது.

எல்லோர் இதயத்திலும் பரமாத்மாவாக வீற்றிருக்கும் பரம புருஷர் பகவான் கிருஷ்ணருக்கான இவ் ஆலயத் திருப்பணியில் ஒவ்வொரு வரும் பங்கு கொண்டு பகவான் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.



மூலஸ்தானத்தில் எழுந்தருள இருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண மூர்த்திகள் இந்தியாவில் திருப்பதி - திருமலை தேவஸ்தானத்தில் வார்க்கப்பட்டு 1982ம் ஆண்டு இலங்கைக்கு வந்து 1990ல் ராதா திருக் கல்யாணம் நிகழ்த்தப்பட்டு ராதா கிருஷ்ண ஆலயத்தில் அருள் பாலித்து வருகின்றனர். அவர்களுக்காக அமைக்கப்படும் ஆலயம் பக்தர்கள் அனைவருக்கும் விரைவில் பூரிப்பை தரக்கூடியதாக அமைய எல்லோருடைய ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம்.











# SRI SRI RADHA KRISHNA TEMPLE

## INTERNATIONAL SOCIETY FOR KRISHNA CONSCIOUSNESS

Founder Acharya His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada

ஹட்டன் நெஷனல் வங்கியில் அல்லது கொமர்ஷல் வங்கியில் பணத்தை வைப்புச்செய்யலாம்.

Commercial Bank, Kotahena
A/C Name : ISKCON Temple Fund
A/C No. : 1120017042

Hatton National Bank, Kothena
A/C Name : ISKCON
A/C No : 207010000891

No.188, New Chetty Street, Colombo 13, Sri Lanka.
Tel : 2433325 Fax : 2471099 Email : iskcon@slt.lk www.iskcon.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே




No,199, Galle Road, Wellawatte. Tel: 0112 364 643
**Mob: 077 494 9961** E-mail: joyglorious@gmail.com

Published by Flex Publications, 4, IBC Road, Wellawatte. Tel: 0777-614-186

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org